# ஈசாவாஸ்ய உபநிஷத்

ஒரு பரிச்சயம்

தொகுத்தவர்

**ந. சுப்ரமணியன்**

**சுக்ல யஜுர்வேத எஜுகேஷனல் டிரஸ்ட்**

சென்னை

# Isavasya Upanishad ஈசாவாஸ்ய உபநிஷத்

## Contents பொருளடக்கம்

Page - பக்கம்


1. Introduction - முன்னுரை ........................................ 3
2. Overview of Isavasya Upanishad - கண்ணோட்டம்..........................10
3. Santipatam - சாந்தி பாடம்..........................................................12
4. Mantiram 1 - மந்திரம் 1.........................................................17
5. Mantiram 2 - மந்திரம் 2........................................................21
6. Mantiram 3 - மந்திரம் 3........................................................23
7. Mantiram 4 - மந்திரம் 4.........................................................25
8. Mantiram 5 - மந்திரம் 5........................................................28
9. Mantiram 6 - மந்திரம் 6....................................................... 31
10. Mantiram 7 - மந்திரம் 7.........................................................33
11. Mantiram 8 - மந்திரம் 8........................................................35
12. Mantiram 9 - மந்திரம் 9........................................................40
13. Mantiram 10 - மந்திரம் 10.....................................................42
14. Mantiram 11 - மந்திரம் 11.....................................................43
15. Mantiram 12 - மந்திரம் 12.....................................................45
16. Mantiram 13 - மந்திரம் 13.....................................................47
17. Mantiram 14 - மந்திரம் 14.....................................................48
18. Mantiram 15 - மந்திரம் 15.....................................................50
19. Mantiram 16 - மந்திரம் 16.....................................................53
20. Mantiram 17 - மந்திரம் 17.....................................................54
21. Mantiram 18 - மந்திரம் 18.....................................................55
22. Conclusion - முடிவுரை.........................................................57

# ஈசாவாஸ்ய உபநிஷத்

## முன்னுரை

வேதங்கள், நமது நாடு உலகத்திற்கு அளித்த அரிய பொக்கிஷங்களில் தலையாயது. அவை கடவுளைப் பற்றி தோத்திரம் செய்வது, யாகங்கள் செய்வது, நலமாக வாழும் வழிகளை விவரிப்பது, போன்ற முக்யமான விஷயங்களை நமக்கு தெறிவிக்கின்றன. உபநிஷத் என்பது வேதத்தின் கடைசியில் வரும் பகுதி. இதில் ஆத்மா என்றால் என்ன, அதை அறிவது எப்படி, இந்த உலகம் எப்படித் தோன்றியது, இது தோன்றியதற்கு காரணம் எது, என்ற பல விதமான முக்யமான விஷயங்களைப் பற்றி விவாதிக்கிறது.

உபநிஷத் என்றால் பொதுவாக ப்ரம்மத்தைப் பற்றிய அறிவு என்று கூறலாம். அந்த அறிவு பரம்பரை பரம்பரையாக மிகச் சிறந்த ஞானிகளாகிய ரிஷிகளால் விவாதிக்கப் பட்டு முடிவான கூற்றாக தெளிவு படுத்தப்பட்டுள்ளது. "எவர்கள் இதை வியாக்கியானம் செய்தார்களோ, அந்த ஞானிகளிடமிருந்து இது எங்களால் கேட்கப் பட்டது" என்று ஈசாவாஸ்ய உபநிஷத்திலும் சாந்தோக்ய உபநிஷத்திலும் கூறப் படுகிறது. எனவே இது காலத்தினால் உறுதி செய்யப் பட்டது. (விஞ்ஞானத்தின் தியரிகளைப் போல காலத்தால் மாறுபாடு அடைவதில்லை).

முண்டக உபநிஷத்தில் பெரிய யாகசாலையை உடைய சௌனகர் அங்கிரஸர் என்ற ரிஷியை அணுகி முறைப் படி வணங்கி எதை அறிவதனால் எல்லாவற்ரையும் அறிந்தது ஆகும் என்று கேட்கிறார். அதற்கு அங்கிரஸ் முனிவர் இரண்டு விதமான அறிவு அறியத் தக்கது என்று வேதத்தை அறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஒன்று பரா வித்யா இன்னொன்று அபரா வித்யா. எதனால் அழிவற்ற பரம்பொருளான ப்ரம்மம் அறியப் படுகிறதோ அது பரா வித்யா, மற்றவை எல்லாம் அபரா வித்யா. அவரது கூற்றின் படி நாம் படிக்கும் எல்லா வகையான கல்வியுமே அபரா வித்தையில் சேரும். அவர் இன்னும் ஒரு படி மேலே போய் ப்ரம்மத்தைப் பற்றிய அறிவைத் தராத வேதமும், வேதத்தின் அங்கங்களான சிக்ஷா, ஆயுர்வேதம், இலக்கணம், நிருக்தம், ஜ்யோதிடம் முதலியவைகளுமே அபரா வித்யா என்று கூறுகிறார்.

ப்ரம்மனைப் பற்றிக் கூறும் பொழுது அந்த ப்ரம்மன் ஞானேந்த்ரியங்களால் பார்க்கப் படாதது, கர்மேந்த்ரியங்களால் க்ரஹிக்கப் படாதது, எப்பொழுதும் உள்ளது, அனைத்துமாக தோற்றமளிப்பது, அனைத்தயும் வ்யாபிப்பது, உலகத்தின் மூலப்பொருள் அதுவே. இப்படிபட்ட ப்ரம்மனை ஞானிகள் எங்கும் காண்கின்றனர். எவ்விதம் சிலந்தி வலையை உற்பத்தி செய்கிறதோ, தனக்குள் எடுத்தும் கொள்கிறதோ, அவ்விதம் அழியாத ப்ரம்மனிடமிருந்து இவ்வுலகம் தோன்றுகிறது என்று பலவாறு விவரிக்கப் படுகிறது.

இப்பொழுது இன்றைய விஞ்ஞான அறிவின் முதிர்ச்சியைப் பற்றி சிறிது தெரிந்து கொள்வோம். விகி பீடியா (www.wikipedia.org) என்ற வலையில் தேடினால் அநேக விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

முதலாவதாக இந்த ப்ரபஞ்சம் (universe) எப்பொழுது, எப்படி, எதனால், உருவாயிற்று என்று தேடினால் கிடைக்கும் விடை Big bang theory அதாவது பெரும் வெடிச் சிதறல் என்பது. அந்த தத்துவத்தின் படி இந்த ப்ரபஞ்சம் சுமாராக 1379, கோடி வருஷங்களுக்கு முன்னால் தோன்றியிருக்கும், அது தோன்றுவதற்கு முன்னால், ஒரு அளவிட முடியாத, பெரிய, அடர்ந்த, ஒரே வஸ்துவால் ஆன (homogeneous matter) பெரும் சக்தி வாய்ந்த, கருமை நிற கோளமாக இருந்தது. அது திடீரென்று வெடித்து சிதறி பல கோள்களின் கூட்டங்களாக ஆயிற்று. இவை ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிரிந்து சென்று கொண்டிருக்கின்றன. இபபொழுதும் கூட ப்ரபஞ்சத்தின் முக்கால் பகுதி ஒரு கருமை சக்தியால் (dark energy) நிரம்பி இருக்கிறது. ஆங்காங்கே கருமைச் சுழல்கள் (dark holes) இருக்கின்றன. அவைகள் பெரும் சக்தியை உடையவன. அவை பக்கத்தில் வரும் எல்லாவற்றையும் தம்முள் ஈர்த்து மறைந்து போகச் செய்கின்றன. இவைகள் பெருகினால் இந்த ப்ரபஞ்சமே அவைக்குள் மறைந்து விடும். அல்லது கோள்களின் கூட்டங்கள் விரிந்து கொண்டே போய் கடைசியில் தேய்வுற்று ஒன்றுமில்லாமல் போய்விடும். உறுதியாகச் சொல்வதற்கில்லை.

தற்பொழுது இருக்கும் ப்ரபஞ்சத்திற்கு முன்பு இதே போல ப்ரபஞ்சம் இருந்ததா, இருந்திருக்குமா என்றால் அதற்கு பதில் உறுதியாகச் சொல்வதற்கில்லை என்பதே. ஏனென்றால் அந்த சக்தி வாய்ந்த கருமை நிற கோளம் வெடிப்பதற்கு முன்பு இவ்வளவு சக்தியும் ஒரு பெரிய அளவு கடந்த மேக மூட்டம் போல இருந்ததாக நம்பப் படுகிறது.

இப்பொழுது அணு விஞ்ஞானம் எது வரை முன்னேறியிருக்கிறது என்று பார்ப்போம். அணுக்கள் ந்யூட்ரான், ப்ரோட்டான், எலெக்ட்ரான் (neutron, proton, electron) முதலியவைகளினால் ஆனது எந்த ஒரு வஸ்துவும் இவைகளின் வெவ்வேறு அளவிலான சேர்க்கைகள் தான் என்று கண்டு பிடிக்கப் பட்டது. அதாவது கல், மண், மரம், செடி, கொடி, மனிதன், மிருகம், ஸ்தாவர ஜங்கம வஸ்துக்கள் எல்லாமே இந்த மூன்றின் சேர்க்கை தான் என்று உறுதி செய்யப்பட்டது. (பிரகலாதன் விஷ்ணு பகவான் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்று சொன்னது ஞாபகத்திற்கு வரும்) இப்பொழுது இந்த மூன்றின் எதிர் மறையான குணங்கள் உள்ள ஆன்டி ந்யூட்ரான், ஆன்டி ப்ரோட்டான், ஆன்டி எலெக்ட்ரான் (antineutron, antiproton, antielectron – antimatter) என்ற துகள்கள் இருக்கின்றன, அவை எல்லாம் சில சமயம் ஒளியாகவும் சில சமயம் கதிர்களாகவும் தோன்றுகின்றன. இவை தவிர இன்னும் சில துகள்களும் (க்வேஸார் quasar முதலியவைகளும்) இருக்கின்றன என்று சொல்லப் படுகிறது. இதைப் பார்க்கும் பொழுது விநாயகர் அகவலில் அவ்வை மூதாட்டி கூறும் வார்த்தைகளான “அணுவுக்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய், கணு முற்றி நின்ற கரும் புள்ளே” என்ற வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன!

ஆக காலம் மாற மாற மனிதனின் அறிவு வளருகிறது அவனது கருவிகளின் திறமை அதிகரிக்க அதிகரிக்க அவன் எங்கும் ஒருமையைக் காண்கிறான். அறிவிற்கு அப்பார்ப் பட்டது இருக்கிறது என்பதை பல தலை சிறந்த விஞ்ஞானிகள் இன்று ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் நமது ரிஷிகளோ பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே உபநிஷதங்களில் இதையே கூறினார்கள்.

# ஈசாவாஸ்ய உபநிஷத்

ப்ரம்மத்தைப் பற்றிய அறிவைத் தரக்கூடிய வேதத்தின் பகுதியையும் உபநிஷத் என்றே கூறுவது வழக்கம். அதில் வரும் ரிஷிகளுக்கோ, மற்ற பாத்திரங்களுக்கோ முக்கியத்துவம் கொடுக்கப் படுவதில்லை. உயர்ந்த கருத்துக்களே விளக்கமாகப் பேசப்படுகின்றன. சிறு கதைகளை எடுத்துக் காட்டாகக் கொண்டு மிகப் பெரிய அறிய தத்துவங்கள் எடுத்துறைக்கபடுகின்றன. உதாரணமாக ப்ருகதாரண்ய உபநிஷத்தில் அருண ரிஷியின் பேரனாகிய ஸ்வேதகேது என்ற மாணவன் பாஞ்சால நாட்டின் மன்னாகிய ப்ரவாஹனன் என்ற ராஜாவின் ஸபைக்குச் செல்கிறான். அங்கு அந்த ராஜா அவன் எப்படிப் பட்ட மேதை என்று அறிந்து கொள்வதற்காக சில கேள்விகள் கேட்கிறார். இப்படி ஆரம்பிக்கும் கதை தொடர்ந்து மனிதன் இறந்த பிறகு என்ன நடக்கிறது என்பதைப் பற்றித் தெளிவு படுத்துகிறது. ஆனால் அந்த ராஜாவைப் பற்றியோ அல்லது அந்த மாணவனைப் பற்றியோ வேறு விவரங்கள் கூறப்படுவதில்லை.

இதே மாதிரி சாந்தோக்ய உபநிஷத்தில் ஸத்யகாம ஜாபாலன் என்னும் சிறுவன் தன் தாயிடம் அம்மா நான் குருகுலம் சென்று கற்க விரும்புகிறேன், நாம் எந்த கோத்திரம் என்று கேட்க அதற்கு அவனது தாயார் அதை நான் தெரிந்து கொள்ளவில்லை உன் பெயர் ஸத்ய காமன் என் பெயர் ஜாபாலை எனவே நீ ஸத்ய காமன் என்ற ஜாபாலன் என்றே சொல்லிக்கொள்ளலாம் என்கிறாள். அவன் ஹாரித்ருமர் என்ற ரிஷியிடம் சென்று தன்னை மாணவனாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறான். அந்த ரிஷி அவனது கோத்திரத்தைக் கேட்கிறார். அவன் தன் தாயார் கூறியவற்றை மறைக்காது உள்ளது உள்ளபடியே ரிஷியிடம் கூற அவர் அவனது உணமை கூறும் தன்மையைப் புகழ்ந்து அவனை மாணாக்கனாக ஏற்றுக்கொண்டு அவனுக்குப் பாடம் புகட்ட அவன் பிற்காலத்தில் சிறந்த ரிஷியாகப் பரிணமிக்கிறான். இங்கு ஏன் அவன் அம்மாவிற்கே அவனது பிறப்பைப் பற்றிய விவரம் தெரியவில்லை என்பது போன்ற உலக வழக்கமான விஷயங்கள் பேசப்படுவதில்லை. இந்தக் கூற்று உண்மை பேசுவதின் பெருமையை எடுத்து இயம்புகிறது.

உபநிஷத்துக்கள் பல விவாதங்கள் மூலமாக அரிய பெரிய விஷயங்களைத் தெரிவிக்கின்றன. ஆனால் இன்றைய பட்டி மன்றங்களைப் போல ஒரு ஒழுங்கு முறையற்ற, வாய்க்கு வந்த படி முடிவில்லாத பேச்சுக்கள் எங்கும் கிடையாது. பேசப்படும் விஷயம் வேதத்தின் ஆதாரத்துடனும் தர்க்க விதிகளின் முறைப்படியும் இருக்கவேண்டும். தன்னை விட மற்றவர் பேசிய கருத்துக்களை மறுத்துச் சொல்லமுடியாவிட்டால் அதை ஒத்துக் கொள்ளும் பெருந்தன்மையையும் காணமுடியும். உபநிஷத்துகளிலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படும் விவாதம் ஜனக மகாராஜாவின் சபையில் நடந்த விவாதம் ஆகும். அவர் அங்கு சபையில் கூடியிருந்த ரிஷிகளிலேயே மிகச் சிறந்த ப்ரம்ம நிஷ்டர் (ப்ரம்மத்தை உணர்ந்தவர்) யார் என்ற கேள்வியை எழுப்பி, அப்படிப்பட்டவரே அங்கு கொண்டுவரப்பட்டிருந்த நூறு பசு மாடுகளையும் அவற்றின் கொம்பில் கட்டியுள்ள பொன் மூட்டைகளையும் எடுத்துச் செல்லலாம் என்று மன்னன் அறைகூவல் விடுகிறார். அப்பொழுது எல்லோரிலும் சிறந்தவரான யாக்ஞவல்கிய மஹரிஷி அந்த பசுக்களைத் தனது ஆசிரமத்திற்கு ஓட்டிச் செல்லும்படி தனது மாணாக்கனை உத்தரவிடுகிறார். உடனே பல ரிஷிகள் எழுந்து கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள். அஸ்வலா, உத்தாலகா என்று பல அறிஞர்கள் கேள்விகள் கேட்க யாக்ஞவல்கியரின் பதிலில் சமாதானமடைந்து அவர்கள்

தத்தம் இருக்கைகளில் அமர்கின்றனர். கார்கி என்ற ரிஷி அம்மையார் இரண்டு தடவை கேள்விகள் கேட்டு யாக்ஞவல்கியரின் பதில்களின் உண்மையை ஒத்துக்கொண்டு மற்ற ரிஷிகளிடம் இவரே சிறந்தவர் என்பதில் சந்தேகமில்லை இவரை உங்களால் வாதத்தில் வெல்லமுடியாது என்று தெள்ளத் தெளிவாக கூறுகிறார். அப்படியிருந்தும் சாகல்யர் என்பவர் எழுந்து ப்ரம்மத்தைப் பற்றித் தனக்குத் தெரிந்த அரைகுறை அறிவைக்கொண்டு வாதாடுகிறார். அவருடைய அறிவின் எல்லையைக் கண்ட யாக்ஞவல்கியர் அவரை மற்றவர்கள் ஒரு ஸாதனமாக உபயோகிக்கிறார்கள் என்று அவருக்கு தெரியப் படுத்துகிறார். ஆனாலும் அந்த எச்சரிக்கையை உதாசீனம் செய்து மேலும் கேள்விகள் கேட்க, அவருடைய கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லிக் கடைசியில் “நான் ஒரு கேள்வி கேட்கிறேன், இதற்கு நீ பதில் சொல்ல முடியாவிட்டால் உன் தலை வெடிக்கக் கடவது என்று சாபமிடுகிறார்”. அதே போல சாகல்யரால் பதில் சொல்லமுடியாததால் அவர் தலை வெடிக்கிறது. கார்கி அம்மையாருக்கோ யாக்ஞவல்கியருடைய அறிவின் பெருமை தெறிந்திருந்தது, மற்றவரின் அறிவை மதிக்கும் பெருந்தன்மையும் இருந்தது, ஆனால் சாகல்யருக்கு அதற்கு பதிலாக அகம்பாவமே நிரம்பி இருந்தது எனவே அவரது முடிவு பரிதாபமாக முடிந்தது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவெனில் வாதிடுவதில் ஒரு ஒழுங்கு, ஒரு நியாயம் என்பது இருக்கவேண்டும், மிகச் சிறந்த அறிஞர்களுடன் வாதிடுவதற்கு ஒரு தகுதி வேண்டும், வாதிடும்பொழுது பணிவும் வேண்டும் என்பதே.

ப்ரம்ம ஞானம் பற்றியும் அதை அடைவது எப்படி என்றும் விளக்கும் உபநிஷதங்கள் ஒரு சிறுபான்மையரத் தவிர மற்ற எல்லோரும் அந்த நிலையை அடைவது கடினம் என்று ஒத்துக் கொண்டு ஒரு சராசரி மனிதன் எவ்வாறு வாழ்ந்து படிப்படியாக முன்னேறுவது என்பதையும் கூறுகின்றன. க்ருஹஸ்தாசிரமத்தை சமூகத்தின் தூணாகக் கருதி க்ருஹஸ்தாசிரமத்தில் இருக்கும் ஒரு சம்சாரி பஞ்ச மஹா யக்ஞத்தை அனுஷ்டிப்பதனால் எப்படி சமூகத்தின் அஸ்திவாரமாக செயல்பட முடியும் என்று எடுத்துக் காட்டுகின்றன. பஞ்ச மஹா யக்ஞமாவது தெய்வங்களுக்காக யாகங்கள், பூஜைகள் செய்வது, முன்னோர்களுக்கான ஸ்ரார்த்தம் முதலிய செய்வது, அதிதி உபசாரம் அன்ன தானம், வஸ்திர தானம் முதலிய செய்வது, பசுக்களுக்காக (பிராணிகளுக்காக) அவைகளை பராமரிப்புக்கான ஏற்பாடுகளை செய்வது ஆகும்.

உபநிஷத் வறட்டு வேதாந்தம் அல்ல, சிறந்த வாழ்க்கையின் வழி காட்டி என்பது எப்படி என்று பார்ப்போம். தைத்திரீய உபநிஷத் ஒரு மாணாக்கன் எப்படி இருக்க வேண்டும் ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் அவர்களிடையில் எவ்வளவு அந்யோன்யம் வேண்டும் இருவரும் ஒருவருக்கொருவர் எப்படி விருப்பத்துடனும் அன்புடனும் பழக வேண்டும், கல்வியின் நோக்கம் என்ன, உண்மை பேசுவதின் அவசியம் என்ன, எப்பொழுது மௌனம் காக்கவேண்டும், செல்வத்தின் அவசியம் என்ன, தானத்தின் பெருமை என்ன, விருந்தோம்பலின் பெருமை என்ன என்று நல்லதொரு வாழ்வு வாழ வழியை முறைப் படுத்திக் காட்டுகிறது. மேலும் எல்லா விதமான நலன்களையும் பெறுவதற்கு செய்ய வேண்டிய உபாசனகளைப் பற்றிக் கூறி அப்படி கிடைக்கும் தனத்தை எப்படிப் பட்ட நல்வழிகளில் ஈடு படுத்த வேண்டும் என்று கூறுகிறது. ஈசாவாஸ்ய உபநிஷத் நற்காரியங்களைச் செய்து கொண்டு நூறு வருஷங்கள் வாழ விரும்ப வேண்டும் என்று

அறிவுருத்துகிறது. ப்ருஹதாரண்ய உபநிஷத் சத் புத்திரர்களைப் பெறுவதால் அவர்கள் தகப்பனாரால் ஆரம்பிக்கப் பட்டு செய்ய முடியாமல் போன நல்ல காரியங்களைச் செய்பவர்களாக இருப்பார்கள் என்று கூறுகிறது.

வேத காலத்தில் கல்வி கற்பிக்கும் முறை எப்படி இருந்தது, எந்த நோக்கத்தோடு கல்வி கொடுக்கப்பட்டது அதன் பலன் என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள உபநிஷத்துக்கள் பெரும் உதவியாக இருக்கின்றன. கல்வி கற்க விரும்பும் மாணாக்கன் கையில் சமித்தை எடுத்துச்சென்று ஆசிரியரை அணுகி பணிவுடன் தன்னை மாணாக்கனாக ஏற்றுக்கொள்ள வேண்டிக் கொள்ள வேண்டும். ஆசிரியர் விரும்பி ஏற்றுக் கொண்டால் மாணாக்கனின் தரம் அறிந்து அவனுக்கு எந்த வழி உகந்ததோ அதற்குத்தக்கபடி கல்வி புகட்டுவார். கல்வியின் காலம் இவ்வளவு வருடங்கள் தான் என்று முன்கூட்டியே முடிவு எடுக்கப் படமாட்டாது. சிஷ்யனின் கற்கும் திறமைக்கு ஏற்றவாறு அது போகப்போக இறுதி செய்யப்படும். எல்லா மாணாக்கர்களுக்கும் ஒரே மாதிரியான பாடமும் இருக்காது. ஒரு மாணவனுக்கு முழுப் பாடமும் ஆகாவிட்டால் தக்ஷிணை பெற்றுக் கொள்வதில்லை என்பதை ப்ருகதாரண்ய உபநிஷத்தில் ஜனக மகாராஜாவுக்கு ப்ரம்மனைப் பற்றி உபதேசம் செய்யும் பொழுது, அவர் பல தடவை யாக்ஞவல்கியருக்கு நூறு மாடுகள் தருகிறேன் என்று சொல்ல யாக்ஞவல்கியர் "முழுப் பாடமும் முடிக்காமல் தக்ஷிணை வாங்கக் கூடாது என்று எனது தகப்பனார் கூறியிருக்கிறார்" என்று தக்ஷிணை வாங்க மறுக்கிறார்.

மேலே கூறிய ஸத்யகாமனுக்கு அவனது குரு ஹாரித்ருமர் அவனிடம் நானூறு மெலிந்த பசுக்களைக் கொடுத்து இவை ஆயிரம் பசுக்கள் ஆனதும் திரும்பி வா என்கிறார். அவனும் மறு பேச்சுப் பேசாமல் குருவின் ஆணைப்படியே பசுக்கள் ஆயிரம் ஆனதும் தான் திரும்பி வருவதாக சபதம் செய்து அவை ஆயிரம் ஆனதும் திரும்புகிறான். குருவோ அவனைப் பார்த்து உன் முகம் பிரகாசமாக ப்ரம்மத்தை அறிந்தவன் போல் காணப்படுகிறது, உனக்கு யார் உபதேசம் செய்தார் என்று கேட்கிறார். அதற்கு அவன் மனிதரல்லாத தேவதைகள் உபதேசம் செய்தன என்று சொல்லி ஆனாலும் உங்கள் வாயிலாகவே ஆசை தீர உபதேசித்தருளல் வேண்டும் என்று விண்ணப்பிக்கிறான். அவரும் அவ்வாறே உபதேசம் செய்கிறார். ஆகவே எந்த ஒரு காரியத்தையும் முழு மனதோடும் சிரத்தையுடனும் செய்ய வேண்டும் அவ்வாறு செய்தால் இயற்கையாகவே நாம் நிறைய கற்றுக்கொள்ளமுடியும், எப்படியானாலும் குரு முகமாக கற்றுக்கொள்வதற்கு ஈடு இணை கிடையாது என்றும் புரிந்து கொள்கிறோம்.

உபநிஷத்துக்களின் மிகத் தலையான நோக்கம் மனிதனாகப் பிறந்தவன் எவ்வாறு இந்தப் பிறவிக்கடலைத் தாண்டி ப்ரம்மத்தை அடைவது என்பதே ஆகும். ஆயினும் உபநிஷத் எல்லோராலும் அதை அடையமுடியாது என்று தீர்மானித்து பலதரப்பட்ட மனிதர்கள் அவரவர் தகுதிக்கும் முயற்சிக்கும் ஏற்ப எப்படி முயலுவது அவசியம் என்பதையும் எடுத்துச் சொல்லுகிறது. அதற்கான வழி முறைகளான நியமங்களோடு கூடிய வாழ்க்கை, த்யானம் செய்யும் முறைகள் முதலியவற்றை பல ரிஷிகளின் வாயிலாக விவரிக்கின்றன. இவற்றைப் பின்பற்றுபவர்கள் மேலான சீரிய வாழ்க்கை வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே உபநிஷத் என்பது வறட்டு வேதாந்தம் அல்ல, சிறந்த வாழ்க்கைக்கு ஒரு வழி காட்டி என்று உணருவது அவசியம்.

# ஈசாவாஸ்ய உபநிஷத்

சங்கர பகவத் பாதர் முக்யமாகக் கருதி உரை எழுதிய உபநிஷங்களில் மிகச் சிறியது ஈசாவாஸ்ய உபநிஷத் ஆகும். கடுகு சிறிதானாலும் காரம் பெரியது என்பது போல பதினெட்டு மந்திரங்களையே கொண்ட இந்த உபநிஷத் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டது. இதை ப்ருகதாரண்ய உபநிஷத்தின் சாரம் அல்லது ப்ருகதாரண்ய உபநிஷத்தை இதன் விரிவுரை என்று சொல்லலாம். மேலும் இந்த உபநிஷத் மிகவும் கடினமாக கருதப்படுகிறது ஏனென்றால் இது பல விதமான வேறுபட்ட ஆனால் ஒன்றுடன் ஒன்று தொடர்பு உள்ள விளக்கங்களுக்கு இடம் கொடுக்கிறது. ஈங்கு சங்கர பாஷ்யத்தைச் சார்ந்தே விளக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த இரண்டுமே (ஈசாவாஸ்யமும் ப்ருகதாரண்யமும்) சுக்ல யஜுர் வேதத்தைச் சார்ந்தன. (அதென்ன சுக்ல யஜுர்வேதம் என்று கேட்கக் கூடும். சாதாரணமாக யஜுர் வேதம் என்றால் க்ருஷ்ண யஜுர் வேதத்தையே குறிப்பிடுவார்கள். இதிலிருந்து வேறுபட்ட யஜுர் வேதத்தை யாக்ஞவல்கிய மகரிஷியானவர் சூரியனிடமிருந்து கிரஹித்துக் கொண்டு வந்தார் அதுவே சுக்ல யஜுர் வேதம் எனப்படுவதாகும்). ஈசாவாஸ்ய உபநிஷத் இந்த வேதத்தின் சம்ஹிதை (மந்திரங்கள்) பாகத்திலும் ப்ருகதாரண்யம் அதன் ஆரண்யக (ப்ராம்மண) பாகத்திலும் வருகிறது. சம்ஹிதை என்பது யாகங்களில் ஓதப்படும் மந்திரங்களை உடையது. ப்ராம்மணம் என்பது தத்துவ விசாரத்தைப் பற்றியது.

வேதத்தை மறை என்பார்கள் ஏனென்றால் அதில் கருத்துக்கள் மிகவும் ஆழமாக மறைந்து பொதிந்து கிடக்கின்றன. அதில் வரும் சொற்கள் எந்த இடத்தில் எந்தக் கருத்தை தெளிவு படுத்த உபயோகப் படுத்தப் பட்டிருக்கிறது என்பது முறையாகக் கற்று அறிந்தவர்களுக்கே தெரியும். ஒரு அகராதியை வைத்துக் கொண்டு படிக்க முயன்றோமானால் அதை விட தப்பான காரியம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. ஒரே சொல் அடுத்து அடுத்து வந்தாலும் கூட வெவ்வேறு அர்த்தத்தில் கையாளப் பட்டிருக்கும். அந்த பொருள்களை அகராதியில் காண முடியாது. சில தத்துவங்கள் பல ரிஷிகளால் வெவ்வேறு விதமாக விளக்கப் பட்டிருக்கின்றன. பின் இதை எப்படித்தான் தெரிந்து கொள்வது? நன்கு கற்றறிந்த அறிஞர்களிடம் சென்று பாடம் படிப்பதுதான் சிறந்த வழியாகும்.

நெடுங்காலமாக உபநிஷதங்கள் பரம்பரை பரம்பரையாக வாய் மூலமாக உபதேசிக்கப்பட்டு வந்தன. ரிஷிகள் அவர்களது மகன்களுக்கும் சிஷ்யர்களுக்கும் குருகுலத்தில் பாடம் சொல்லி வந்தனர். பிற்காலத்தில் பல பண்டிதர்களும் சந்யாசிகளும் பாஷ்யம் எனப்படும் விரிவுரைகளை எழுதினார்கள். பிறகு அந்த விரிவுரைகளுக்கு விளக்க உரைகளும் எழுதப்பட்டன. சமீப காலத்தில் பல அறிஞர்கள் உரைகளைத் தன்னகத்தே கொண்ட பலப் பல புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். பாஷ்யங்களிலேயே மிகவும் சிறந்ததாகவும் அத்வைதத்துக் பொருத்தமானதாகவும் அறிஞர்களால் கருதப்படுவது ஆதி சங்கரர் என்று அன்புடன் அழைக்கபடும் சங்கர பகவத் பாதரின் பாஷ்யங்களே. இவற்றைக்கூட வேத விசாரம் தொடங்குபவர்கள் படித்துத் தெரிந்து கொள்வது கடினம். எனவே இத்தகைய அரும் பெரும் அறிவு மற்றவர்களுக்கும் சேர வேண்டும் என்ற பரந்த நோக்கோடு பல அறிஞர்கள் இன்றும் பாடம் சொல்லி வருகிறார்கள். பல சொற்பொழிவுகளும் ஆங்காங்கே நடத்தப்படுகின்றன.

சென்னை போன்ற பெரு நகரங்களில் பல மகான்கள் இந்த மாதிரி சத் காரியங்களைப் பற்றிய சொற்பொழிவுகளுக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்து வருகின்றார்கள். இத்தகைய சொற்பொழிவுகளுக்கு போகமுடியாதவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு சிறு அளவிலாவது ஈசாவஸ்ய உபநிஷத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்ததே இந்த நூலைத் தரும் முயற்சி. உபநிஷத் காமதேனு என்றால் பகவத் கீதா அதன் பால் என்பார்கள். அப்படிப் பட்ட கீதையிலிருந்து பல மேற்கோட்கள் இங்கு காட்டப் பட்டிருக்கின்றன. இது இந்த உபநிஷத்தின் ஒரு பரிச்சயமே. இதைப் படித்த பின் மேற்கொண்டு இன்னும் முறையாகப் படிக்க வேண்டும் என்று அவா எழுமேயானால் அதுவே அடியேன் செய்த பெறும் பேறு என்று கருதுவேன்.

இந்த பரிச்சயம் பல சொற்பொழிவுகளில் இருந்து அடியேன் தெறிந்து கொண்ட விஷயங்களின் தொகுப்பு ஆகும். இதில் ஏதேனும் பிழைகள் இருக்குமாயின் அது எனது அறியாமையின் வெளிப்பாடு ஆகும். அன்னப் பறவையைப் போல் தள்ளத்தக்கதைத் தள்ளி, கொள்ளத்தக்கதைக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்

ந. சுப்ரமணியன்

# ஈசாவாஸ்ய உபநிஷத்

## ஒரு கண்ணோட்டம்

ஈசா என்ற பதத்துடன் ஆரம்பிப்பதால் இதற்கு ஈசாவஸ்ய உபநிஷத் என்ற பெயர் வந்தது. இதே போல வேறு சில உபநிஷத்துக்களுக்கும் (கேன முதலானவை) முதல் பதத்தைக் கொண்டே நாமகரணம் செய்யப்பட்டிருக்கின்றன. ஈசாவாஸ்ய உபநிஷத் அல்லது ஈசோபநிஷத் தில் பதினெட்டு மந்திரங்கள் உள்ளன. ஏற்கனவேயே முன்னுரையில் கூறியபடி இதில் வரும் வாக்கியங்களுக்குப் பல ஞானிகள் வெவ்வேறு கருத்துக்களை வியாக்கியானமாக கொடுத்திருக்கிறார்கள். இங்கு சொல்லப்படும் கருத்துக்கள் சங்கர பாஷ்யத்தை தழுவியது.

பெயருக்கு ஏற்றார்ப் போல இதனது முக்யமான கருத்து இந்த பிரபஞ்சம் ஈச்வரானால் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது, இந்த ப்ரபஞ்சத்தில் உள்ள எல்லாவிதமான ஸ்தாவர ஜங்கம வஸ்துக்கள், இதில் நடை பெறும், நடக்கப் போகும் அனைத்துச் செயல்களும் மாறுதல்களும் ஈச்வரனின் எண்ணச்சுழல்களே. அவனே ப்ரபஞ்சத்தில் உள்ள அனைத்துக்கும் மூலப் பொருளாகவும், அவற்றை உண்டாக்கும் செயலின் காரண கர்த்தாவாகவும் இருக்கிறான். இந்த ப்ரபஞ்சம் இல்லை என்றால் மிஞ்சுவது ஈச்வரனே. ஈச்வரனும் எல்லாவற்றின் உள்ளே இருக்கும் ஆத்மாவும் ஒன்றே. இப்படி ஆரம்பிக்கும் உபநிஷத் அந்த ஈச்வரனான பரம் பொருளை அடைவது எப்படி என்றும் கூறுகிறது.

ஈச்வரனை அல்லது பரமாத்மாவை அல்லது பரம்பொருளை மனிதர்கள் அடைவதற்கு இரண்டு வழிகள் காட்டப் படுகின்றன. ஒன்று, பணம் பதவி முதலியவற்றில் ஆசையை ஒழித்து, இந்த உலகைத் துறந்து தியானப் பயிற்சிகளில் ஈடுபட்டு அதில் தேர்ச்சி அடைந்து அதன் பலனாக தனது ஆத்ம தத்துவத்தை உணர்ந்து தானும் ப்ரம்மமும் வேறு அல்ல என்ற நிலையை அடைதல் (முக்தி அடைதல்). இன்னொன்று சந்யாசி ஆகாமல் இவ்வுலக வாழ்க்கையிலேயே தான் செய்யும் காரியங்களை (தனது கடமைகளை) பலனை எதிர்பாராமல் (பலனை ஈச்வரனுக்கு அர்ப்பணம்) செய்து, ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டு, தியானப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்று முக்தி பெறுதல்.

ஆத்மாவைப் பற்றி அறியாதவர்களை இந்த உபநிஷத் கண்டனம் செய்கிறது. அவர்கள் திரும்பத் திரும்ப பிறவி எடுத்து சம்சாரமாகிய காரிருளில் வீழ்வார்கள் என்கிறது.

இதன் பிறகு ஆத்மா அழிவற்றது, அசையாதது, அசையக்கூடியது, மனத்தையும் இந்திரியங்களைக் காட்டிலும் வேகமானது என்று பல விதமாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது, நம்முள்ளே இருக்கும் ஆத்மா எவ்வளவு உயர்ந்தது என்றும் நமக்கு ஆத்மாவை உணர்ந்து பேறு பெறுவது எவ்வளவு அவசியம் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது.. ஆத்மாவை அறிந்தவர் (ஆத்ம விசாரம் செய்து அதில் தேர்ச்சி பெற்று இந்த வாழ்விலேயே ஜீவன் முக்தர் ஆனவர்) எல்லா உயிரினங்களையும் தன்னிடத்திலேயே பார்க்கிறார், எல்லா உயிரினங்களிலும் தன்னையே காண்கிறார், அதனால் அவர் யாரையும் குறை கூறமாட்டார். அப்படிப்பட்டவர் எல்லா உயிரினங்களையும் தனது ஆத்மாவிலிருந்து வேறு பட்டதாக நினைக்காததால் அதன் பலனாக சோகத்தையும் மோகத்தையும் கடந்த உயர்வான நிலையை அடைகிறார் என்றும் தெளிவு படுத்துகிறது.

இப்படிப்பட்ட உன்னதமான ஒரு நிலையை அடைய முடியாதவர்கள் வெறும் கர்மங்களை (இங்கு கர்மங்கள் எனப்படுவது வேதங்களில் சொல்லப் படும் கர்மாக்கள்) மட்டும் செய்வதால் அவர்கள் சம்சாரமாகிய இருண்ட உலகத்துக்கே செல்வார்கள், கர்மாவை விட்டு விட்டு வெறும் தியானம் மட்டும் செய்பவர்கள் அதை விட கீழான நிலையை அடைவார்கள் என்றும் சொல்லப் படுகிறது. பிறகு எல்லா தெய்வ உபாசனையிலேயே உன்னதமாக கருதப் படும் ஹிரண்ய கர்ப்ப உபாசனையினாலும் மற்றவற்றை விட அதிக பலனான ப்ருக்ருதி லயம் கிடைத்தாலும் அந்த பலனும் முக்திக்கு ஈடாக ஆகாது என்றும் சொல்லப் படுகிறது. இதைக் கண்டு நாம் ஒன்றுமே செயாமலிருப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. ஏனெனில் ஆத்ம உபாசனையுடன் மற்ற தெய்வ உபாசனகள் ஒப்பிடப் படுகின்றன. ஆத்ம உபாசனை செய்பவர்கள் ஒப்பற்ற ப்ரகாசத்தை உடைய பரப்ரம்மத்தை அடைகிறார்கள் மற்றவர்கள் தெய்வ உபாசனகளினால் ஏற்படும் பலன்களிலேயெ ருசி கண்டு மேலான ஆத்ம விசாரத்திற்குப் போகமுடியாமல் இருந்து விடுவார்கள். ஆகவே அதிக இருளை அடைவதாக கூறப்படுகிறது.

கடைசி நான்கு மந்திரங்கள் எல்லோருக்கும் பொதுவாக சொல்லப் பட்டிருக்கின்றன. இவை மிகவும் விரிவான முறையில் பலராலும் மேற்கோள் காட்டப்படும் மந்திரங்கள் ஆகும். இரண்டு மந்திரங்கள் சூர்யனைப் ப்ரார்த்திப்பதாகவும் மற்ற இரண்டும் அக்னியிடம் விண்ணப்பிதாகவும் உள்ளன. அவை என்ன என்று பார்ப்போம்.

ஹே சூரியனே! தங்கம் போன்ற ஒளிமயமான பாத்திரத்தினால் சத்யத்தின் வாசல் மூடப்பட்டிருக்கிறது. உமது கூசும்படியான உஷ்ணமான கிரணங்களை விலக்கி உண்மையான தர்மத்தை அனுஷ்டிக்கிற எனது பார்வைக்காக அந்த சத்தியத்தின் வாசலைத் திறந்து விடுவீராக. அதாவது உலக போகங்கள் தங்க பாத்திரம் போல் உண்மையான எனது ஆத்மாவை என்னிடமிருந்து மறைத்துள்ளன. தர்மமான நல்ல வழியில் செல்ல விரும்பும் எனக்கு உலக சுகத்தின் மேல் உள்ள மோகத்தை நீக்கி ஆத்மாவை அடைய அருள வேண்டும் என்பதே இதன் உள்ளக் கருத்து.

மனிதனின் கடைசி நாட்களில் (உயிர் போகும் தருவாயில்) என்ன ப்ரார்த்தனை செய்ய வேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறது. தர்ம மார்க்கத்தையே கடைப்பிடிப்பவர்கள் கூட கால தோஷத்தினாலும் விதி வசத்தினாலும் மோகத்தாலும் தவறுகள் செய்ய நேர்கிறது. தான் செய்த தவறுகளுக்காக வருந்தி அவைகளை அக்னி பகவான் நன்றாக அறிவார் எனவே அவற்றைப் பொறுத்து(மன்னித்து) தன்னை (இறந்த பிறகு) மேலான வழியில் அழைத்துச் செல்ல வேண்டும் என்று அக்னியிடம் ப்ரார்த்தனையுடன் இந்த உபநிஷத் முடிகிறது.

ஈச்வரனும் ஆத்மாவும் ஒன்றே என்று ஆரம்பித்து ஆத்மாவை அடைய இரண்டு விதமான வழிகளைக் கூறி, ஆத்மாவை அறியாதவனுக்கு நேரும் இழப்பைக் கூறி, ஆத்மாவின் சிறந்த குணங்களை விவரித்து, ஆத்மாவை அறிந்தவரின் உயர்ந்த நிலையைப் புகழ்ந்து, மனிதனாகப் பிறந்தவன் செய்யும் உபாசனைகளின் பலன்கள் எவை, ஆத்மாவை ஈச்வர க்ருபை இல்லாமல் அடைய முடியாது என்பதையும் உணர்த்தி, கடைசியில் என்ன ப்ரார்த்தனை செய்யவேண்டும் என்று கூறி முடிக்கிறது.

# ஈசாவாஸ்ய உபநிஷத்

இங்கு சுருக்கமாக கூறப்படும் விஷயங்கள் ப்ருகதாரண்ய உபநிஷத்தில் விரிவாக விளக்கப் பட்டிருக்கின்றன.

ந. சுப்ரமணியன்

##############

# விரிவுரை

## சாந்தி பாடம்

शान्तिपाठः

சாந்தி பாட

**पूर्णमदः पूर्णमिदं पूर्णात् पूर्णमुदच्यते ।**

**पूर्णस्य पुर्णमादाय पूर्णमेवावशिष्यते ।**

**ओं शान्तिः शान्तिः शान्तिः॥** 1

பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே ।

பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே । 1

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

अदः அத: அது ப்ரம்மம் पूर्णं பூர்ணம் - பூர்ணமானது (முழுமையானது

इदं இதம் - இது ஜீவன் (ஆத்மா) पूर्णं பூர்ணம் - பூர்ணமானது (முழுமையானது) (இரண்டும் ஒன்றே) पूर्णात् பூர்ணாத் - பூரணமான ப்ரம்மத்திலிருந்து पूर्णं பூர்ணம் - பூர்ணமான ஜீவன் (முழுமையான) उदच्यते உதச்யதே - தோன்றியுள்ளது पूर्णस्य பூர்ணஸ்ய - பூர்ணமான ஜீவனிலிருந்து पूर्णं பூர்ணம் - பூர்ணமான ப்ரம்மனை आदाय - ஆதாய - எடுத்துவிட்டால் (நீக்கிப்பார்த்தால்) पूर्णं பூர்ணம் - பூர்ணமான ப்ரம்மம் एव ஏவ - மட்டுமே अवशिष्यते அவஸிஷ்யதே - எஞ்சியுள்ளது

ओं ஓம் शान्तिः சாந்தி: शान्तिः சாந்தி: शान्तिः சாந்தி:

பொருள்

அந்த ப்ரம்மம் பூர்ணம் (வரையறுக்கப்பட முடியாதது). இந்த ஜீவன் பூர்ணம். பூர்ணமான ப்ரம்மனிலிருந்து பூர்ணமான ஜீவன் தோன்றியுள்ளது. பூர்ணமான ஜீவனிலிருந்து பூரணமான ப்ரம்மத்தை எடுத்து விட்டால் பூர்ணமான ப்ரம்மமே எஞ்சியுள்ளது (பெயர், உருவம்

முதலியவை ஜீவன் இல்லாத போது ஒன்றுமில்லாமல் ஆகிவிடுகிறது, அவை நிலை அற்றவை)

விளக்கம்:

ஈஸாவாஸ்ய உபநிஷத் ஸ்ரீ சுக்ல யஜுர் வேதத்தில் கடைசி அத்யாயமாக வருகிறது. இந்த உபநிஷத்தில் வரும் கருத்துக்கள் மிகவும் ஆழமானவை. ஆத்மா நிலையானது, சுத்தமானது, பாப சம்பந்தம் இல்லாதது, எங்கும் நிறைந்தது என்று ஆத்மாவின் பல ஸ்வரூபத்தை தெரியப் படுத்துகிறது. இதைப் புரிந்து கொள்ளும் முன் நாம் சில சித்தாந்தங்களை அறிந்து கொள்வது அவசியம்.

அதில் முக்யமானது அத்வைத சித்தாந்தம். அத்வைதம் என்றால் ஒன்றே, இரண்டு அல்ல என்பது ஆகும். எந்த இரண்டு என்றால் ப்ரம்மமும் ஆத்மாவும். ப்ரம்மமும் இந்த ப்ரபஞ்சமும் (ப்ரபஞ்சமாவது இந்த உலகமும், உலகின் வெளியே உள்ள கோள்கள் நக்ஷத்திரங்கள் ஆகிய எல்லாமும் ஆகும்). ப்ரம்மமும் ஆத்மாவும் ஒன்றே, ப்ரபஞ்சம் ப்ரம்மத்தின் தோற்றமே, ப்ரம்மத்தைத் தவிர இரண்டாவதாக வேறு ஒன்றும் இல்லை என்பதே அத்வைதம்.

அத்வைத சித்தாந்தம் வேத காலத்திலிருந்தே பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வருகிறது. एकं सत् विप्रा बहुधा वदन्ति - ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி என்று ருக் வேதம் பறை சாற்றுகிறது. அதாவது உண்மை(சத்யம்) என்பது ஒன்றே, ஞானிகள் அதைப் பலவாறாக விவரிக்கிறார்கள். இதையே திருவாசகம் "ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க" என்று கூறுகிறது. இங்கு உண்மை அல்லது சத்யம் என்பதன் பொருள் என்னவென்று பார்ப்போம். எது காலத்தாலும் நேரத்தாலும் இடத்தைப் பொருத்தும் மாறாதோ அதுவே உண்மை எனப்படுவது. இதை மேலும் விளக்கிக் கூறவேண்டுமென்றால் ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். தினமும் சூரியன் காலையில் எழுகிறது மாலையில் மறைகிறது. இது உண்மை. நாம் நேரில் காண்கிறோம். அப்படியென்றால் சூரியன் இரவில் இல்லை என்று கூறமுடியுமா? ஏனெனில் வேறு ஓரிடத்தில் சூரியன் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது, ஆக சூரியன் அதனுடைய இடத்தில் இன்றும் இருக்கிறது, நேற்றும் இருந்தது, நாளையும் இருக்கப் போகிறது, காலத்தினால் மாறாமல் இருக்கிறது, எனவே அது சத்யம்.

அதே போல சத்யம் என்று ருக் வேதம் சொல்வது காலத்தையோ நேரத்தையோ இடத்தையோ பொறுத்து மாறாத ப்ரம்மத்தைக் கூறுகிறது. சரி, அந்த ப்ரம்மம் எப்படியிருக்கும் அதன் குணங்கள் யாவை என்று கேட்டால் இதற்கு பதில் அதை வரையருக்க முடியாது, இது இல்லை, இல்லை (नेति, नेति - நேதி, நேதி) என்று தான் சொல்ல முடியும், உருவம் கிடையாது, சிறியதிலும் சிறிது, பெரிதிலும் பெரிது, மிக மிகப் ப்ரகாசமான பெரும் ஜோதி, இருட்டிலும் இருட்டு, பிறப்பும் இறப்பும் இல்லாதது, என்று எதிர் மறையான குணங்களே பதிலாகக் கிடைக்கிறது. மேலும் அது இந்திரியங்களால் அறியப் பட முடியாதது, அறிவுக்கு அப்பாற்பட்டது, அதை தர்க்கத்தால் நிரூபிக்க முடியாது என்றும் சொல்லப் படுகிறது.

அப்படியானால் அத்தகைய ப்ரம்மம் இருக்கிறது என்பதை எப்படி நம்புவது? அதற்கு பதில் வேத வாக்கியங்களே ஸாக்ஷி. திருமூலர் வேதத்தைப் பற்றி

வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத் தகுமறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற்றார்களே.

என்று சொல்லும் பொழுது தர்க்க வாதத்தினால் அறிய முடியாதது என்று கூறுகிறார். ஏனென்றால் ப்ரம்மத்தை உணர்வால் தான் அறிய முடியுமே அல்லாது புத்தியால் அல்ல. இதையே மாணிக்கவாசகரும் சிவ புராணத்தில் "கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கே, நுண்ணுதற்கரிய நுண்ணுணர்வே", "யாவையுமாய் அல்லையுமாய்", "சோதியனே துன்னிருளே", "ஆக்குவாய், காப்பாய், அருள் தருவாய்", என்று புகழ்கிறார்.

ப்ரம்மம் உணரப்படுகிறது என்பதற்கு ப்ரம்மத்தை அறிந்தவர்கள் அதாவது உணர்ந்தவர்கள் தான் ஸாக்ஷி. நம்மிடயே சமீப காலம் வரை வாழ்ந்த பல மகான்கள் ஸாக்ஷி. ராம கிருஷ்ண பரம ஹம்ஸர், பகவான் ரமணர் போன்றவர்கள் ஜீவன் முக்தர்களாக அதாவது இந்த வாழ்க்கையிலேயே ப்ரம்மத்தை உணர்ந்தவர்களாக இருந்து வந்தனர். அதே போல தமிழ் நாட்டின் சிவனடியார்களும் ஆழ்வார்களும் விட்டுச் சென்ற பதிகங்களில் இதே கருத்துக்களைத் தெளிவாகக் காணமுடியும்.

அருணகிரிநாதர் முருகப் பெருமானின் அருள் பெற்று அனுபூதி அடைந்த பிறகு அதாவது ப்ரம்மத்தை உணர்ந்த பிறகு பாடிய கந்தரனுபூதியில் பல பாட்டுக்களில் இதே கருத்தை தெரிவிக்கிறார். அந்த ப்ரம்மத்தை உணர்ந்த பிறகு அவருக்கு என்ன ஆயிற்று என்றால்

"செறிவற்று உலகோடு உரைசிந்தையும் அற்று
அறிவற்று அறியாமையும் அற்றதுவே".

பிறகு என்ன ஆயிற்று?

யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

ப்ரம்மத்தை உணர்ந்த பிறகு "நான்" என்பது போயிற்று. அதற்குப் பிறகு வேறு பிறவி கிடையாது என்பதையே தற்பரமாகிய ப்ரம்மத்தில் நிலையாக நின்று விட்டதாக விளக்குகிறார். ப்ரம்மத்தை அறிந்தவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை இன்னொரு பாட்டில் அழகாக வர்ணிக்கிறார்.

அறிவொன்று அறநின்று அறிவார் அறிவில்
பிறிவொன்று அறநின்ற பிரானலையோ?
செறிவொன்று அறவந்து இருளே சிதைய
வெறிவென்று அவரோடு உறும் வேலவனே.

அதுவும் சரி, அந்த ப்ரம்மம் இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டால் இந்த ப்ரபஞ்சத்தையும் அதில் இருக்கும் ஸ்தாவர ஜங்கம வஸ்துக்கள், உயிரினங்கள், கோள்கள், நக்ஷத்திரங்கள், அவைகளின் கூட்டங்கள் எல்லாமே ப்ரம்மத்தால் உண்டாக்கப் பட்டன, அவை எல்லாம் அவனாலேயே இயக்கப் படுகின்றன, கடைசியில் அவனிலேயே லயிக்கப் (அதாவது திரும்பி ப்ரம்மத்திலேயே அடங்கப்) போகின்றன என்ற பதில் கிடைக்கும். யோகீஸ்வர யாக்ஞவல்கியர் ஜனக மகாராஜாவின் சபையில் நடந்த விவாதத்தில் கார்கி அம்மையாருக்கு ப்ரம்மத்தைப் பற்றி சொல்கிறார் "ஓ கார்கி, இந்த அக்ஷரத்தின் (ப்ரம்மத்தின்) கட்டளைப் படியே சூரியனும் சந்திரனும் தங்களது ஒழுங்கான பாதையில் செல்கிறார்கள், இந்த அக்ஷரத்தின் (ப்ரம்மத்தின்) கட்டளைப் படியே பூமியும் ஆகாசமும் அதனதன் இடத்தில் இருக்கின்றன, இந்த அக்ஷரத்தின் (ப்ரம்மத்தின்) கட்டளைப் படியே நிமிஷங்கள், மணிகள், நாட்கள், இரவுகள், பகல்கள், மாதங்கள், வளர் பிறைகள், தேய் பிறைகள், பருவங்கள், வருடங்கள் தங்கள் தங்கள் கணக்கின் படி வருகின்றன, இந்த அக்ஷரத்தின் (ப்ரம்மத்தின்) கட்டளைப் படியே கிழக்கே ஓடும் நதிகள் கிழக்கிலும், மேற்கே ஓடும் நதிகள் மேற்கிலும் மாறாமல் செல்கின்றன".

இந்த அத்வைத சித்தாந்தத்தையே மேற்கண்ட சாந்தி பாடம் எடுத்துச் சொல்கிறது. மறைகளில் (வேதங்களில்) அது என்பது அந்த ப்ரம்மத்தையும் இது என்பது இந்த ஜீவனையும் குறிக்கும். இந்த சாந்தி பாடத்தில் மூன்று விஷயங்கள் சொல்லப்படுகின்றன. ப்ரம்ம்ம் அல்லது ஈச்வரனும், ஜீவனும் ஒன்றே, ப்ரம்மத்திடமிருந்தே ஜீவன் தோன்றியது, ஜீவனின் உருவத்தையும் பெயரையும் நீக்கிப் (மறந்து விட்டுப்) பார்த்தால் ப்ரம்மமே மிஞ்சுகிறது. இந்த சாந்தி பாடம் இன்னொருவிதமாகவும் விளக்கப் படுகிறது, அந்த ஈச்வரன் முழுமையானவர், இந்த ப்ரபஞ்சம் முழுமையானது. முழுமையான ப்ரபஞ்சம் முழுமையான ஈச்வரனிடமிருந்து தோன்றியது. முழுமையான ப்ரபஞ்சத்தின் உருவத்தையும் பெயரையும் நீக்கிப் பார்த்தால் முழுமையான ஈச்வரனே மிஞ்சும்.

இப்பொழுது முதல் அடியான पूर्णमदः पूर्णमिदं - பூர்ணமத: பூர்ணமிதம், என்பதை எடுத்துக்கொள்வோம்.

இங்கு வரும் முதல் பூர்ணம் ப்ரம்மத்தைக் குறிக்கிறது. பூர்ணம் என்ற சம்ஸ்க்ருத பதத்திற்கு அளவில்லாதது, காலத்தாலும் இடத்தாலும் வரையறுக்கப் படமுடியாதது, முழுமையானது, நிறைவானது என்று கூறலாம். எவ்விதத்தில் முழுமையானது என்றால் எல்லா விதத்திலும், அதாவது ஒளியில் எல்லாம் ஒளியானது, இதை விட ஒளிர்வானது வேறு கிடையாது, மற்ற ஒளிகளெல்லாம் (சந்திரன், சூரியன் முதலியவை எல்லாம் இதனிடமிருந்தே ஒளியைப் பெற்றன. அறிவில் எல்லாம் முழுமையான அறிவு. அறிவின் செறிவு (विज्ञान् घन), இதை தெரிந்து கொண்டால் மற்ற எல்லாவற்றையும் அறிய முடியும். இது எங்கும் நிறைந்தது, இதுவே எல்லாவற்றின் மூலப் பொருள் இது இல்லாத இடம் இல்லை. இது வேறு ஒன்றிலிருந்தும் தோன்றவில்லை. தானாகவே தோன்றியது. நேற்று இருந்தது, இன்று இருக்கிறது, நாளையும் இருக்கும். ஆக காலத்தைக் கடந்தது.

இரண்டாவது பூர்ணம் ஜீவனைக் குறிக்கிறது. ஜீவன் என்பது ஒரு வரையறைக்கு உட்பட்டதாகத் தெறிகிறது. ஜீவன் என்று சொல்லும் பொழுது ஒரு மனிதனின், அல்லது

விலங்கின், உயிரினங்களின், தாவரங்களின் உள்ளிருக்கும் ஒரு சக்தியே. இந்த சக்தி உருவம், பெயர் (மனிதன், விலங்கு என்ற பெயர்), கொண்டதாகக் காணப் படுகிறது. குறிப்பிட்ட காலம் வரையிலேயே இருக்கிறது. ஆனால் இந்த முதல் அடி இரண்டுமே பூர்ணம் என்று கூறுகிறது. இது ஒரு முரண்பாடு போலத் தோன்றுகிறது.

இவை இரண்டும் ஒன்றே என்பது எப்படி என்று ஒரு உதாரணம் மூலம் பார்ப்போம்.

கடல் இருக்கிறது, கடலில் அலை இருக்கிறது, கடல் என்பதற்கு ஒரு உருவமும் கடல் என்ற பெயரும் இருக்கிறது அதே போலத்தான் அலைக்கும் ஒரு உருவமும் அலை என்ற பெயரும் இருக்கிறது. ஆனால் இரண்டுமே தண்ணீரின் வேறான உருவங்களே, அல்லது பரிணாமங்களே. இந்த உருவங்களை மறந்தோமானால் இரண்டுமே தண்ணீர் தான்.

ப்ரம்மம் முழுமையானது. ஜீவன் உருவமும் பெயரும் கொண்டது போலத் தோன்றினாலும் அதுவும் முழுமையானது. இரண்டு முழுமையான அதாவது வரையறுக்க முடியாத விஷயங்கள் இருக்க முடியாது, ஆகவே அவை இரண்டும் ஒன்றே. ப்ரம்மமே உலகெங்கும் பல பொருள்களாக் தோற்றம் அளிக்கிறது. ப்ரம்மமே எல்லாவற்றிற்கும் ஒரே மூலப்பொருள். அதுவே எல்லாமாக வியாபித்திருக்கிறது.

இன்னொரு உதாரணமும் சொல்லலாம். ஒரு பிரயாணி இருட்டில் ஒரு கம்பத்தைப் பார்த்து விகாரமான தலை அங்கங்கள் கொண்ட பேயாக நினைத்துப் பயப் படுகிறான். ஒரு தீப் பந்தத்தை ஏற்றிப் பார்த்தவுடன் அது பேய் அல்ல என்ற பயம் நீங்குகிறது. முதலில் அவன் அறியாமையால் உண்மயான சொரூபத்தை தெரிந்து கொள்ளாமல் பிரமை கொண்டிருந்தான், அதாவது ஒரு விதமான மாயையில் இருந்தான். மருள் நீங்கியவுடன் உண்மை தெரிந்தது.

அதே போல நமது அஞ்ஞானத்தினால், மாயையினால், ஜீவனின் உண்மையான தத்துவம் ஆத்மா, அதுவே ப்ரம்மம் என்று அறியாமல் இருக்கிறோம். இந்த முதல் அடி ஜீவன் ப்ரம்மனும் ஒன்றே, ப்ரம்மம் எப்படி முழுமையானதோ அவ்வாறே ஜீவனும் எல்லா விதத்திலும் முழுமையானது என்று எடுத்துக் காட்டுகிறது.

இந்த மந்திரத்தின் கருத்து சத்தியம் இரண்டற்ற ஒன்று, எங்கும் நிறைந்தது, நித்தியமானது என்பது. இந்த எல்லையற்ற சத்தியமே நம்முள்ளே இருக்கும் ஜீவப் பொறி. இதை அனுபவித்த மேன்மை வாய்ந்த தீர்க்கதரிசிகள் இந்த சத்தியத்தின் மீது பல வகையான நிலையற்ற உருவங்களும் பெயர்களும் சுமத்தப் பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் சிந்தனையின் சிகரத்திலிருந்து பார்க்கும் பொழுது இந்த பல ரூபம் கொண்ட உலகம் அவர்களுக்கு கம்பத்தில் தோன்றும் பேய் போல பொய்யானது என்று தெரிகிறது.

இரண்டாவது விஷயத்தை எடுத்துக்கொள்வோம். पूर्णात् पूर्णमुदच्यते - பூர்ணாத் பூர்ணமுதச்யதே இதன் பொருளானது ப்ரம்மம் அல்லது பரமாத்மாவிடமிருந்து ஜீவன் தோன்றியது என்பது. ப்ரம்மம் உருவமற்றது, அது முதலில் உலகை ச்ருஷ்டி செய்வதற்காக ஹிரண்யகர்ப்பராக உருக்கொண்டது. ஹிரண்யகர்ப்பர் உயிர்களைப் படைத்தார் என்று வேதம் கூறுகிறது.

பெயரும் உருவமும் கொண்ட தண்ணீராலான கடலிலிருந்து பெயரும் உருவமும் கொண்ட தண்ணீராலான அலை தோன்றியது. அதே போல பெயரும் உருவமும் கொண்ட ப்ரம்மத்திடமிருந்து (ஹிரண்யகர்ப்பரிலிருந்து) ஜீவன் தோன்றியது. ஒன்றிலிருந்து இன்னொன்று தோன்றியது என்றால் மூலப் பொருளின் ஒரு பகுதியாக இருக்கும் அல்லது மூலப் பொருளே அழிந்து விடும். உதாரணமாக களி மண்ணிலிருந்து சிறிது எடுத்து பானை செய்யலாம். களி மண்ணின் மற்ற பகுதி மிஞ்சி இருக்கும். ஒரு விதையிலிருந்து மரம் வளர்ந்தால் விதையானது அழிந்து விடும். ப்ரம்மத்திலிருந்து ஜீவன் தோன்றுவது அப்படிப் பட்ட தோற்றம் அல்ல என்பதை இரண்டுமே பூர்ணம் என்று இங்கு எடுத்துக் காட்டப் படுகிறது. ப்ரம்மத்திற்கு என்னென்ன குணங்கள் உண்டோ அவையனைத்தும் ஜீவனுக்கும் உண்டு, ப்ரம்மமே எங்கும் வியாபித்திருக்கிறது என்று இந்த இரண்டாவது வாக்கியம் உறுதிப் படுத்துகிறது.

இப்பொழுது மூன்றாவது விஷயத்துக்கு வருவோம். फूर्णस्य पुर्णमादाय पूर्णमेवावशिष्यते இதன் உண்மையான பொருள் பூரணமான ஜீவன் பூரணமான ப்ரம்மத்தில் ஒடுங்குகிறது. கடல் அலை உதாரணத்தில் அலைக்கு கடல் காரணம், அலை அதன் விளைவு. கடல் இல்லை என்றால் அலை இருக்க முடியாது. மனதால் அலையை நீக்கி விட்டுப் பார்த்தோமானால் மிஞ்சுவது கடல் ஒன்றே. அதே மாதிரி ப்ரம்மம் காரணம், ஆத்மா விளைவு எனவே ஆத்மாவின் பெயர், உருவம் இவற்றை நீக்கினால் ப்ரம்மமே மிஞ்சும். இதையே திருமூலர் திருமந்திரத்தில் கூறுகிறார்:

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்.

इदं இதம் என்ற சொல்லுக்கு இந்த ப்ரபஞ்சம் என்று எடுத்துக் கொண்டு ப்ரம்மத்திடமிருந்தே இந்த ப்ரபஞ்சம் தோன்றியது, இந்த ப்ரபஞ்சத்தை நீக்கினால் மிஞ்சுவது ப்ரம்மமே, ப்ரபஞ்சம் ப்ரம்மத்திலேயே ஒடுங்கும் என்றும் விளக்கம் கூறப் படுகிறது.

இந்த சாந்தி பாடமானது ப்ரம்மமும் ஆத்மாவும் ஒன்று, ஆத்மா அல்லது ஜீவன் ப்ரம்மத்திலிருந்தே வந்தது, ஆத்மா ப்ரம்மத்திலேயே அடங்குகிறது என்று கூறுகிறது. ஆக இந்த மந்திரம் “ப்ரம்மைவ சத்யம், ஜகன் மித்யா, ப்ரம்மைவ ந பர:” - ப்ரம்மம் சத்யம், உலகம் மாயை (நிலையற்றது), ப்ரம்மத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற அத்வைத சித்தாந்தத்தை பிரகடனம் செய்கிறது.

############

# மந்திரம் 1.

இந்த உபநிஷத்தின் முதல் இரண்டு மந்திரங்கள் இதன் மூலக் கருத்தை சுருக்கமாக கூறுகின்றன. மூன்றாவதிலிருந்து எட்டு வரையான மந்திரங்கள் முதல் மந்திரத்தின்

விளக்கமாகவும் ஒன்பதிலிருந்து பதினெட்டு வரையுள்ள மந்திரங்கள் இரண்டாவதின் விளக்கமாகவும் அமைகின்றன.

**ईशा वास्यमिदँसर्वं यत्किञ्च जगत्यां जगत् ।**

**तेन त्यक्तेन भुञ्जीथाः मा गृधः कस्यस्विद् धनम् ॥** 1.

ஈசா வாஸ்யமிதம்ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் |
தேன த்யக்தேன புஞ்ஜிதா: மாக்ருத: கஸ்யஸ்வித் தனம் ‼

जगत्यां ஜகத்யாம் - பூமியில் यत्किञ्च யத்கிஞ்ச - யாதொரு जगत् ஜகத் - எவை உண்டோ इदं सर्वं இதம் ஸர்வம் - அவை அனைத்தும் ईशा वास्यं ஈசா வாஸ்யம் - ஈச்வரனால் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது तेन त्यक्तेन தேன த்யக்தேன - அவைகளை தியாகம் செய்து भुञ्जीथाः புஞ்ஜீதா: - (உன்னை) காப்பாற்றிக் கொள் कस्यस्विद् கஸ்யஸ்வித் - யாருடைய धनम् தனம் - பொருளையும் मा गृधः அபகரிக்க இச்சை கொள்ளாதே.

பூமியில் எவை உண்டோ அவை அனைத்தும் ஈச்வரனால் ஏற்பட்டிருக்கிறது, அவனால் ஆக்ரமிக்கப் பட்டிருக்கிறது (உனது என்று ஒன்றும் இல்லை) எனவே அவைகளை தியாகம் செய்து உன்னைக் காப்பாற்றிக் கொள், எந்த விதமான, யாருடைய பொருளையும் அபகரிக்க இச்சைப் படாதே.

விளக்கம்

இந்த மந்திரத்தில் முதல் பாகத்தில் ஈச்வரன் எப்படி உலகம் பூராவும் உள்ளவற்றில் வியாபித்திருக்கிறான் என்றும் அப்படிப் பட்ட ஈச்வரனை அடைவதற்கு என்ன வழி என்றும் கூறப் படுகிறது. சாந்தி பாடத்தில் ப்ரம்மமும் ப்ரபஞ்சமும் ஒன்றே, இந்த ப்ரபஞ்சம் ப்ரம்மத்தின் தோற்றமே என்று சொல்லப் பட்டது. இங்கு ஈச்வரனைப் பற்றி சொல்லப் படுகிறது. ப்ரம்மம் இந்த உலகைப் படைப்பதற்காக ஏடுத்துக் கொண்ட தோற்றமே ஈச்வரன். ஆக ஈச்வரனும் ப்ரம்மமும் ஒன்றே.

இந்த பூமியில் உள்ள எல்லாமே ஈச்வரனால் வியாபிக்கப் பட்டிருக்கிறது, வியாபித்தல் என்றால் எவ்வாறு ஒரு துணி நூலினால் நெய்யப் பட்டிருக்கிறதோ அது போல இருப்பதைக் குறிக்கிறது. அதாவது ஈச்வரனே இந்த உலகத்தின் மூலப் பொருள். வேறு ஒரு மூலப் பொருள் கிடையாது. ஈசா என்ற வார்த்தையின் மூலம் ஈஷ்டே அதாவது கட்டளை, ஆட்சி செய்தல், தூண்டுதல் என்று பொருள். அவனது கட்டளைப் படியே எல்லாம் இயங்குகின்றன. பூமியில் உள்ள ஜடப் பொருட்கள், தாவரங்கள், உயிரினங்கள் எல்லாமே ஈச்வரனின் மறு தோற்றமே. இவைகளை இயக்குவதும் ஈச்வரன், மாற்றங்களும் ஈச்வரனால் ஏற்படுகின்றன. இதையே கம்பநாட்டாழ்வார் கூறுகிறார்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ ருத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

இதைக் கேட்டவுடன் ஒரு சந்தேகம் எழக் கூடும். ஒரு பொருளைச் செய்ய வேண்டும் என்றால் அதற்கு ஒரு கர்த்தா (செய்பவர்) வேண்டும், அதற்கு ஒரு மூலப் பொருள் வேண்டும், அதைச் செய்ய வழிமுறை தெரிந்திருக்க வேண்டும். இங்கு ஈச்வரனே கர்த்தா, ஈச்வரனே மூலப் பொருள், செய்யும் முறையும் அவனே என்பது சரியாகப் படவில்லையே என்பதே கேள்வி. அதற்கு பதில் ஈச்வரன் சர்வ வல்லமை படைத்தவன், செயற்கரிய செயல்களைச் செய்யும் திறமை படைத்தவன், அவனது ஆற்றல்களை அளவிடமுடியாது, நமக்கு ஏற்பட்ட விதிகள் அவனுக்கு கிடையாது என்பது தான் பதில்.

நாம் கண்கூடாக பார்க்கும் ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு பெரிய ஆலமரம் ஒரு சிறு விதையிலிருந்து உண்டாகிறது. சிறு விதையே வேராக, கிளையாக, இலையாக, காயாக, பழமாக, விழுதாக பரிணமிக்கிறது. அந்த விதைக்கு இத்தகைய அறிவு எங்கிருந்து வந்தது எப்படி வந்தது, ஒரு சிறு விதை எப்படி மிகவும் வேறு பட்ட, மாறான பொருட் களாக மாறியது? அது இயற்கை என்று அறிவு ஜீவிகள் சொல்லக் கூடும். அந்த இயற்கை என்பது என்ன? அதற்கு உருவம் உண்டா, அதன் சக்தியை அளவிட்டுக் கூற முடியுமா என்ற கேள்விகளுக்கு பதில் கிடைக்காது.

வாஸ்யம் என்றால் மறைக்கப் பட்டிருக்கிறது என்ற ஒரு பொருளும் உண்டு. அதன் படி பார்த்தோமானல் இந்த பூமியில் உள்ள எல்லாவற்றிலும் ஈச்வரன் இருப்பது மறைக்கப் பட்டிருக்கிறது என்றாகும். இந்த மறைக்கும் சக்திக்கு திரோதானம் என்று கூறுவர். அதுவும் ஈச்வரனின் ஒரு விளையாட்டே. ஒரு அழுக்கடைந்த ஈரமுள்ள சந்தனக் கட்டையைத் சுத்தம் செய்து தேய்த்தவுடன் அதனது உண்மையான சுகந்தம் வெளிப்படுகிறது. அதற்கு முன்பு அதில் சுகந்தம் மறைந்திருந்தது. அதே போல ஈச்வரன் எல்லாவற்றிலும் மறைந்திருக்கின்றான். உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் இந்த ஈச்வரனை எப்படி அறிவது என்பதற்கு வழியும் சொல்லப் படுகிறது.

அந்த வழி இந்த உலகத்தையும் அதில் உள்ளவற்றையும் தியாகம் செய்து உன்னைக் காப்பாற்றிக்கொள் என்பது. எதற்காக தியாகம் செய்ய வேண்டும்? ஈச்வரனை அடைய வேண்டுமானால் இந்த உலகத்தையும் அதில் உள்ள எல்லாவற்றையும் தியாகம் செய்தாலே உண்மை மெய்ப் பொருளான ஈச்வரனை அடைய முடியும். சரி, எதிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும்? உலகில் உள்ள எல்லா பொருள்களும் முதலில் இன்பம் கொடுத்தாலும் முடிவில் துன்பத்தையே கொடுக்கின்றன. மனிதப் பிறவியில் அநுபவிக்கும் இன்பம் நிலயானது அல்ல. நிலையான இன்பம் ப்ரம்மத்தை அறிந்து முக்தி பெறுவது தான் என்று வேதங்களும் உபநிஷத்துக்களும் கூறுகின்றன. ஆகவே மனிதனாகப் பிறந்ததின் உன்னத நோக்கம் ப்ரம்மத்தை அடைவது. அதற்கான வழி முறைகளையும் அவை விளக்கிச் சொல்லுகின்றன. அப்படி முக்தி பெறாதவர்கள் மறுபடி மறுபடி பல பிறவிகள் எடுத்து துன்பப் படுகிறார்கள். அத்தகைய துன்பத்திலிருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள் என்பதே இந்த மந்திரத்தில் அறிவுறுத்தப் படுகிறது..

பிறவி எடுத்தால் ஏன் துன்பம் என்று ஆராய்ந்தால் பிறந்தவர்கள் ஏதாவது வினை அல்லது கர்மா செய்தே ஆகவேண்டும். நல்ல வினைக்கு நல்ல பலனும் கெட்ட வினைக்கு கெட்ட பலனும் அனுபவித்தே ஆகவேண்டும். அதற்காக மறு பிறவி அவசியம் ஆகிறது. முற்

பிறவியில் செய்த கர்மாக்களுக்காக அடுத்த பிறவி என்று ஒரு சுழலில் மாட்டும் படி ஏற்படுகிறது. இதையே மாணிக்கவாசகர் அழகாகச் சொல்லுகிறார்.

“பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி, முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்”

எனவே மனிதன் அடுத்த பிறவியில் எதுவாகப் பிறப்பான் என்பது அவன் இப்பிறவியில் செய்த வினையைப் பொருத்திருக்கிறது என்பதும் தெளிவாகிறது. மனிதனுக்குத்தான் சுயமாக சிந்தித்து தான் வாழும் வழியை தேர்ந்து கொள்ள முடியும், மற்ற ஜீவராசிகளால் அது முடியாது. மனிதனாக இருக்கும் போதே இந்தப் பயங்கரமான பிறவிச் சுழலில் இருந்து வெளி வர வழி தேட வேண்டும். அது தான் இந்த உலகத்தைத் துறந்து பொருளாசையை விட்டு உலகின் உண்மையான ஸ்வரூபம் ஈச்வரனே என்பதை அறிந்து வாழ்வது. இப்படிப் பட்ட வழியை எவ்விதமாக மேற்கொள்வது என்பது பின்னால் விளக்கப் படுகிறது.

இந்த மந்திரத்தின் கருத்துக்கள் ச்வேதாச்வர உபநிஷத்திலும் கூறப் படுகிறது

एको देव: सर्वभूतेषु गूढ: सर्वव्यापी सर्वभूतान्तरात्मा ।
कर्माध्यक्ष: सर्वभूताधिवास: साक्षी चेता केवलो निर्गुणश्च ॥

ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வ வியாபீ ஸர்வபூதாந்தராத்மா |
கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஸ்ச ||

கடவுள் ஒருவரே, எல்லாவற்றிலும் அவர் மறைந்திருக்கிறார். அவர் எங்கும் நிறை பொருள். எல்லாவிடத்திலும் ஊடுருவி இருப்பவர், கர்மாக்களை கண்காணிப்பவர். உயிர்கள் அனைத்துக்கும் அவரே இருப்பிடம். சாக்ஷியாகவும், சுத்த சைதன்யமாகவும் நிர்குணமானவராகவும் (குணமற்றவராகவும்) இருக்கிறார்.

இந்த மந்திரத்தில் तेन त्यक्तेन தேன த்யக்தேன என்று சொல்லுவதால் ஈச்வரனை அடைவதற்கு துறவறம் ஒரு வழி என்று தெரிகிறது. மற்றவர் பொருளுக்கு இச்சைப் படாதே என்று கூறுவதனால் அப்படி துறவறம் எடுத்துக் கொண்டவர்கள் கூட ஆசைக்கு ஒரு பொழுதும் இடம் கொடுக்கக் கூடாது என்பதும் தெளிவாகிறது.

कस्यस्विद् கஸ்யஸ்வித் என்பதை கேள்வியாக “யாருடையது என்று நினைத்தாய்?” என்றும் எடுத்துக் கொண்டு, இது எல்லாமே ஈச்வரன், உன்னுடையது அல்ல எனவே அதை அபகரிக்க இச்சை கோள்ளாதே என்றும் பொருள் சொல்லுவதும் உண்டு.

இனி அடுத்த மந்திரத்தில் துறவறம் பூண முடியாதவர்களும் அதில் நாட்டம் இல்லாதவர்களும் என்ன செய்ய முடியும் என்று சொல்லப் படுகிறது.

# மந்திரம் 2.

## மனிதர்களுக்கு ஏற்ற கர்ம விதி

முதல் மந்திரத்தில் ஈச்வர அறிவும் அதை அடைய துறவு மார்க்கமும் பேசப்பட்டது. துறவு மார்க்கத்தை எல்லோராலும் மேற்கொள்ள முடியாது. மற்றவர்கள் எவ்வாறு கர்மத்தையே செய்து ஈச்வரனை அடைய முடியும் என்று இரண்டாவது மந்திரம் கூறுகிறது.

**कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतँसमाः ।**
**एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे॥** 2.

குர்வன்னேவேஹ கர்மாணி ஜிஜீவிசேச்சதம்ஸமா: |
ஏவம்த்வயி நான்யதேதோஸ்தி ந கர்ம லிப்யதே நரே || 2

इह இஹ - இங்கு (இவ்வுலகில்) कर्माणि கர்மாணி - கர்மங்களை कुर्वन् एव குர்வன் ஏவ - செய்து கொண்டுதான் शतं समाः ஶதம் ஸமா: - நூறு வருடங்கள் जिजीविषेत् ஜிஜீவிஷேத் -வாழ விரும்ப வேண்டும் एवं नरे त्वयि ஏவம் நரே த்வயி - இப்படி விரும்புகிற உனக்கு इतः अन्यथा இத: அன்யதா - இதைத் (செயலில் ஈடுபடுவதைத்) தவிர வேறு வழி न अस्ति ந அஸ்தி - கிடையாது कर्म नरे न लिप्यते கர்ம நரே ந லிப்யதே - (இவ்விதம் வாழ்வதனால்) செயல் (அதன் பலன்) மனிதனை பந்தப் படுத்தாது.

பொருள்

இந்த உலகில் கர்மங்களைச் செய்து கொண்டுதான் நூறு வருஷங்கள் வாழ விரும்ப வேண்டும். கர்மங்களைச் செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது. அந்த கர்மங்கள் பந்தத்தை உண்டு பண்ணாது.

விளக்கம்:

முதல் மந்திரத்தில் ஈச்வரனை அடைய ஒரு மார்க்கமான துறவு வழி சொல்லப் பட்டது. இங்கு இரண்டாவதாக ஞான மார்க்கத்திற்கு செல்வதற்கு தகுதியாக நிஷ்காம்ய கர்ம வழி சொல்லப் படுகிறது. கர்ம வழி இல்வாழ்க்கையில் ஈடு பட்டவர்களுக்கு ஏற்பட்டது.

சாதாரணமாக மனிதர்கள் நீண்ட காலம் வாழ விரும்புவார்கள். எந்த விதமாக நூறு வருஷங்கள் வாழவேண்டும் என்பது இங்கு தெளிவு படுத்தப் படுகிறது. மேலும் இதை பல வருஷங்கள் செய்ய வேணும் என்பதை இங்கு சொல்லுகிறது.

இதில் குறிப்பிடப் படும் கர்மங்கள் வேதங்களில் அவரவர்களுக்கு விதிக்கப் பட்ட கர்மாக்கள் ஆகும். வேதங்களில் பஞ்ச மஹா யக்ஞம் என்று கூறப்படும் ரிஷி யக்ஞம், தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பூத யக்ஞம் எனப்படுபவை ஆகும். ரிஷி யக்ஞம் சாஸ்திர ரீதியான அதாவது வேதம், இதிஹாஸம், புராணம் முதலியவைகளைப் படிப்பது. தேவ யக்ஞம் அக்னி ஹோத்ரம் முதலிய யக்ஞங்களை செய்வது, பித்ரு யக்ஞம் தனது

முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய கர்மாக்கள். மனுஷ்ய யக்ஞம் மற்றவர்களுக்காக உதவி செய்வது அன்ன தானம் முதலிய தானங்களைச் செய்வதாகும். பூத யக்ஞம் பசு மற்றும் இதர ஜீவராசிகளைக் காப்பாற்றுவது அதற்கான காரியங்களைச் செய்வது என்பதாகும். இவை தவிர தனது நலனை விரும்பி செய்யும் வேறு யக்ஞங்களும் உண்டு. உதாரணமாக மகன் பிறக்க வேண்டும், பொருள் வேண்டும் என்றும் செய்வதுண்டு. அதை வேதம் கண்டிப்பதில்லை. ஆனால் பொது நலனைக் கருதி உண்மையுடனும், முயற்சியுடனும் செய்யும் யக்ஞங்களையே வேதம் போற்றுகிறது, ஏனெனில் இவையே மனத்தூய்மையை அளிக்க உதவும். பொது நலனைக் கருத்தில் கொண்டு மனத்தூய்மையோடு செய்யும் கர்மாக்களும் மற்ற பலன்களையும் கொடுக்கும். அவ்விதமான கர்மாக்களை வேதங்கள் விதித்த முறைப் படி ஈச்வரார்ப்பணம் (பலன் ஈச்வரனுக்கே) என்று செய்தால் அந்த பலன்கள் செய்தவரை கட்டுப் படுத்தாது. இங்கு சொல்லப்படும் கருத்தையே பகவத் கீதையில் மூன்றாவது அத்யாயத்தில் மிக விவரமாக பகவான் கிருஷ்ணர் விளக்குகிறார்.

नियतं कुरु कर्म एवं कर्म ज्यायौ ह्यकर्मण: ।
शरीरत्रापि च ते न प्रसिद्ध्येदकर्मण: ॥ Gita 3.8

இதன் பொருள், வேதத்தில் விதிக்கப் பட்ட நித்திய கர்மத்தை நீ செய். செயலின்மையை விடச் செயல் சிறந்தது. ஒன்றும் செய்யாதவனால் உடலைப் பேணுதல் கூட இயலாது.

यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धन: ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्ग: समाचर ॥ Gita 3.9

யக்ஞ கர்மம் தவிர மற்ற கர்மத்தால் இவ்வுலகம் கட்டுப் படுகிறது. குந்தியின் மைந்தா, யக்ஞத்துக்கான கர்மத்தைப் பற்றற்று நன்கு இயற்று.

தனி நலம் கருதாத புண்ணியச் செயல், தியாக புத்தியோடு செய்யும் சேவை, உலகத்தின் நன்மைக்கென்றே செய்யும் செயல், ஈச்வரஆராதனையாக ஆற்றும் வினை, நமக்கு என்ன லாபம் கிடைக்கும் என்று கருத்தில் கொள்ளாமல் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேடும் என்ற ஒரே நோக்கத்தோடு செய்யப் படும் கர்மம் ஆகிய இவை யாவும் யக்ஞம் என்று அழைக்கப் படுகிறது. இந்த மாதிரி கர்மங்கள் மனதையும், புத்தியையும் சுத்தம் செய்வதால், அவைகளைச் செய்பவர் நாளடைவில் ஞான மார்க்கத்திற்கு தகுதியானவர் ஆகிறார்.

மேலும் பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையில், ஜனகர் முதலியவர்கள் ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டே கர்ம மார்க்கத்தைக் கடைப் பிடித்து முக்தி அடைந்தார்கள் என்றும் எடுத்துக் கூறுகிறார்.

ஆக யாராயிருந்தாலும் கர்மாக்கள் செய்து கொண்டுதான் இருக்க முடியும் வெறு வழியில்லை, ஆகவே சாஸ்திர முறைப்படி கர்மாக்களைச் செய்து அதன் பலனை ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்தால் அந்த கர்மாவின் பலன் நம்மை கட்டுப் படுத்தாது.

முதல் இரண்டு மந்திரங்கள் மனத்தூய்மை அடைய இரண்டு வித்தியாசமான வழிகளைக் கூறியது. எந்த வழியைப் பின்பற்றினாலும் மனதால் இவ்வுலகப் பற்றைத் துறந்து நல்ல

குருவின் உபதேசம் பெற்று இடை விடாது ஆத்மாவப் பற்றிக் கேட்பது, சிந்திப்பது, தியானம் செய்வது போன்ற ஆத்ம விசாரத்தில் ஈடு படுவது தான் ஆத்மாவை அறியும் வழி. சங்கர பகவத் பாதர் இதைப் பற்றி சொல்லும் பொழுது ஒருவன் தன் தலையில் தீப் பற்றி விட்டால் எதையாவது செய்து அதை அணைக்க முற்படுவானோ அதே தீவிரத்தை ஆத்ம விசாரத்திலும் காண்பிக்க வேண்டும் என்று கூறுகிறார். அடுத்து வரும் மந்திரத்தில் ஆத்மாவைப் பற்றி தெரிந்து கொள்ளாதவன் என்ன கதி அடைகிறான் என்று சொல்லப் படுகிறது.

#############

# மந்திரம் 3.

அஞ்ஞானியை நிந்தித்தல்

**असुर्या नाम ते लोका: अन्धेन तमसावृता: ।**

**ताँस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जना:** ॥ 3.

அஸுர்யா நாம் தே லோகா: அந்தேன தமஸாவ்ருதா: |
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி யே கே சாத்மஹனோ ஜனா: || 3

आत्महन: ஆத்மஹன - ஆத்மனை அழித்த जना: ஜனா: - மனிதர்கள் ये के च யே கே ச - எவர்களோ ते தே - அவர்கள் असुर्या அஸுர்யா - அஸுர்யா (என்ற) नाम நாம - பெயருடைய अन्धेन तमसा அந்தேன தமஸா - அடர்ந்த இருளால், அறியாமையால் आवृता: ஆவ்ருதா - மறைக்கப் பட்ட ते लोका: தே லோகா: - எந்த லோகங்கள் உண்டோ तान् தான் - அவைகளை प्रेत्य ப்ரேத்ய - இறந்த பிறகு अभिगच्छन्ति அபிகச்சந்தி - அடைகிறார்கள்.

ஆத்மாவை அழித்த மனிதர்கள் எவர்களோ அவர்கள் அஸுர்யா என்ற பெயருடைய அடர்ந்த இருளால் மறைக்கப் பட்ட எந்த லோகங்கள் உண்டோ அந்த லோகங்களை, இறந்த பின் அடைகிறார்கள்.

விளக்கம்

இந்த மந்திரத்தில் முதல் இரண்டு மந்திரங்களில் சொல்லப் பட்ட வழிகளைக் கடைப் பிடிக்காத ஆத்மாவைப் பற்றி அறியாதவனை, அக்ஞானியை, கண்டனம் செய்யப் படுகிறது. அவன் அடையும் கதியைப் பற்றிச் சொல்லுகிறது. மறை முகமாக ஆத்ம அறிவின் சிறப்பைப் பற்றிச் சொல்லப் படுகிறது.

இங்கு “ஆத்மாவை அழித்த” (आत्महन:) என்ற சொல் வருகிறது. ஆத்மா அழியாதது அதற்கு பிறப்பும் இறப்பும் இல்லை என்றே எல்லா உபநிஷத்துக்களும் வேதங்களும் கூறுகின்றன. ஆகவே அழித்த என்ற மொழி பெயர்ப்பு சரியல்ல. ஆத்மாவைப் பற்றி தெரிந்து கொள்ளாதவன் என்பதே இங்கு பொருந்தும். ஒரு மனிதன் கோமாவில் (coma) கிடந்தால்

அவன் செத்த மனிதனுக்குச் சமானமே, அவனால் மற்றவர்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடையாது. இன்னொரு உதாரணம். நாம் ஒரு சிறிய பர்சில் பணம் எடுத்துக் கொண்டு கடைக்குச் செல்கிறோம். கடையில் சாமான் வாங்கி விட்டு பர்சைத் தேடுகிறோம். அப்பொழுது அது கிடைக்கவில்லை. சாமான் வாங்காமல் திரும்புகிறோம். ஆனால் வீட்டில் வந்த பிறகு நமது பையிலேயே இருந்து அந்த மணி பர்ஸ் கிடைத்து விடுகிறது. பணம் நம்மிடம் இருந்தும் அது நமக்கு கடையில் வேண்டும் போது உதவவில்லை. அதே போல எல்லா மனிதர்களிடமும் ஆத்மா இருந்தும் பலர் அதைத் தெரிந்து கொள்ளாததினால், அவர்களுக்கு அந்த அறிவு இல்லாததினால், அவர்கள் அறிவின் மூலமாக பலன் அடையாதவர்கள், அவர்களே ஆத்மாவை அழித்தவர்களாகக் கருதப் படுகிறார்கள். ஆத்மீக தற்கொலைக்கு ஒப்பானதாகிறது.

அஸூர்யா என்ற அடர்ந்த இருளால் மறைக்கப் பட்ட உலகங்கள் யாவை என்று பார்ப்போம். சாஸ்திரங்கள் பதிநான்கு லோகங்கள் உண்டு என்கின்றன. அதில் சொர்க்கமும் ஒன்று. சொர்க்கம் என்றால் எப்போதும் பிரகாசமாக அல்லவோ இருக்கிறது. அதை எப்படி இருளால் மூடப்பட்டது என்று சொல்கிறது என்ற கேள்வி எழும். சொர்க்க லோகத்தில் சுகமான அநுபவங்களே ஏற்படுகின்றன. சுகங்களிலேயே மூழ்கி ஆத்ம விசாரம் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவே தேவ லோகத்தில் இருப்பவர்கள் அவர்களின் கர்ம பலன் தீரும் வரை சொர்க்கத்தின் சுகத்தை அநுபவித்து அதன் பிறகு மறுபடி கீழ் உலகங்களுக்கு சென்று விடுகின்றனர். ஆக தேவ லோகமும் அஞ்ஞான இருளில் மூடப்பட்டதாக இங்கு கருதப் படுகிறது. மேலும் ப்ரம்மம் அல்லது ஆத்மா (இரண்டும் ஒன்றே என்று முன்பு பார்த்தோம்) சுயம் ப்ரகாசமானது, அதுவே மற்ற எல்லாவற்றிற்கும் ப்ரகாசத்தைத் தருகிறது. ஆத்மாவின் ப்ரகாசத்திற்கு முன்னால் மற்ற ஒளிகள் ஒளிகளல்ல, இருட்டு என்று கருதலாம். கடோபநிஷத் ஆத்மாவின் ப்ரகாசத்தை இவ்வாறு விவரிக்கிறது.

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥

சூரியன் அங்கு ப்ரகாசிப்பதில்லை, சந்திரனும் நக்ஷத்திரங்களும் மின்னல்களும் அங்கு ஒளிர்வதில்லை, இனி இந்த நெருப்பு எப்படி ப்ரகாசிக்கும்? ப்ரம்மத்தைச் சார்ந்து யாவும் ப்ரகாசிக்கின்றன. அதன் ப்ரகாசத்தினின்று இவையெல்லாம் ப்ரகாசிக்கின்றன.

சங்கர பகவத் பாதர் அவர்கள் லோகம் என்பது लोक्यते अनुभूयते इति लोकम् - எது அநுபவிக்கப் படுகிறதோ அது லோகம் என்ற விரிவாக்கத்தை எடுத்துக் கொண்டு, மனிதன் இந்த உலகில் உடல் மூலமாகவே எல்லாவற்றையும் அநுபவிக்கிறான், லோகம் என்றால் உடலையே குறிக்கும் என்று கூறுகிறார். மேலும் असुषु रमन्ते इति असुराः (அஸு என்றால் உடல்) யார் இந்த உடலில் சுகத்தைக் காண்கிறார்களோ அவர்கள் அசுரர்கள் எனப்படுவார்கள் என்ற விரிவாக்கத்தின் படி உடலின் மீது பற்று கொண்ட மிருகங்கள், பிராணிகள், மனிதர்கள், உருவங்கள் எடுத்த மரம் செடி கொடிகள், மற்ற அசேதனப் பொருள்கள் யாவும் அசுரர்கள் என்ற சொல்லில் அடங்குவார்கள் என்கிறார். அதே போல சூக்ஷ்ம உடலை உடைய தேவர்களையும் இது குறிக்கும் என்கிறார். உடல் ஆத்மாவை அறிய முடியாததால் அதை அஸூர்யா என்று கூறப் படுகிறது. எனவே அஸூர்யா லோகங்கள் என்றால் இந்த ஒரு

உடலில் இருந்து இன்னொரு உடலுக்கு (இறந்த பிறகு) செல்வார்கள் என்று இந்த மந்திரத்தின் கருத்து என்று சங்கரர் கூறுகிறார்.

எனவே ஆத்மாவை அறிந்து முக்தி அடையாதவரை இந்தப் பிறவிக் கடலிருந்து மீள முடியாது என்ற கருத்தே இங்கு சொல்லப் படுகிறது.

இதையே ரிஷி யாக்ஞவல்கியர் ப்ரஹதாரண்ய உபநிஷத்தில் ஜனக மகாராஜாவுக்கு ஆத்மாவைப் பற்றி உபதேசம் செய்யும் பொழுது சொல்கிறார்: “எப்படி புல்லில் வாழும் புழு ஒரு புல்லின் கடைசி வரை சென்று இன்னொரு புல்லைப் பிடித்துக் கொண்டு முந்தியதை விட்டு விடுகிறதோ அதே போல ஆத்மாவானது ஒரு உடலில் இருந்து இன்னொரு உடலுக்குச் செல்கிறது....நல்லது செய்தவன் நல்லதை அடைகிறான், தீமை செய்தவன் தீமையை அடைகிறான்....(இவ்வாறு செல்லும் ஆத்மாவானது) செய்த செயல்களால் கட்டுப் பட்டு ஒரு உடலிருந்து இன்னொரு உடலுக்கு செல்கிறது. ஆனால் எவனொருவன் ஆசைகளைக் கடந்தவனோ, பற்றுக்களைத் துறந்தவனோ, ப்ரம்மத்தை உணர்ந்து இந்த உடலிலேயே (உலகத்திலேயே) முக்தி அடைகிறான் (ஜீவன் முக்தன் ஆகிறான்)”.

#############

# மந்திரம் 4.

# ஆத்மாவின் சொரூபம்

இந்த நான்காவது மந்திரத்தில் இருந்து எட்டாவது மந்திரம் வரை ஆத்மாவின் சிறப்புக் கூறப் படுகிறது. நான்காவது மந்திரம் ஆத்ம லக்ஷணத்தைக் கூறுகிறது.

**अनॆजदेकं मनसॊ जवीय: नैनद्देवा आप्नुवन् पूर्वमर्षत् ।**

**तद्धावतॊऽन्यानत्येति तिष्ठत्तस्मिन्नपो मातरिश्वा दधाति ॥ 4.**

அநேஜதேகம் மனஸோ ஜவீய: நைனத்தேவா ஆப்னுவந் பூர்வமர்ஷத் |
தத்தாவதோ&ன்யானத்யேதி திஷ்டத்தஸ்மிந்நபோ மாதரிச்வா ததாதி ||

अनेजत् அநேஜத் - (இந்த ஆத்ம தத்துவம்) சலனமற்றது एकं ஏகம் - (அனைவருக்குள்ளும்) ஒன்றாக இருக்கிறது मनस: மனஸ: மனத்தைக் காட்டிலும் जवीय: ஜவீய: வேகமாகச் செல்கிறது देवा: தேவா: இந்திரியங்கள் न आप्नुवन् ந ஆப்னுவன் - அடையவில்லை (ஏனெனில் மனம் ஆத்மாவை நெருங்குவதற்கு முன்பே) पूर्वं अर्षत् பூர்வம் பூர்வம் அர்ஷத் - (இந்த ஆத்மா) சென்று விட்டது धावत: தாவத: - ஓடுகின்ற अन्यान् அன்யான் - (தனக்கு) வேறாக உள்ள (இந்திரியங்களை) तत् अत्येति தத் அத்யேதி - கடந்து செல்கிறது तिष्ठत् திஷ்டத் - (அதே சமயம்) அசைவற்றது तस्मिन् தஸ்மின் - அதன் இருப்பில் मातरिश्वा மாதரிச்வா - ஹிரண்ய கர்ப்பர் अप: அப: கர்ம பலன்களை दधाति ததாதி - வகுத்துக் கொடுத்தார்.

பொருள்

இந்த ஆத்மா சலனமற்றது, அனைவருக்குள்ளும் இது ஒன்றே இருக்கிறது. மனதைக் காட்டிலும் இது வேகமாகச் செல்கிறது. இதை இந்திரியங்கள் அடையவில்லை. ஏனெனில் மனம் இதை அடைவதற்கு முன்பே இது சென்றுவிட்டது. ஓடுகின்ற தனக்கு வேறாக உள்ள இந்திரியங்களைக் கடந்து செல்கிறது. அதே சமயம் அசைவற்றது. அதன் இருப்பில் (அதனால்) ஹிரண்ய கர்ப்பர் கர்ம பலன்களை வகுத்துக் கொடுக்கிறார்.

விளக்கம்

முந்திய மந்திரத்தில் ஆத்மாவை அறியாதவர்கள் எப்படி சம்சாரத்தின் சுழலில் அகப்பட்டு திரும்பத் திரும்ப பிறவிகள் எடுத்து அவஸ்தைப் படுகிறார்கள் என்று கூறப்பட்டது. இனி அந்த ஆத்மாவானது அல்லது ஆத்ம தத்துவமானது என்ன என்று விவரிக்கப் படுகிறது. ஆத்மாவானது உருவமற்றது, கண்ணுக்குத் தெரியாதது. ஆத்மாவைப் பற்றி இங்கு எதிர் மறையான கருத்துக்கள் சொல்லப் படுவது போல தோன்றுகிறது.

அதை விவரிப்பதற்கு அத்யாரோப அபவாத ந்யாயம் என்ற முறையை உபநிஷத் கையாளுகிறது. அத்யாரோப அபவாதம் என்றால் என்ன என்பதை ஒரு உதாரணத்தின் மூலமாகப் பார்ப்போம். ஒரு கயிற்றைப் பாம்பு என்று நினைத்து ஒருவன் பயப்படுகிறான். அப்பொழுது அங்கு ஒரு சாது வருகிறார் அவர் அது பாம்பு அல்ல கயிறுதான் ஆனால் சற்றே இருட்டாக இருப்பதினாலும் அவனது பயந்த சுபாவத்தினாலும் பாம்பு என்று பயப்படுகிறான் என்பதைப் புரிந்து கொண்டு “அப்படியா பாம்பா இருக்கிறது, பார்க்கலாமே” என்று ஒரு விளக்கை ஏற்றுகிறார். அந்த வெளிச்சத்தில் அது பாம்பு அல்ல கயிறுதான் என்று தெளிவடைகிறான். அந்த மனிதன் அறியாமையால் கயிற்றைப் பாம்பாக நினைத்தான்.

அறியாமையால் இல்லாத ஒன்றை (பாம்பை) கயிற்றின் மேல் பார்த்தான். இதற்கு, ஒரு வஸ்துவின் மீது அவஸ்துவை, இல்லாத இன்னொன்றை ஏற்றி வைப்பதற்கு, அத்யாசம் என்று பெயர். அதே சமயத்தில் அந்த சாது தனது அறிவினால் அது பாம்பு அல்ல என்று தெரிந்து கொண்டு அவனது அறியாமையை போக்குவதற்காக சிறிது நேரம் ஒத்துக் கொண்டு வெளிச்சத்தின் உதவியினால் அவனது பயத்தைப் போக்கினார். தெரிந்து கொண்டே, அறிவோடு, ஒரு வஸ்துவின் மீது அவஸ்துவை, இல்லாத இன்னொன்றை ஏற்றி வைப்பதற்கு, அத்யாரோபம் என்று பெயர். வெளிச்சத்தில், அது கொடுத்த அறிவில், கயிற்றில் ஏற்றி வைக்கப் பட்ட பாம்பு இறக்கப் பட்டது. இல்லாத வஸ்துவை, ஏற்றி வைக்கப் பட்ட வஸ்துவை இறக்குவதற்குப் பெயர் அபவாதம்.

சாதாரணமாக இந்திரியங்களும் மனதும் சேர்ந்த இந்த ஸ்தூல சரீரம் தான் நாம் என்ற மயக்கத்தில், அறியாமையில் இருக்கிறோம். ஆனால் இந்த ஸ்தூல சரீரம் ஆத்மா அல்ல ஆத்மாதான் வஸ்து, இந்த சரீரம் அவஸ்து, என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. வஸ்து அவஸ்து என்றால் என்ன? எது நிரந்தரமாக, எல்லா காலங்களிலும் இருக்குமோ அது வஸ்து எனப்படுகிறது. அவ்வாறு இல்லாதவை அவஸ்து என்று கொள்ளப் படுகிறது. சரீரம் நிரந்தரம் அல்ல என்பதனால் அவஸ்து என்று கருதப் படுகிறது. அறியாமையால்

(ஆத்மாவை அறியாததால்) ஆத்மா தெரியவில்லை. இந்த சரீரத்தின் (அவஸ்துவின்) மேல் உள்ள பார்வையை நீக்கி ஆத்மாவை (வஸ்துவை) ஞானமாகிய வெளிச்சத்தின் உதவியால் இந்த மந்திரம் காண்பிக்கிறது. அதற்காக சரீரமும் ஆத்மாவும் எவ்வாறு வேறு பட்டவை என்று சொல்லப் படுகிறது. இந்த மந்திரத்திலும் அடுத்த மந்திரத்திலும் ஆத்மாவானது இரண்டு விதமாக விளக்கப் படுகிறது. அநாத்மாவான (அவஸ்துவான) சரீரத்தை எடுத்துக் கொண்டு விளக்கப் படும், பிறகு சரீரத்தை நீக்கி ஆத்மாதான் சரீரத்தின் அதிஷ்டானம், சரீரத்தின் அடிப்படை, ஆதாரம் (ஆத்மா இல்லாவிட்டால் சரீரம் இல்லை) என்று விளக்குகிறது.

ஆத்மா சுபாவமாக அசைவற்றது என்றால் சலனமுள்ள இந்த சரீரத்தில் அது சலனமற்று இருக்கிறது என்று பொருள். ஆத்மா மனதை விட வேகமானது, இது எப்படி? நமக்குத் தெரியும், மனம் எங்கு வெண்டுமானாலும் ஒரு நொடியில் செல்லும், அப்படி அது எங்கு சென்றாலும் ஆத்மா அதற்கு முன்பே (பூர்வமர்ஷத்) அங்கு சென்றுவிட்டது, ஆதலால் அது அங்கும் ஆத்மாவையே காண்கிறது. சரி, வேறு வேறான ஆத்மாக்கள் இருக்கின்றனவா என்றால், एकम् ஏகம் என்ற சொல், ஆத்மா ஒன்றேதான் என்று உறுதியிட்டுக் காட்டுகிறது. ஆக மனது எங்கு சென்றாலும் ஏகமான, ஒரே, ஆத்மாவைக் காண்பதால் ஆத்மா மனதை விட வேகமானது எனப் படுகிறது.

அடுத்ததாக இந்திரியங்கள் அதை அடையவில்லை, தன்னிலிருந்து வேறான இந்திரியங்களைக் கடந்து செல்கிறது என்று கூறப்படுகிறது. அது எப்படி? முதலில் நாம் ஒரு காரியம் செய்வதற்கு மனதால் நினைத்துப் பிறகு இந்திரியங்களின் மூலமாக அதை நிறை வேற்றுகிறோம். மனதின் உதவி இல்லா விட்டால் இந்திரியங்கள் செயல் பட முடியாது. இந்திரியங்களை விட வேகமான மனதே ஆத்மாவை அடைய முடியாததால் இந்திரியங்கள் ஆத்மாவை அடையவில்லை என்று தீர்மானமாக உபநிஷத் கூறுகிறது. இன்னொன்றும் இங்கு கவனிக்கப் படவேண்டியது. ஆத்மா வேறு இந்திரியங்கள் வேறு என்பதை அன்யான் என்ற சொல் தன்னிலிருந்து வேறுபட்டவை என்று தெளிவு படுத்துகிறது.

(ஆத்மா) திஷ்டத் - எந்த மாற்றமும் இல்லாமல் நின்று கொண்டிருக்கிறது, இது எப்படி? அநாத்மாவான (அவஸ்துவான) சரீரத்தைக் கொண்டு பார்த்தோமானால் அது வேகமாக ஓடுகிறது. இந்த சரீரத்தை நீக்கி விட்டு ஆத்மாவைப் பார்த்தோமானால் அது நின்று கொண்டிருக்கிறது. இப்படி முரண்பாடு தெரிகிறதே என்றால் சங்கரர் 'இவ' என்ற வார்த்தையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். அதாவது இந்திரியங்களையும் சரீரத்தையும் விட வேகமாக ஓடுவது 'போல' தோன்றுகிறது ஆனால் உண்மையில் அது அசைவற்றது, நின்று கொண்டிருக்கிறது என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆத்மா அசைவற்றது என்பதை இன்னொரு விதமாகவும் அறிந்து கொள்ளலாம். அசைவது என்பது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதைக் குறிக்கிறது. ஆனால் ஆத்மாவோ எங்கும் நிறைந்திருப்பது, அது இல்லாத இடம் இல்லை, அப்படி என்றால் அது செல்வதற்கு இடம் இல்லை, எனவே அது அசையவில்லை.

தஸ்மிந்நபோ மாதரிச்வா ததாதி - தஸ்மின் என்றால், அதன் ஆதாரத்தினால், அதாவது ஆத்மாவின் ஆணையினால் என்று அர்த்தம். மாதரி என்றால் ஆகாசம், இச்வா என்றால் செல்லுதல் ஆக மாதரிச்வா என்றால் வாயு, வாயுவே பிராணன் ஆனதால் வாயு ஹிரண்ய கர்ப்பர் என்று கொள்ளவேண்டும். ப்ரம்மம் இந்த ப்ரபஞ்சத்தைப் படைப்பதற்காக மாயை உடன் சேர்ந்து ஹிரண்ய கர்ப்பர் என்ற ஸூக்ஷ்ம ஸ்வரூபம் கொள்கிறார். அவர் மற்ற தெய்வங்களான சூரியன், அக்னி, வருணன் முதலியவகளுக்குக் கர்மங்களைப் பிரித்துக் கொடுக்கிறார். அப: என்றால் தண்ணீர், அது இல்லாமல் எந்த ஒரு கர்மாவும் நடக்காததால், அப: என்றால் கர்மங்கள் என்ற பொருளில் வருகிறது. ததாதி என்பதற்கு வேறு ஒரு பொருளும் கூறப் படுகிறது. ததாதி என்றால் தாரயதி, அதாவது அவரே ஹிர்ண்ய கர்ப்பரே தானே வித விதமான தேவதைகளாக மாறி கர்மங்களைச் செய்தார் என்றும் கூறலாம். இந்த தேவதைகளே இந்திரியங்களுக்கு அதிபதிகள் ஆனதால் ஆத்மாவைச் சார்ந்தே இந்திரியங்கள் செயல் படுகின்றன, ஆத்மா இல்லாவிடில் இந்திரியங்கள் ஜடங்களே என்பதும் தெளிவாகிறது. இந்த ஜடமான இந்திரியங்களுக்கு ப்ரம்மம் ஹிரண்ய கர்ப்பராகி கர்மங்களை பிரித்துக் கொடுத்ததையும் விளக்குகிறது.

ஆக இந்த மந்திரம் உடல், இந்திரியங்கள், மனம் இவைகளிலிருந்து ஆத்மா வேறு பட்டது. ஆத்மாவே இவைகளின் அதிபதி. ஆத்மாவின் ஆணைப் படியே இவைகள் செயல் படுகின்றன. எனவே இவைகளின் உதவி கொண்டு ஆத்மாவை அடைய முடியாது என்று தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. இங்கு நமக்குத் தெரிந்ததான உடல் உறுப்புகளிலிருந்து அவைகளை இயக்கும் சக்தி ஆத்மா என்று எடுத்துக் காட்டப் படுகிறது. அடுத்த மந்திரம் மறுபடியும் இதையே உறுதிப் படுத்துகிறது என்று சங்கரர் கூறுகிறார்.

###########

## மந்திரம் 5.

## ஆத்மாவின்சொரூபம்

மந்திரங்களுக்கு சோம்பல் இல்லாததால் முன் மந்திரத்தில் சொன்னதையே இந்த மந்திரத்தில் மறுபடியும் கூறப்படுகிறது. (சங்கரர்)

तदेजति तन्नैजति तद्दूरे तद्वन्तिके ।

तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यत: ॥ 5.

ததேஜதி தன்னைஜதி தத்தூரே தத்வந்திகே ।
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத: ॥ 5

तत् एजति தத் ஏஜதி - அது அசைகிறது तत् न एजतिதத் ந ஏஜதி - அது அசைவதில்லை

तत् दूरे தத் தூரே - அது தொலைவில் உள்ளதுतत् उ अन्तिकेதத்உ அந்திகே - அது அருகில் உள்ளது तत्अस्य सर्वस्यதத் அஸ்ய ஸர்வஸ்ய -அது இவை அனைத்திற்கும் अन्त:அந்த: உள்ளே உள்ளது तत् अस्यसर्वस्यதத் அஸ்ய ஸர்வஸ்ய - அது இவை அனைத்திற்கும் बाह्यत: பாஹ்யத: - வெளியே உள்ளது

விளக்கம்

இந்த மந்திரம் முன்னுக்குப் பின் முரணான விஷயங்களைச் சொல்வது போல இருக்கிறது. குருவின் மூலமாகத்தான் உபநிஷத் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு இதை விடச் சிறந்த காரணத்தைக் காண முடியாது.

இங்கு ஆத்மா உடலுடன் சேர்ந்து இருக்கும் பொழுது எப்படி காணப் படுகிறது அது தன்னிலையில் அதாவது உடல் சம்பந்தப் படாத பொழுது எப்படி இருக்கிறது என்று கூறப் படுகிறது. உடல் சம்பந்தம் இல்லாத நிலையில் ஆத்மா அசைவற்று, சலனமற்று இருக்கிறது. ஆத்மா சுயமாக, சுத்த சைதன்யமாக இருக்கும் பொழுது செயலற்று இருக்கிறது. ஒரு காரியமும் செய்வதில்லை. அதே போல உடலும் (அதிலுள்ள இந்திரியங்களும்) ஜடமாதலால் செயலற்று இருக்கிறது. உடலும் அதிலுள்ள இந்திரியங்களும் மனதால் செயல் படுகின்றன. மனமோ ஆத்மா இல்லாவிடில் செயல் பட முடியாது. ஆக ஆத்மா உடலில் உள்ள பொழுது ஆத்மா செயல் படுவது போல, அசைவது போல, காணப் படுகிறது. அதனால் ஆத்மா அசைகிறது என்று கூறப் படுகிறது.

இதே கருத்தில் சௌந்தர்ய லஹறியில் முதல் ஸ்லோகத்தில் சக்தி இல்லாவிடில் சிவன் அசைவது கூட கடினம் என்று வருகிறது.

शिव शक्त्या युक्तो यदि भवति शक्त: प्रभवितुं
न चेदेवं न खलु कुशल: स्पन्दितुमपि ।

மங்கள மூர்த்தியான மகாதேவன் பராசக்தியாகிய உன்னுடன் கூடியவராக இருந்தால் மட்டும் ப்ரபஞ்சத்தை ஆக்குவதற்கு திறமை உடையவராக ஆவார், கூடியில்லாவிட்டால் அசைவதற்கு கூட திறமை உடையவராக ஆவதில்லையன்றோ!

இதையே கேனோபநிஷத்தும் வேறு விதமாக கூறுகிறது.

श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्
वाचो ह वाचं स उ प्राणस्य प्राण: ।
चक्षुषश्चक्षु: .....

எந்த ஆத்மாவானது செவியின் செவியாகவும், மனதின் மனதாகவும், வாக்கின் வாக்காகவும், மூச்சின் மூச்சாகவும், கண்ணின் கண்ணாகவும் இருக்கிறதோ, அதுவே அந்த ஆத்ம தத்துவம்.

இதற்கு ஒரு உதாரணம் கலங்கரை விளக்கு. வெளியில் இருந்து பார்த்தோமானால் மூன்று விளக்குகள் சுற்றிச் சுற்றி வருவது போலத் தோன்றும். ஆனால் அந்த கலங்கரை விளக்கைப் பற்றி அறிந்தவர்களுக்கு அங்கு உள்ளே ஒரே ஒரு விளக்கு அசையாமல் இருக்கிறது அதன் கண்ணாடிக் கூண்டின் அமைப்பினால் விளக்கு சுற்றுவது போல இருக்கிறதென்று தெரியும். இன்னொரு உதாரணம். ஒரு கண்ணாடியில் சூரியனைப் பார்க்கிறோம். அது அசையாமல் இருக்கிறது. அந்த கண்ணாடியை எடுத்துக் கொண்டு நடந்தால் சூரியனும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அசைவது போலத் தோன்றும். நமது அறிவினால் சூரியன் தன்னிடத்திலேயே இருக்கிறது அசையவில்லை என்பது தெரியும். அதே போல ஆத்மாவை அறிந்தவர்களுக்கு அது சுத்த சைதன்யம் அசைவற்றது, கிரியைகள் அற்றது என்பது தெரியும். ஆத்ம ஞானம் இல்லாதவர்கள், இந்த உடலே ஆத்மா என்ற அக்ஞானத்தை உடையவர்கள், ஆத்மா அசைகிறது என்று நினைப்பார்கள்.

அடுத்ததாக ஆத்மா தொலைவில் உள்ளது, அருகில் உள்ளது என்று சொல்லப் படுகிறது. இது எப்படி? இதை ஒரு உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

பத்து நண்பர்கள் ஒரு ஆற்றைக் கடக்கிறார்கள். கடந்தபின் ஒருவன் (புத்தி சாலி ? ) எல்லோரும் ஆற்றைக் கடந்து வந்து விட்டார்களா என்பதற்காக தன்னை விட்டு விட்டு எல்லோரையும் எண்ணி அறியாமையால் ஒன்பது பேர் மட்டும் வந்து சேர்ந்ததாக நினைத்து அந்த பத்தாவது நபரைத் தேடுகிறான். அவன் எவ்வளவு தூரம் சென்றாலும் அந்த பத்தாவது நபர் கிடைக்கப் போவதில்லை. ஆக அந்த பத்தாவது நபர் அவனது அறியாமயால் வெகு தூரத்தில் இருக்கிறான். எப்பொழுது அவனுக்கு தான் தான் அந்த பத்தாவது நபர் என்ற அறிவு வருகிறதோ அப்பொழுது அந்த பத்தாவது நபர் அருகிலேயே இருப்பதை உணருவான். அதே போல ஒருவனுக்கு, அறியாமையால், அக்ஞானத்தினால், ஆத்மா எங்கோ வெகு தூரத்தில் இருப்பது போல தோன்றுகிறது. அந்த ஆத்மா தன்னுள்ளேயே இருக்கிறது என்ற அறிவு ஏற்படுகிற பொழுது ஆத்மா வெகு சமீபத்தில் தன்னுள்ளேயே இருக்கிறது என்று தெரிந்து கொள்வான். இதுவே இதன் தாத்பரியம்.

கடைசியாக ஆத்மா எல்லாவற்றின் உள்ளும் இருக்கிறது, எல்லாவற்றின் வெளியெயும் இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. இதையும் ஒரு உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ள முடியும். ஒரு காலியான குடம் இருக்கிறது. அதில் இருக்கும் வெற்றிடத்தை குடத்தின் ஆகாசம் என்று சொல்வார்கள். குடத்திற்கு வெளியேயும் வெற்றிடம் அதாவது ஆகாசம் இருக்கிறது. குடத்தின் ஆகாசமும் வெளி ஆகாசமும் ஒன்றே. அதே போல ஆத்மா எல்லாவற்றின் உள்ளேயும் இருக்கிறது, வெளியேயும் இருக்கிறது.

இப்பொழுது அந்த காலியான குடம் எங்கே இருக்கிறது என்றால், அதற்கு உள்ளேயும் வெளியேயும் ஆகாசம் இருப்பதால் குடமே ஆகாசத்தில் (ஆகாசம் என்றால் காலியிடம்) இருக்கிறது என்று சொல்லலாம். அதே போல ஆத்மா எல்லாவற்றிற்கும் உள்ளேயும் வெளியேயும் இருப்பதால் ஆத்மா ஸர்வ வ்யாபி ஆகிறது.

“ஒரு வெள்ளைத் துணியை சாயத்தில் தோய்த்தால் சாயத்தினால் எவ்வாறு துணி ஊடுருவப் படுகிறதோ அதே போல ஆத்மா ஸர்வ வ்யாபி.” “ஒரு துணியானது எவ்வாறு

நூலால் குறுக்கிலும் நெடுக்கிலும் நெய்யப் பட்டிருக்கிறதோ அதே போல ஆத்மாவால் இந்த உலகம் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது" - ப்ருகதாரண்ய உபநிஷத்.

##########

# மந்திரம் 6

# அபேத தர்சனமே ஆத்ம ஞானம்

இந்த மந்திரத்தில் ஆத்ம ஞானம் என்பது சம தர்சனம் ஆகும். ஆத்ம ஞானம் அடைந்தவன் எப்படி இந்த உலகத்தைப் பார்க்கிறான், அவனது நோக்கு எப்படி சம நோக்குடன் (அபேத தர்சனமாக) இருக்கிறது என்று கூறப் படுகிறது.

यस्तु सर्वाणि भूतानि आत्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥ 6

யஸ்து ஸர்வாணி பூதானி ஆத்மன்யேவானுபச்யதி ।
ஸர்வபூதேஷு சாத்மானம் ததோ ந விஜுகுப்ஸதே ॥ 6

यः तु - ய: து -யார் सर्वाणि भूतानि ஸ்ர்வாணி பூதானி - எல்லா உயிரினங்களையும் आत्मनि एव ஆத்மனி ஏவ - தன்னிடத்திலேயே (தன்னையே) अनुपश्यति அநுபச்யதி - பார்க்கிறானோ (தானாகவே உணருகிறானோ) सर्वभूतेषु ஸர்வபூதேஷு - எல்லா உயிரினங்களிலும்
आत्मानं च ஆத்மானம் ச - தன்னை (பார்க்கின்றானோ அவன்) ततः தத: அதனால் (அப்படிப் பட்ட ஞானத்தினால்) न विजुगुप्सते ந விஜுகுப்ஸதே - (யாரையும்) நிந்தனை செய்ய மாட்டான்.

பொருள்

யார் அனைத்து உயிரினங்களையும் தன்னிடத்திலேயே பார்க்கின்றானோ, எவன் எல்லா உயிரினங்களிலும் தன்னைப் பார்க்கின்றானோ, அவன் அவ்விதமான அறிவை அடைந்ததனால் யாரையும் நிந்தனை செய்ய மாட்டான்.

விளக்கம்

இந்த மந்திரம் மிகவும் முக்யமானதாகும். இது அபேத தர்சனமே (சம நோக்கே) ஆத்ம ஞானம் என்று கூறுகிறது. அபேத தர்சனம் என்றால் சம நோக்கு, அதாவது எல்லாவற்றையும் ஒரே ஆத்மாவாகவே காண்பது. இந்த மந்திரம் அடிக்கடி பல இடங்களில் மேற்கோள் காட்டப் படுகிறது.

இங்கு முதல் இரண்டு மந்திரங்களில் கூறிய வழிகளில் ஒன்றைப் பின் பற்றி அதன் பிறகு ஆத்ம விசாரத்தைத் தொடர்ந்து பயின்று ஆசாரிய அநுக்ரஹத்தினால் முமுக்ஷுவாகி பிறகு தியானங்கள் முறையாகச் செய்து அதனால் ஆத்ம ஞானத்தை அடைந்து, எல்லா பூதங்களயும் தன்னிடத்திலேயே, எல்லா பூதங்களிலும் தன்னையும், பார்க்கிறானோ அவன் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவனாக இருப்பான். பூதங்கள் என்றால் ஸ்தாவர ஜங்கம பொருட்களையும், உயிரினங்களையும் அசைகின்ற, அசையாத எல்லாவற்றையும் குறிக்கும்.

இந்த தத்துவத்தை ஒரு உதாரணம் மூலமாகப் பார்ப்போம். கடலில் சிறிதும் பெரிதுமாகப் பல அலைகள் இருக்கின்றன. ஒரு அலை இன்னொரு அலையைக் காணும் பொழுது அது வேறு அலை, அது தன்னை விடப் பெரிது என்று நினைக்கும். இந்த எண்ணம் அதன் உருவத்தைக் கருதுவதினால் ஏற்படுகிறது. அதே அலை தன்னை விடப் பெரிய அலையும் தண்ணீர் என்று அறிந்தால், தானும் தண்ணீர் அதே தண்ணீர் தான் அந்த அலையிலும் இருக்கிறது எனவே என்னை அதில் காண்கிறேன் என்ற நினைவு வரும். ஆக ஒரு அலை எல்லா அலைகளிலும் தன்னை காணும். மற்ற அலைகளும் தண்ணீரே ஆனதால் மற்ற அலைகளையும் தன்னிடத்திலேயே காணும்.

சங்கர பகவத் பாதர் இன்னொரு உதாரணமும் சொல்லுகிறார். ஒரு அஞ்ஞானி (அதாவது ஆத்மாவை அறியாதவன்) தனது உடலின் வெவ்வேறு அவையவங்களைப் பார்க்கும் பொழுது அவற்றைத் தான் என்று பார்க்கிறான். அதாவது எல்லா உருப்புகளையும் தான் என்று நினைக்கிறான். அதே போல தனது உருப்புகளில் தன்னைக் காண்கிறான். இது அவனது அஞ்ஞானத்தினால் ஏற்பட்ட உணர்வு. ஆனால் ஒரு ஞானியோ தனது ஆத்மா வேறு மற்ற பூதங்களில் உள்ள ஆத்மா வேறு அல்ல என்ற அறிவினால் (ஞானத்தினால்) எல்லா பூதங்களிலும் தன்னையும் எல்லா பூதங்களைத் தன்னிலும் காண்கிறான். வேற்றுமைகளெல்லாம் ஆத்மாவை உணரும் பொழுது அழிந்து போகின்றன.

தான் மற்றவர்களிடத்திருந்து வேறு என்ற எண்ணம் உண்டாகும் பொழுது தான் மற்றவர்களை குறை கூற முடியும். இத்தகைய ஒரு உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் மற்றவர்களை நிந்தனை (विजुगुप्सते) செய்யமாட்டார்கள், அவர்களால் நிந்தனை செய்ய முடியாது.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஒருவன் தர்ம விரோதமான கார்யத்தைச் செய்யும் பொழுது அவன் நிந்தனைக்கு ஆளாகிறான். ஒரு ஞானியோ தர்மத்தையும் அதர்மத்தையும் கடந்த நோக்கு (சம தர்ம நோக்கு) உடையவர். ஞானி தர்ம அதர்மத்திற்கு அப்பால் சென்று விட்டார். ஆகையால் அவரால் யாரையும் நிந்தனை செய்ய முடியாது. இது ஞானத்தினால் வரும் பலன்.

विजुगुप्सते விஜுகுப்ஸதே என்பதற்கு கருணை அதாவது பிறருடைய துன்பத்தை தன்னுடையதாக எடுத்துக் கொண்டு அதனால் துன்பப் படுவது, பரிதாபப் படுவது, உருகிவிடுவது என்ற பொருளும் உண்டு. துன்பம் என்பது மனதைச் சார்ந்தது. துன்பத்திற்கு காரணம் ஒரு நிகழ்ச்சியாக, ஒரு சம்பவமாக இருக்கக் கூடும். உதாரணமாக நமக்குச்

சொந்தமானவர் ஒருவர் இறந்து விட்டால் அந்த செய்தி கேட்டவுடன் மிகவும் வருந்துவோம். ஆனால் நமக்கு முற்றிலும் தெரியாதவர் இறந்த செய்தியைக் கேட்டால் துக்கப் பட மாட்டோம். ஆக இறப்பு என்ற சம்பவம் ஒன்றாக இருந்தாலும் நமது மனது ஒரு இறப்பை நம்முடன் இணைத்ததினால் துக்கம் உண்டானது. ஆக துக்கத்தின் காரணம் மனதே, சம்பவம் அல்ல. ஒரு ஞானியானவர் மனதின் ஆட்சிக்கு அப்பாற் பட்டவர், ஆத்மா எல்லா பூதங்களிலும் ஒன்றே என்று அறிந்ததினால், வேண்டியவர், வேண்டாதவர்கள் என்ற வித்தியாசம் பாராட்டாதவர், ஆகவே அவர் பரிதாபப் படமாட்டார் என்றாகிறது.

அடுத்த மந்திரத்தில் இந்த சம நோக்கின் பலன் என்ன என்பது விவரிக்கப் படுகிறது.

---

# மந்திரம் 7.

இந்த மந்திரமும் முன்பு சொன்ன விஷயத்தையே மேலும் வலியுருத்தி அதன் பலனையும் கூறுகிறது.

## यस्मिन्सर्वाणि भूतान्यात्मैवाभूद्विजानत: ।
## तत्र को मोह: क: शोक: एकत्वमनुपश्यत: ॥ - 7

யஸ்மின் ஸர்வாணி பூதானி ஆத்மைவாபூத் விஜானத: |
தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வமனுபச்யத: || 7

एकत्वम ஏகத்வம் - ஒருமையை अनुपश्यत: அனுபச்யத: - பார்க்கின்றவனுக்கு यस्मिन् யஸ்மின் - எந்த காலத்தில் सर्वाणि भूतानि ஸ்ர்வாணி பூதானி - எல்லா உயிரினங்களும் आत्मा एव अभूत् ஆத்மா ஏவ அபூத் - (அவனது) ஆத்மா ஆகவே ஆகிவிட்டதோ विजानत: விஜானத: - (இந்த உண்மையை) அறிந்தவனுக்கு तत्र தத்ர - அந்த நேரத்தில் (அவனுக்கு) क: मोह: க: மோஹ: - மோகம் ஏது! क: शोक: க: சோக: - சோகம் ஏது!

ஒருமையைப் பார்க்கின்றவனாகவும் உண்மையை அறிந்தவனாகவும் உள்ளவனுக்கு எப்பொழுது எல்லா உயிரினங்களும் (தனது) ஆத்மா ஆகவே ஆகிவிட்டதோ, அப்பொழுது அவனுக்கு மோகம் ஏது! சோகம் ஏது!

விளக்கம்

இந்த மந்திரம் ஆக்ஷேபார்த்தே என்ற ஒரு யுக்தியை கையாள்கிறது. அதாவது ஒரு எதிர் மறையான கேள்வியை கேட்டு ஒரு விஷயத்தை உறுதி செய்வது. மோகம் ஏது! சோகம் ஏது! என்ற கேள்வியைக் கேட்டு அவை இல்லை என்று நிச்சயப் படுத்துகிறது.

சென்ற மந்திரத்தில் ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் உள்ள பேதம் (வித்தியாசம்) நீக்கப் பட்டு, ஜீவராசிக்கும் ஆத்மாவுக்கும் உள்ள பேதம் நீக்கப் பட்டது. எல்லா ஜீவராசிக்குள்ளும் இருக்கும் ஆத்மா ஒன்றுதான், ஜீவராசிகளுக்குள் பெயரிலும் உருவத்திலும் தான் வித்தியாசம், அந்த வித்தியாசம் சத்யம் (நிலையானது) அல்ல, ஆத்மாவே சத்யம். எனவே ஜீவராசியும் ஆத்மாவும் ஒன்றே, ஆத்மாவில் வித்தியாசம் என்பது இல்லாததால், எல்லா ஜீவராசிகளிலும் ஒரே ஆத்மாதான். (यस्मिन् யஸ்மின்) எப்பொழுது ஒருவன் எல்லா ஜீவராசிகளிலும் ஒரே ஆத்மாதான் என்று உணருகிறானோ அப்பொழுது அவனுக்கு மோகம்(மயக்கம்), சோகம்(வருத்தம்) இரண்டும் இல்லை. இவ்வாறு அத்வைதத்தில் இன்னும் ஒரு படி உயர்ந்து ஜீவராசிகள் என்பது ஆத்மாவே தான் வேறு அல்ல என்று கூறுகிறது.

மோகம் என்றால் ஆத்ம ஆவரணம் அதாவது ஆத்மா மறைக்கப் படுவது. ஆத்ம தத்துவத்தை மறைக்கப் படுவதற்கு மோகம் என்று கூறப்படுகிறது. ஒருவர் ஆத்மாவை அறிந்த பொழுது, எல்லா ஜீவராசிகளும் ஆத்மாவே என்று தெரிந்த நிலையில் மோகம் என்பது கிடையாது.

சோகம் என்றால் விக்ஷேபம் அதாவது சஞ்சலம் கொடுப்பது. சஞ்சலமாவது துக்கத்தைக் கொடுப்பது. சஞ்சலம், துன்பம் என்பது மனதைச் சார்ந்தது. துன்பத்திற்கு காரணம் ஒரு நிகழ்ச்சியாக, ஒரு சம்பவமாக இருக்கக் கூடும். நமது மனது ஒரு சம்பவத்தை நம்முடன் இணைத்ததினால் துக்கம் உண்டானது என்று ஏற்கனவே முந்திய மந்திரத்தில் பார்த்தோம். ஆக துக்கத்தின் காரணம் மனதே, சம்பவம் அல்ல. ஒருவர் ஆத்மாவை அறிந்த பொழுது, எல்லா ஜீவராசிகளும் ஆத்மாவே என்று தெரிந்த நிலையில் மனதின் ஆட்சிக்கு அப்பாற் பட்டவர் ஆகிவிடுகிறார். ஆகவே அவருக்கு அப்பொழுது சோகம் என்பது கிடையாது.

இது வரையிலும் यस्मिन् என்ற சொல்லுக்கு எப்பொழுது என்ற பொருளில் வியாக்கியானம் சொல்லப் பட்டது. यस्मिन् என்ற சொல்லுக்கு எந்த மனிதனிடத்தில் என்னும் பொருளும் உண்டு. எவன் ஒருவன், ஒருமையைப் பார்க்கின்றவனாகவும் உண்மையை அறிந்தவனாகவும் உள்ளானோ அவன், எவன் எல்லா உயிரினங்களிலும் தனது ஆத்மாவையே பார்க்கின்றானோ, (तत्र ) அவனிடத்தில் சோகம் ஏது| மோகம் ஏது!

இங்கு சொல்லப்படும் தத்துவமானது ஒரு உயர்ந்த அத்வைத நிலையை விவரிக்கிறது. இந்த உச்ச நிலையை அடைவது என்பது எவரோ ஒரு சிலரால், சில சமயங்களில், தான் முடியும். அதுவும் அதே நிலையில் எப்பொழுதும் இருக்க முடியும் என்பதும் அதைவிட துர்லபம். ஆகவேதான் மேற்கண்ட இரண்டு விதமான பொருள்களும் சொல்லப் படுகிறது.

இதே கருத்தை பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா வேறு விதமாக விவரிக்கிறார்:

बहूनां जन्मनामन्ते ज्ञानवान्मां प्रपध्यते ।
वासुदेव: सर्वमिति स महात्मा सुदुर्लभ: । (Gita 7:19)

பஹூனாம் ஜன்மனாமந்தே ஞானவான்மாம் ப்ரபத்யதே|
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: |

பல பிறவிகளுக்குப் பிறகே "யாவும் வாஸு தேவ சொரூபம்" என்று ஞானி என்னை வணங்கி வந்தடைகிறான். அத்தகைய மஹாத்மா கிடைப்பதற்கு அரியவன்.

சம திருஷ்டியைப் பற்றி கீதையில் கூறப்படுவதைப் பார்ப்போம்.

समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।
विनश्यत्स्वविनश्यन्तं यः पश्यति स पश्यति । (Gita 13:27)

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம் |
விநச்யத்ஸ்வவிநச்யந்தம் ய: பச்யதி ஸ பச்யதி |

உயிர்கள் அனைத்திலும் ஸமமாயிருக்கிறவனும், அழிவனவற்றுள் அழியாதவனாகிய பரமேச்வரனைப் பார்ப்பவனே பார்க்கிறான்.

இன்னொரு இடத்திலும் இதையே வலியுறுத்துகிறார்:

ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति ।
समः सर्वेस्षु भुतेषु मद्भक्तिं लभते पराम्।    (Gita 18:54)

ப்ரஹ்மபூத: ப்ரஸன்னாத்மா ந சோசதி ந காங்க்ஷதி |
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் |

ப்ரம்ம மயமாகித் தெளிந்த மனமுடையவன் துயருறுவதில்லை: அவாவுறுவதில்லை. எல்லா உயிர்களிடத்தும் சமனாயிருப்பவன் என்மீது மேலாம் பக்தியைப் பெறுகிறான்.

எனவே ப்ரம்மத்தை உணர்ந்தவர்கள் சம திருஷ்டி அடைந்து விருப்பு வெறுப்பு ஆகியவைகளுக்கு அப்பாற் பட்டவர்களாகி இவ்வுலகம் முழுவதும் ஈச்வரனால் வ்யாபிக்கப் பட்டிருப்பதை அறிந்து உன்னதமான நிலையை அடைகிறார்கள் என்பது தெளிவாகிறது.

##############

## மந்திரம் 8.

# ஆத்ம லக்ஷணம்

நாலாவது ஐந்தாவது மந்திரங்களில் எவ்வாறு ஆத்மாவானது இந்திரியங்கள், மனது இவைகளிலிருந்து வேறு பட்டது, எல்லா இடத்திலும் எல்லா பூதங்களிலும் வியாபித்திருக்கிறது என்று கூறப்பட்டது. ஆறாவது ஏழாவது மந்திரங்களில் ஆத்மாவை அறிவதனால் ஏற்படும் பலனைப் பற்றிச் சொல்லப் பட்டது. இந்த மந்திரத்தில் ஆத்மாவின் குணங்கள் என்ன என்று விவரிக்கப் படுகிறது.

## स पर्यगाच्छुक्रमकायव्रणं अस्नाविरँसुद्धमपापविद्धम् ।
## कविर्मनीषी परिभू: स्वयम्भूर्याथातथ्यतोऽर्थान्
## व्यदधाच्छाश्वतीभ्य: समाभ्य: ॥ 8

ஸ பர்யாகச்சுக்ரமகாயமவ்ரணம் அஸ்னாவிரம் |
சுத்தமபாபவித்தம் கவிர் மனீஷீ பரிபூ: ஸ்வயம்பூர்யாதாதத்யதோऽர்தான்
வ்யததாச்சாச்வதீப்ய: ஸமாப்ய: || 8

स: ஸ: - அவன் (முன்பு சொல்லப் பட்ட ஆத்மா) पर्यगात् பர்யகாத் - எங்கு செல்பவன் शुक्रम् சுக்ரம் - பிரகாசமான சொரூபம் अकायम् அகாயம் - சரீரம் இல்லாதது अव्रणम् அவ்ரணம் - வெட்டுப் படாதது अस्नाविरम् அஸ்னாவிரம் - நரம்பு இல்லாதது शुद्धम् சுத்தம் - சுத்தமானது अपापविद्धम् - பாபமில்லாதது कवि: கவி: - அனைத்தையும் அறிபவன் मनीषी மனீஷீ - மனதை ஆள்பவன் परिभू: பரிபூ: - எல்லாமாக இருப்பவன் स्वयम्भू: ஸ்வயம்பூ: - தானே தோன்றியவன் शाश्वतीभ्य: சாச்வ்தீப்ய: - அதிக காலம் இருக்கும் समाभ्य: - பிரஜாபதிகளுக்கு (தெய்வங்களுக்கு) याथातथ्यत: யாதாதத்யத: அவரவரது கர்ம பலன்களுக்குத் தக்கபடி अर्थान् - கடமைகளை व्यदधात् வ்யததாத் - பிரித்துக் கொடுத்தார் (ஆத்மாவான ஈச்வரன்)

(முன்பு சொல்லப் பட்ட ஆத்மா) அவன் எங்கு செல்பவன், பிரகாசமான சொரூபம் உடையவன், சரீரம் இல்லாதவன், வெட்டுப் படாதவன், நரம்பு இல்லாததவன், சுத்தமானவன், அனைத்தையும் அறிபவன், மனதை ஆள்பவன், எல்லாமாக இருப்பவன் தானே தோன்றியவன், அப்படிப் பட்ட ஆத்மாவான ஈச்வரன் அதிக காலம் இருக்கும் பிரஜாபதிகளுக்கு (தெய்வங்களுக்கு) அவரவரது கர்ம பலன்களுக்குத் தக்கபடி கடமைகளை பிரித்துக் கொடுத்தான்.

விளக்கம்

இங்கு ஆத்மாவானது என்ன லக்ஷணங்களை உடையது என்றும் எவை இல்லாதது என்றும் கூறப்படுகிறது. உலகத்தில் தோன்றிய ஜீவராசிகள் எல்லாம் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரம் கொண்டவை. ஒரு மனிதனை எடுத்துக் கொண்டால் அவனுடைய உடல் ஸ்தூல சரீரம் எனப் படுவது. அவனது மனதும் புத்தியும் ஸூக்ஷ்ம சரீரம் ஆகும். அவன் ஜன்மம் எடுக்கக் காரணம் அவனுடைய ப்ராரப்த கர்மம் அதுவே அவனது காரண சரீரம். ஆக ஒரு மனிதன் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரம் கொண்டவனாகிறான். ஆத்மா இந்த மூன்று விதமான சரீரம் அற்றது என்றும் அதனால் ஜிவராசிகளிலிருந்து வேறு பட்டது என்றும் விளக்கப் படுகிறது.

பரி அகாத் என்றால் எல்லா இடத்திலும் சென்றவன், ஆகாசம் ஆத்மாவிலிருந்து (ப்ரம்மத்திலிருந்து) வந்தது, ஆகாசம் இல்லாத இடம் இல்லை, எனவே ஆத்மா சர்வ வியாபி. சென்றவன் என்று சொல்லும் பொழுது செல்லக்கூடியவன் என்ற பொருளுக்கும் இடமாகிறது. அதாவது ஆத்மா (நேற்று இன்று நாளை) ஆகிய மூன்று காலங்களிலும் எல்லா இடத்திலும் செல்பவன். ஆக ஆத்மா சத்யம். இது ஆத்மாவின் ஸத் ஸ்வரூபத்தைக்

காண்பிக்கிறது சுக்ரம் என்றால் பிரகாச சொரூபம், ஞான சொரூபம், சைதன்யமானது, அறிவு மயமானது. இது ஆத்மாவின் சித் சொரூபத்தை சொல்லுகிறது.

காயம் என்றால் மனது. அகாயம் என்றால் மனது இல்லாதது. மனதே அபவாதத்திற்கு காரணமாதலால் ஆத்மாவிற்கு அபவாதம் கிடையாது. மனது இல்லாததால் ஸூக்ஷ்ம சரீரம் அற்றது.

வ்ரணம் என்றால் வெட்டுவது. அவ்ரணம் என்றால் வெட்டுப் படாதது, புண்படுத்த முடியாது. அஸ்னாவிரம் என்றால் நரம்பு இல்லாதது. இவை இரண்டினாலும் ஆத்மா ஸ்தூல சரீரம் அற்றது என்று கூறப் படுகிறது.

ஸ்வயம்பூ; தானாகவே (உண்டானது) இருக்கின்றது உலகத்தில் இருக்கும் எல்லவற்றின் பிறப்பிற்கும் ஒரு மூலம் அதாவது காரணம் (ஆதாரம், அல்லது அதிஷ்டானம்) உண்டு. ஒரு பானைக்கு மண் ஆதாரம். ஒருவன் பிறப்பதற்கு அவனது பெற்றோர்கள் காரணம். அந்த பெற்றோர்கள் பிறப்பதற்கு அவர்களது பெற்றோர்கள் காரணம். எனவே இந்த உலகிலுள்ள எல்லா பூதங்களுக்கும் பிறப்பிடம், அதாவது காரணம் உண்டு. ஆனால் ஆத்மாவிற்கு பிறப்பிடம் கிடையாது. காரணமற்றது. தானாகவே தோன்றியது, இருக்கின்றது. அதனால் காரண சரீரம் அற்றது.

சுத்தம் என்றால் அஞ்ஞானம் இல்லாதது என்பதாகும். காரண சரீரம் இருந்தால் அஞ்ஞானத்திற்கு இடம் உண்டு. அது இல்லாததால் அஞ்ஞானம் கிடையாது, எனவே சுத்தமானது.

அபாப வித்தம் என்றால் தர்ம அதர்ம ரஹிதம் அதாவது பாப புண்யம் இல்லாதது, அவற்றுக்கு அப்பாற் பட்டது.. புத்தி தான் பாப புண்யம் என்ற வேறுபாடுகளைத் தீர்மானிப்பது. ஆத்மா புத்திக்கு அப்பாற் பட்டது, எனவே பாப புண்யம் இல்லாதது. ஆக மூன்று விதமான (சரீர த்ரய) ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரம் இல்லாதது. ஜீவராசிகளிலிருந்து வேறுபட்டது.

கவி: சர்வ த்ருக் - அனைத்தையும் அறிபவன் க்ராந்த தர்ஷி - முக்காலமும் அறிபவன் ஆத்மா எல்லா மனதிற்குள்ளும் (புத்தியிலும்) இருந்து எல்லவற்றையும் அறிந்து கொள்வதால் கவி: எல்லா மனதிலும் இருப்பதால் பொறாமை இல்லை என்றும் கொள்ளலாம். எக்காலத்திலும் இருப்பதால் முக்காலமும் அறிந்தவன்.

மனீஷீ - மனதை ஆள்பவன் - நான் ஆத்மா என்ற உணர்வு வரும் பொழுது ஒருவனது மனது ஆத்மாவின் ஆணைப் படியே நடக்கும். ஆத்மா என்ற ஒன்று இருப்பதால் தான் நான், எனது என்ற மன நிலை ஏற்படுகிறது, ஆக மனம் ஆத்மாவைச் சார்ந்தே இருக்கிறது. எனவே ஆத்மா மனதை ஆள்கிறது. மனீஷீ என்றால் மனதை செயல் படுத்துபவன் என்றும் மனதுக்கு மனதாக இருப்பவன் என்றும் கூறலாம்.

பரிபூ - எல்லாவற்றிற்கும் மேலாக இருப்பது எல்லாமாகவே இருப்பது. எல்லா பூதங்களிலும் ஒரே ஆத்மா வியாபித்து இருக்கிறது. ஆக எல்லா பூதங்களின் ஆதாரமும் ஆத்மாவே. எனவே ஆத்மா எல்லாமாகவும் இருக்கிறது. இதனால் தெரிவது என்னவென்றால் பெயரும்

உருவமும் நிலை அற்றவை (நாம ரூபம், மித்யா), ஆத்மா சத்யம், அதாவது என்றும் நிலைத்திருப்பது. ஆக ஆத்மா எல்ல பூதங்களைக் காட்டிலும் மேலானது..

ஆத்மாவும் ஈச்வரனும் ஒன்றே ஆனதால் ஆத்மாவாகிய ஈச்வரன் எப்படி வித விதமான தேவதைகளை உண்டாக்கி அவர்களுக்கு கடமைகளை பிரித்துக் கொடுத்தார் என்று சொல்லுகிறது. நாலாவது மந்திரத்தில் கூறியதையே இங்கு மறுபடியும் சொல்லப்படுகிறது.

வேதங்களில் குறிப்பிட்ட யக்ஞ கர்மாக்களை முறைப்படி செய்து அதில் கூறிய தியான வகைகளையும் செய்தால் ஒருவன் தெய்வமாக அதாவது பிரஜாபதி ஆக முடியும் என்று சாஸ்திரம் கூறுகிறது. பிரஜாபதி என்பது ஒரு பதவி. அதற்கும் ஒரு ஆயுள் உண்டு, ஆனால் அவர்களது பதவி காலம் ஒரு மன்வந்திரம் எனப் படுவது. அது மனிதரது ஆயுளை விட மிக மிக அதிகமானது. அதனால் அப்படிப் பட்ட தெய்வங்களையே இங்கு சாச்வதீப்ய ஸமாப்ய:, அதாவது அதிகப் படியான காலம் இருப்பவர்கள், பிரஜாபதிகள் என்று சொல்லப் படுகிறது.

ஆத்மாவாகிய ஈச்வரன், யாதாதத்யத: அவரவர்கள் செய்த கர்ம உபாசனைகளின் பலனுக்குத் தக்கபடி, அர்தான் - கடமைகளை வ்யதாதத்- பிரித்துக் கொடுத்தார்.-

உலகத்தின் கார்யங்கள் நியமமாக (முறைப் படி) நடப்பதற்கு ஒரு அதிகாரி வேண்டும். அவரின் கீழே பல அதிகாரிகள் வேண்டும். அப்படிப் பட்ட அதிகாரி ஆத்மாவாகிய ஈச்வரன். அவரின் கீழ் பல தெய்வங்கள் வெவ்வேறு காரியங்களை செய்கின்றன. ஈச்வரன் எல்லாமாக இருப்பவன், எல்லாவற்றையும் இயக்குபவன், ஈச்வரனே எல்லவற்றிற்கும் காரணம் என்று கூறுகிறது.

இவ்விடத்தில் எவ்வாறு யமன் (பிர்ஜாபதிகளுள் ஒருவர்) அவரது யம பதவியை அடைந்தார் என்று நசிகேதனுக்கு கடோபநிஷத்தில் சொல்வதை கவனிக்க வேண்டும். கர்ம பலன் நிலயற்றது என்று விளக்கும் பொருட்டு அவர் சொல்கிறார்:

जानाम्यहँ शेवधिरित्यनित्यं नह्यध्रुवै: प्राप्यते हि ध्रुवं तत् ।
ततो मय नचिकेताश्चतोऽग्नि: अनित्यैद्रव्यै: प्राप्तवानस्मि नित्यम् ॥ kato 1.2.10

கர்ம பலன் நிலையற்றது என்று நான் அறிவேன். ஏனெனில் அழியக் கூடிய ஸாதனங்களால் அந்த அழியாததை அடைய முடியாது. நசிகேதனே, இருந்தாலும் என்னால் யாகம் செய்யப் பட்டது. நிலையற்ற ஸாதனங்களைக் கொண்டு அதிக காலத்துடன் கூடிய யம பதவியை அடைந்துள்ளேன். இங்கு நித்யம் என்ற சொல்லுக்கு அதிக காலம் என்றே பொருள் கொள்ளப் படுகிறது.

ஆத்மாவின் லக்ஷணங்களை பகவத் கீதையும் இவ்வாறே கூறுகிறது.

न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूय: ।
अजो नित्य: शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे॥ Gita 2.20

இவ்வாத்மா ஒரு போதும் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்தது அன்று. இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது. உடல் கொல்லப் படும் இடத்தும் ஆத்மா கொல்லப் படுவதில்லை.

अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।
नित्य: सर्वगत: स्थाणुरचलोऽयं सनातन: ॥ Gita 2.24

இவ்வாத்மா வெட்டுண்ணான், வேகான், நனையான், உலரான். இவன் நித்தியமாய், நிறைவாய், நிலையாய், அசைவற்றவனாய் என்றுமிருப்பவன்.

अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते । Gita 2.25

இவ்வாத்மா இந்திரியங்களுக்கு அகப்படாதவன், புத்திக்கு எட்டாதவன், மாறுபடாதவன் எனப் படுகிறான்.

ஆத்மாவைப் பற்றி யமன் நாசிகேதனுக்கு இவ்விதம் உபதேசிக்கிறார்.

अणोरणीयान्महतो महीयान् आत्मास्य जन्तोर्निहितो गुहायाम्।
तमक्रतु: पश्यति वीतशोक: धातुप्रसादान्महिमानमात्मन: ॥ kato 1.2.20

ஆத்மா சிறியதைக் காட்டிலும் சிறியது. பெரியதைக் காட்டிலும் பெரியது. இந்த உயிரினுடைய ஹ்ருதய குகையில் இருக்கிறது. ஆசையற்றவன், இந்திரியத்தின் அமைதியினால் ஆத்மாவினுடைய இந்த மஹிமையை அறிகிறான், சோகத்திலிருந்து விடுபடுகிறான்.

ஆத்மாவும் ப்ரம்மனும் (ஈச்வரனும்) ஒன்றாகையால் ப்ரம்மனைப் பற்றி கூறும் பொழுது யமன் நசிகேதனுக்கு சொல்லுகிறார்:

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकम् नेमा विध्युतो भन्ति कुतोऽयमग्नि: ।
तमेव बान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥ kato 2.2.15

அங்கு சூரியன் ஒளிர்வதில்லை, நிலவும் நக்ஷத்திரங்களும் ஒளிரா. இந்த மின்னல்கள் ஒளிரா ! (அப்படி இருக்க) இந்த நெருப்பு எப்படி ஒளிர முடியும்? ஸ்வயமாக விளங்குகின்ற அதையே சார்ந்து இவை அனைத்தும் ஒளிருகின்றன. அதனுடைய ஒளியினாலேயே இவை அனைத்தும் ஒளிருகின்றன.

இதுவரையிலும், இந்த எட்டு மந்திரங்களிலும் ஈச்வரனில் ஆரம்பித்து அவர் எப்படி ஸ்ர்வ வியாபி என்று கூறி, அவரை (ஆத்மாவை) அடையும் இரண்டு மார்க்கங்களைக் கோடி காட்டி, ஆத்மாவைப் பற்றி அறியாதவனை நிந்தித்து, ஆத்மா எப்படி இந்திரியங்கள் மனது இவைகளுக்கு அப்பாற்பட்டது என்று விளக்கி ஆத்மாவின் குணங்களைத் தெளிவு படுத்தி ஈச்வரன் எவ்வாறு இந்த ப்ரபஞ்சத்தை முறைப் படி ப்ரஜாபதிகளின் மூலம் இயக்குகிறார் என்று விளக்கப் பட்டது.

இதிலிருந்து ஆத்மாவை அறிந்து அதை அடைவதே மனிதனாகப் பிறந்தவனின் உயர்ந்த நோக்கம் என்பது புலனாகிறது. ஆயினும் எல்லாராலும் அந்த உயர்ந்த நிலையை அடைவது கடினம் என்று கருத்தில் கொண்டு இந்த உபநிஷத் இறங்கி வந்து, பின் வரும் ஆறு மந்திரங்களில் கர்மங்கள் செய்வதின் பலன், உபாசனைகளின் பலன், இரண்டையும் சேர்த்துச் செய்வதின் பலன் என்ன என்று விவரிக்கிறது. அதன் பிறகு வரும் கடைசி நான்கு மந்திரங்களில் இறக்கும் தருவாயில் இருக்கும் மனிதன் என்ன பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது.

############

# மந்திரம் 9.

இது வரையிலும் இந்த உபநிஷத் உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களைச் சொல்லி வந்தது. அடுத்த ஆறு மந்திரங்களில் கர்மங்கள் மாத்திரம் செய்வதின் பலன், உபாசனை மாத்திரம் செய்வதின் பலன், இரண்டையும் சேர்த்துச் செய்வதின் பலன், இரண்டு விதமான உபாசனைகளை சேர்த்துச் செய்வதின் பலன் என்ன என்று விளக்குகிறது.

வரும் மந்திரங்களைப் பார்ப்பதற்கு முன் நாம் சில பதங்கள் எந்த பொருட்களில் உபயோகம் செய்யப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம். இந்த விசேஷமான அர்த்தங்கள் அகராதியில் கிடைக்கா.

கர்மங்கள் என்றால் நாம் சாதாரண வாழ்க்கையில் செய்யும் காரியங்களோ கடமைகளோ அல்ல. அவைகள் வேதங்களில் கூறிய அவரவர்க்கு ஏற்பட்ட நித்ய கர்மாக்கள், ஹோமங்கள், யக்ஞங்கள் செய்வது ஆகும். அவைகளையும் வேதத்தில் சொல்லியபடி செய்வது ஆகும். யக்ஞங்களிலும் எல்லோரும் எல்லா யக்ஞங்களையும் செய்வதற்கு தகுதி கிடையாது. உதாரணமாக அச்வமேத யாகம் செய்ய அரசர்களுக்குத் தான் தகுதி உண்டு. ஆனால் நித்ய கர்மாக்களில் தேர்ச்சி பெற்று, உபாசனை மார்க்கத்தில் உச்ச நிலையை அடைந்தவர்கள் மனதால் அச்வமேத யாகத்தை உபாசனையாக செய்ய முடியும். இந்த உபாசனையே ப்ருகதாரண்ய உபநிஷத்தில் முதல் காண்டத்தில் விளக்கப் படுகிறது.

உபாசனை என்பது மனதால் செய்யப் படும் கர்மங்கள் ஆகும். அவையும் குறிப்பிட்ட முறைப் படி குருவின் உபதேசம் பெற்று செய்வது. உபாசனையிலும் பல வகைகள் உண்டு. ஒரு குறிப்பிட்ட பலனை எதிர் பார்த்து ஒரு குறிப்பிட்ட தேவதையை மனதில் கொண்டு துதிப்பது. அல்லது நிஷ்காமமாக, தனக்கு என்று வேண்டாமல் பலனை ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்து உபாசனை செய்வது. இது மாதிரி செய்வது மிகவும் உயர்ந்ததாகக் கருதப் படுகிறது. இப்பொழுது இந்த மந்திரத்தைப் பார்ப்போம்.

अन्धं तम: प्रविशन्ति येऽविध्यामुपासते ।
ततो भूय इव ते तम: य उ विध्यायाँरता: ॥ **9**

அந்தம் தம: ப்ரவிசந்தி யேऽவித்யாமுபாஸதே |
ததோ பூய இவ தே தம: ய உ வித்யாயாம்ரதா: || 9

ये யே - யார் अविद्यां அவித்யாம் - கர்மத்தை (மட்டும்) उपासते உபாஸதே - அனுஷ்டிக்கிறார்களோ (அவர்கள்) अन्धं तम: அந்தம் தம: - அடர்ந்த இருளை प्रविशन्ति ப்ரவிசந்தி - அடைகிறார்கள் ये उ யே உ - எவர்கள் विद्यायां வித்யாயாம் - உபாசனையில் (மட்டும்) रता: ரதா: - பற்று உள்ளவர்களோ (ரசிக்கிறவர்களோ) ते தே - அவர்கள் तत: தத: - அதை விட भूय इव பூய இவ - அதிகமான तम: தம: இருளை (அடைகிறார்கள்).

பொருள்:

யார் கர்மத்தை மட்டும் அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் அடர்ந்த இருளை அடைகிறார்கள். எவர்கள் உபாசனையில் மட்டும் பற்று உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அதை விட அதிகமான இருளை அடைகிறார்கள்.

விளக்கம்:

இங்கு அவித்யா என்பது கர்மமாகும். மூன்றாவது மந்திரத்தில் ஆத்மாவைப் பற்றி அறியாதவன் இருண்ட லோகங்களை அடைகிறான் என்று சொல்லப் பட்டது. இங்கு செயல்களின் (கர்மாக்கள், உபாசனைகளின்) பலன்கள் கூறப்படுகிறது. வேதத்தில் சொல்லியிருக்கும் ஆத்ம தத்துவத்தையும் கடவுளையும் மறுத்து, ஆனால் வேதத்தில் சொல்லப் படும் கர்மாக்களை ஒத்துக் கொண்டு, கர்மாக்களே எல்லா பலன்களும் கொடுக்கும் என்று நம்புபவர்கள் பலர் உண்டு. அவையெல்லாம் அநித்யமான பலன்களே. இவற்றினால் ஏற்படும் பலன்களை அனுபவிப்பதற்காக பல பிறவிகள் எடுத்தாக வேண்டும். ஆக கர்மத்தை மாத்திரம் செய்பவர்கள் முக்தி பெறுவது, ஆத்மாவை அறிவது, நடவாத காரியம். ஆத்மா ஒன்றே சுயம் பிரகாசமானது அதன் முன்னே சூரியன், சந்திரன், மின்னல்கள் பிரகாசிப்பதில்லை. ஆத்மாவை அறிய முடியாதவர்கள் இருளையே அடைகிறார்கள் என்று இங்கு கூறப் படுகிறது.

பலன்களை உத்தேசித்து செய்யப் படும் கர்மங்களைப் பற்றி பகவத் கீதையிலும் இதுவே சொல்லப் படுகிறது

काङ्क्षन्त: कर्मणां सिद्धिं यजन्त इह देवता: ।
क्षिप्रम्हि मानुषे लोके सिद्धिर्भवति कर्मजा ॥ Gita 4.12

காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: |
க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா || Gita 4.12

வினைப் பயனை விரும்புவர்கள் இம்மையில் தேவதைகளைத் தொழுகின்றனர். ஏனென்றால் வையகத்தில் வினைப்பயன் விரைவில் வாய்க்கிறது.

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ।
एवं त्रयीधर्मनुप्रपन्ना गतागतं कामकामा लभन्ते ॥ Gita 9.21

தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விசாலம் க்ஷீணே புண்ய மர்த்யலோகம் விசந்தி |
ஏவம் த்ரயீதர்மனுப்ரபன்னா கதாகதம் காமகாமா லபந்தே || Gita 9.21

அவர்கள் (மூன்று வேத நெறிகளைப் பின்பற்றுபவர்கள்) அந்த அகன்ற வானுலகை அனுபவித்து, புண்ணியம் தேய்ந்த பிறகு மண்ணுலகம் அடைகிறார்கள். இங்ஙனம் மூன்று வேத நெறிகளைப் பின்பற்றும் போகப் பித்தர்கள் பிறப்பு இறப்பு அடைகின்றனர்.

அடுத்ததாக உபாசனை மட்டும் செய்பவர்கள் என்ன ஆகிறார்கள்? உபாசனை என்றால் இங்கு தெய்வங்களை குறிப்பிட்ட பலனுக்காக வேதத்தில் கூறியபடி தியானம் செய்வது, நிச்சயமாக முந்தியவர்களை விட இவர்கள் மேலான சுக போகங்களைப் பெறுவார்கள். ஆனால் அவற்றிலேயே, சுக போகங்களிலேயே, லயித்து அவர்கள் ஆத்மாவை அடைவதற்கு முயற்சி செய்யாமலிருந்து விடுவார்கள். அதனால் தான் அவர்கள் கர்மத்தை செய்பவர்களை விட அடர்ந்த இருளை அடைகிறார்கள் என்று சொல்லப் படுகிறது.

பகவத் கீதையிலும் தெய்வ உபாசனையைப் பற்றி பகவான் கிருஷ்ணன் இவ்வாறே கூறுகிறார்.

यान्तिदेवव्रता देवान्पितॄन्यान्ति पितृव्रता: ।
भूतानि यान्ति भूतेज्या यान्ति मद्याजिनोऽपि माम् ॥ Gita 9.25

யாந்தி தேவவ்ரதா தேவான்பித்ரூன்யாந்தி பித்ருவ்ரதா: | பூதானி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜினோऽபி மாம் ||

தேவர்களைத பூஜிக்கின்றவர்கள் தேவர்களை அடைகின்றனர், பிதிர்களைத் தொழுபவர் பிதிர்களை அடைகின்றனர் (அவரது அருளைப் பெருகின்றனர்). பூதங்களை தொழுகின்றவர் பூதங்களைப் போய்ச்சேருகின்றனர். என்னைப் பூஜிக்கின்றவர் என்னயே அடைகின்றனர். இங்கு "என்னைப் பூஜிக்கின்றவர்" எப்படி பூஜிக்க வேண்டும் என்று என்னொரு இடத்தில் சொல்லுகிறார் "மனதை என்னிடம் வைத்து, என்பால் பக்தி பண்ணி, எனக்கு யாகம் செய்து, என்னை வணங்கி, என்னைக் குறியாகக் கொண்டு, உள்ளத்தை உறுதிப் படுத்துவது". (Gita 9.34)

அடுத்து வரும் இரண்டு மந்திரங்களும் இந்த இரண்டு விதமான நெறிகளினால் ஏற்படும் பலன்கள் எவை சேர்த்து செய்வதின் பலன் என்ன என்று விவரிக்கின்றன.

###########

# மந்திரம் 10.

अन्यदेवाहुर्विध्यया अन्यदाहुरविध्यया ।
इति शुश्रम धीराणां ये नस्तद्विचचक्शिरे ॥ **10.**

அன்யதேவாஹூரவித்ய்யா அன்யதாஹூரவித்யயா |
இதி சுச்ரும தீராணாம் யே நஸ்தத் விசசக்ஷிரே || 10

विध्यया வித்யயா - உபாசனையினால் अन्यत् एव அன்யத் ஏவ - ஒரு பலன் आहु: ஆஹு - சொன்னார்கள் अविध्यया அவித்யயா - கர்மத்தினால் अन्यत् ऐव அன்யத் ஏவ - வேறு ஒரு பலன் என்றும் आहु ஆஹு - சொன்னார்கள் इति இதி - இவ்வாறு ये யே - எவர் नः நு: எங்களுக்கு तत् தத் - அதை विचचक्शिरे விசசக்ஷிரே - வியாக்கியானம் செய்தார்களோ धीराणां தீராணாம் - அந்த ஞானிகளின் (வசனத்தை) शुश्रम சுச்ரும - கேட்டிருக்கிறோம்.

பொருள்:

உபாசனையினால் வரும் பலன் வேறு என்றும் கர்மத்தினால் வரும் பலன் வேறு என்றும் எங்களுக்கு வியாக்கியானம் செய்த ஞானிகளிடமிருந்து இவ்வாறு கேட்டிருக்கிறோம்.

விளக்கம்

முந்திய மந்திரத்தில் இரண்டு நெறிகள் கூறப்பட்டன. அவற்றினால் இரண்டு வேறு விதமான பலன்கள் கிடைப்பதாக தேர்ந்த, அறிவிற் சிறந்த ஞானிகளிடமிருந்து தெரிந்து கொண்டோம் என்று இங்கு சொல்லப்படுகிறது.

வேதத்தின் அறிவை முறையாக வழிவழியாக நன்கு கற்றறிந்த ஞானிகள், குருமார்கள் தமது சிஷ்யர்களுக்கு, நேர் முகமாக, விளக்கி வந்தார்கள். இவர்களின் ஆதி குரு ஈச்வரனே ஆகும். எனவே இது காலத்தினால் மாறாத அறிவு என்பது தெளிவாகிறது.

அடுத்த மந்திரம் இரண்டையும் சேர்த்து செய்வதின் பலன் என்ன என்று விளக்குகிறது.

############

# மந்திரம் 11.

## கர்ம உபாசன சமுச்சயம்

சமுச்சயம் என்றால் சேர்த்தல் என்று பொருள். இந்த மந்திரம் இவை இரண்டையும் சேர்த்து செய்வதின் பலனைக் கூறுகிறது.

विध्यां चाविध्यां च यस्तद्वेदोभयँसह ।
अविध्यया मृत्युं तीर्त्वा विध्ययामृतमश्नुते ॥ **11.**

வித்யாம் சாவித்யாம் ச யஸ்தத்வேதோபயம்ஸஹ |
அவித்யயாம் ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமச்னுதே ||

य: ய:- எவர் विध्यां च अविध्यां च வித்யாம் ச அவித்யாம் ச - உபாசனையும், கர்மத்தையும் तत् தத் - ஆகிய उभयं सह உபயம் ஸஹ - இரண்டையும் சேர்த்து वेद வேத - அனுஷ்டிக்கிறாரோ (அவர்) अविध्यया அவித்யயா - கர்மத்தினால் मृत्युं ம்ருத்யும் - மரணத்தை तीर्त्वा தீர்த்வா - தாண்டி विद्ययां வித்யயாம் - உபாசனையினால் अमृतं அம்ருதம் - தேவதா ஸ்வரூபத்தை अश्नुते அச்னுதே - அடைகிறார்.

பொருள்

எவர் உபாசனையும், கர்மம் ஆகிய இரண்டையும் சேர்த்து அனுஷ்டிக்கிறாரோ (அவர்) கர்மத்தினால் மரணத்தை தாண்டி உபாசனையினால் தேவதா ஸ்வரூபத்தை அடைகிறார்.

விளக்கம்

சங்கரர் மரணத்தைத் தாண்டி என்ற பதத்திற்கு ஸ்வாபிக கர்ம ஞானம் என்று விளக்குகிறார். ஸ்வாபிக கர்மம் என்றால் நமது இயற்கையாக ஏற்ப்பட்ட குணங்களின் போக்குப் படி கர்மங்களைச் செய்வது. உதாரணமாக ஒருவனுக்கு ரஜோ குணம் அதிகமாக இருந்தால் அதன் தூண்டுதலின் பேரில் அவனது செயல்களில் ஆசையும், வேட்கையும் அதிகமாக இருக்கும். தமோ குணம் அதிகமாக இருந்தால் அசட்டை, சோம்பல், உறக்கம் முதலியவைகளே அவனை ஆக்ரமிக்கும். அப்படி இல்லாமல் சாஸ்திரங்களும் பெரியவர்களும் எப்படி வாழ வேண்டும் என்று சொல்கிறார்களோ, அப்படி நடப்பதற்கு அவனது இயற்கையான குணத்திலிருந்து வேறு பட்டு ஒரு கட்டுப் பாடான வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும். அப்படி நடப்பதே மரணத்தைத் தாண்டுவது என்று சங்கரர் விளக்குகிறார்.

ஒரு மனிதன் பிறந்தவுடன் இந்திரியங்களின் ஆட்சிக்கு உட்பட்டு நினைத்த நேரத்தில் ஆசைப் பட்டதை சாப்பிடுவது, நினைத்ததை பேசுவது, நினைத்ததை செய்வது என்று கட்டுப் பாடற்ற வாழ்க்கை வாழுகிறான். இதுவே அவனுடைய ஸ்வாபிக கர்மம். ஏழு வயதில் உபநயனம் செய்வித்து குறிப்பிட்ட நேரத்தில் சந்தியாவந்தனம் செய்யும் முறைக்குக் கொண்டு வருவதால் அவனுக்கு முறையாக வாழ்வதற்கு ஒரு ஏற்பாடு செய்யப் படுகிறது. இதையே இரண்டாவது பிறப்பு என்று கூறப் படுகிறது.

கர்ம உபாசன சமுச்சயம் என்ற பெயரைக் கண்டவுடன் இது ஏதோ புதிய விஷயம், நடைமுறைக்கு உகந்ததா என்ற சந்தேகம் எழலாம். தினப்படி செய்யும் சந்தியா வந்தனமானது கர்மமும் உபாசனையும் சேர்ந்ததானது. ஆசமனத்தில் ஆரம்பித்து தேவ தர்ப்பணம் வரை செய்யும் பூர்வ பகுதியின் காரியங்கள் கர்மம். பிறகு உத்தர பாகத்தில் செய்யும் ஜபம் காயத்ரி உபாசனையாகும்.

சிறு வயதில் காயத்ரி ஜபம் செய்யும் பொழுது வெறும் உச்சரிப்பில் கவனம் செலுத்த வெண்டும். அந்த மந்திர உச்சாடனமே, பொருள் தெரியா விட்டாலும் மனதைத் தூய்மைப் படுத்துகிறது. தினப்படி மூன்று வேளையும் ஜபம் செய்யும் பொழுது காயத்ரி மனதில்

புகுந்து, ஊறி மனதைப் பக்குவப் படுத்தி, அப்யாசகனுக்கு, மேற்கொண்டு பொருள் தெரிந்து ஜபம் செய்யத் தூண்டுகிறது.

வெதாந்த விளக்கத்தின்படி ஸந்தியா என்பது ஜகதீஸ்வரியைக் குறிக்கும். கீழே கொடுக்கப் பட்ட ஸ்லொகத்தின் படி

या सन्ध्या सा जगत् सूधि: मायातीत निश्कला ऐश्वरि केवल शक्ति: तत्व त्रय समुध्भवा

ஸந்தியாவானவள் உலகத்தை காப்பவள், மாயைக்கு அப்பாற் பட்டவள, ஈஸ்வரி, சக்தியின் உருவம், மூன்று குணங்களயும் உடையவள் என்று கூறப் படுகிறது. ஆக சந்தியாவாஅனவள் மாயா சகித ப்ரம்மம் என்று கருதப் அப்டுகிறது. அஸாவாதித்யோ ப்ரம்ம, ப்ரம்மைவாஹமஸ்மி என்ற ஐக்ய அனுஸந்தான மந்திரம் நிர்குண ப்ரம்ம உபாசனை. இத்தகைய மகா வாக்யத்தை ஏழு வயதிலேயெ ஒரு சிறுவனுக்கு உபதேசிக்கப் படுவது ஆச்சர்யமான விஷயம்.அந்த வயதில் இது நிர்குண ப்ரம்ம உபாசனைக்கு ஒரு அறிமுகமாகத் தோன்றுகிறது.

சிறு வயதிலேயெ புகட்டப் பட்ட இந்த மந்திரம் ஒழுங்காக தவறாது சந்தியா வந்தனம் செய்யும் பொழுது ஒருவனது மனது படிப் படியாக தூய்மை அடைந்து யக்ஞங்கள் முதலியவை செய்வதற்கு எண்ணம் எழுவதற்கு ஏதுவாகிறது.

வேதங்களில் கூறிய யக்ஞங்களை முறைப்படி சிரத்தையுடன் செய்தால், மனது ஒரு கட்டுப் பாட்டிற்கு வரும். அப்பொழுது அவனது இயற்கையான குணங்கள் மாறி மேற்கொண்டு செய்யவேண்டிய தியான முறைகளுக்கு, (உபாசனைகளுக்கு), தகுதி உடையவனாகிறான். அவ்வாறு அடைந்த நிலையையே ஸ்வாபிக கர்ம ஞானம், மரணத்திலிருந்து விடுதலை என்று சங்கரர் கூறுகிறார்.

கர்மங்களை முறைப் படி செய்து, மனத்தூய்மை அடைந்து உபாசனைகளைச் செய்தால் தேவதா ஸ்வரூபத்தை அடையலாம் என்று கர்மம் உபாசனை இரண்டையும் சேர்த்து செய்வதின் பலனை இந்த மந்திரம் விளக்குகிறது.

இனி அடுத்த மூன்று மந்திரங்களில் உபாசனைகளின் தனித்தனி பலன்களும் சேர்த்து செயவதின் பலன்களும் கூறப்படுகிறது.

###########

## மந்திரம் 12.

## ஹிரண்ய கர்ப்ப, ப்ரக்ருதி உபாசனைகள்

अन्धं तम: प्रविशन्ति येऽसम्भूतिमुपासते ।

ततो भूय इव ते तम: य उ सम्भूत्याँरता: ॥ **12.**

அந்தம் தம: ப்ரவிசந்தி யேऽஸம்பூதிமுபாஸதே ।
ததோ பூய இவ தே தம: ய உ ஸம்பூத்யாயாம்ரதா: ॥ 12

ये யே - யார் असम्भूतिम् அஸம்பூதிம் - ப்ரக்ருதி உபாசனையை (மட்டும்)

उपासते உபாஸதே - அனுஷ்டிக்கிறார்களோ (அவர்கள்) अन्धं तम: அந்தம் தம: - அடர்ந்த இருளை प्रविशन्ति ப்ரவிசந்தி - அடைகிறார்கள் ये उ யே உ - எவர்கள் सम्भूत्यां ஸம்பூத்யாம் - ஹிரண்ய கர்ப்ப உபாசனையில் (மட்டும்) रता: ரதா: - பற்று உள்ளவர்களோ (ரசிக்கிறவர்களோ) ते தே - அவர்கள் तत: தத: - அதை விட भूय इव பூய இவ - அதிகமான तम: தம: இருளை (அடைகிறார்கள்).

பொருள்:

யார் ப்ரக்ருதி உபாசனையை மட்டும் அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் அடர்ந்த இருளை அடைகிறார்கள். எவர்கள் ஹிரண்ய கர்ப்ப உபாசனையில் மட்டும் பற்று உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அதை விட அதிகமான இருளை அடைகிறார்கள்.

விளக்கம்:

இதில் சொல்லியிருக்கும் கருத்தைப் புரிந்து கோள்வதற்கு முன் உபாசனைகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். வேதத்தில் பல விதமான் உபாசனைகள் கூறப்படுகின்றன. உபாசனை என்பது வேதங்களில் கூறிய முறைப்படி குருவின் நேர்முக உபதேசம் பெற்று மனதால் செய்யப் படும் தியானம்.

உதாரணமாக ப்ருகதாரண்யக உபநிஷத்தில் இரண்டாவது அத்யாயத்தில் அஜாதசத்ரு என்ற அரசனுக்கும், பாலாகி என்ற செருக்கு மிகுந்த உபாசகனுக்கும் நடக்கும் சம்பாஷணையில் பல விதமான உபாசனைகள் பேசப் படுகின்றன. இங்கு அஜாதசத்ரு என்ற அரசனோ ப்ரம்ம ஞானி என்று கருதப் படுபவன். அவனிடம் சென்று இந்த உபாசகன் "உனக்கு ப்ரம்மத்தை அடைவதைப் பற்றி சொல்கிறேன் என்கிறான். அரசனும் அப்படியே ஆகட்டும் என்கிறான்.

பாலாகி "நான் சூரியனை ப்ரம்மமாக உபாசிக்கிறேன்", அதற்கு அரசன் "சூரியனை உபாசித்தால், உபாசிப்பவன் மிகவும் தேஜஸ்வியாக ஆவான், ஆனால் ப்ரம்மனை அடைய முடியாது" என்கிறான். இவ்வாறே பல விதமான தேவதா உபாசனகளை, ஹிரண்ய கர்ப்ப உபாசனை உள்பட கூறவும், அரசன் இவை எல்லாவற்றினாலும் ப்ரம்மனை அடைய முடியாது, இவ்வளவு தான் உனக்குத் தெரிந்ததா என்று கேட்க பாலாகியும் ஒத்துக்கொண்டு என்னை மாணாக்கனாக ஏற்று ப்ரம்ம உபாசனையைப் பற்றி உபதேசம் செய்யுமாறு அரசனிடம் கேட்டுக் கொள்கிறான். அரசனும் அவன் வேண்டியபடி உபதேசம் செய்கிறான்.

பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் 26 முதல் 29 ஸ்லோகம் வரையிலும் பல விதமான உபாசனைகள் கூறப்படுகின்றன.

இந்த மந்திரத்தில் இரண்டு உபாசனைகள் சொல்லப் படுகிறது. ஒன்று ஸம்பூதி உபாசனை. இன்னொன்று அஸம்பூதி. ஸம்பூதி என்றால் எது தோன்றியதோ அது. உபநிஷத்துக்கள்

முதல் முதலில் தோன்றியது ப்ரம்மா அல்லது ஹிரண்ய கர்ப்பர் என்று கூறுகின்றன. ஸம்பூதி உபாசனை என்றால் இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் ப்ரம்மாவாக, ஹிரண்ய கர்ப்பராக நினைத்து தியானம் செய்வது. இந்த உபாசனைக்கு வ்யாக்ருத (வெளித்தோற்றதுக்கு வந்தது) உபாசனை என்ற பெயரும் உண்டு.

அஸம்பூதி என்றால் எது வெளிவரவில்லயோ அது. எது வித்தாக கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதோ அது. ப்ரும்மம் (ப்ரம்மா அல்ல) மாயையுடன் சேர்ந்து ஹிரண்ய கர்ப்பர் ஆனார் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ஆக அஸம்பூதி உபாசனை என்றால் மாயா தத்துவத்தை தியானம் செய்வது. இதற்கு ப்ரக்ருதி உபாசனை, அவ்யாக்ருத (வெளித்தோற்றதுக்கு வராதது) உபாசனை என்றும் சொல்லுவதுண்டு. இந்த உபாசனையில் ப்ரபஞ்சம் முழுவதையும் விதையாக நினத்து உபாசனை செய்வது.

இங்கு சொல்லப்படும் உபாசனைகள் இரண்டுமே காம்ய உபாசனைகள், அதாவது பலனை எதிர்பார்த்து செய்யப் படும் உபாசனைகள், என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ஆக அவற்றினால் ஆத்மாவை அறிய முடியாது. (மேலே சொன்ன அஜாத சத்ரு பாலாகி சம்பாஷணையைப் பார்க்கவும்). எனவே அவற்றினால் ஏற்படும் பலன்கள் அடர்ந்த இருளுக்கும், அதை விட அடர்ந்த இருளுக்கும் ஒப்பாகும்.

இனி அடுத்த மந்திரம் இவற்றின் பலன் வெவ்வேறு என்று கூறுகிறது.

##########

# மந்திரம் 13.

## अन्यदेवाहु: सम्भवाद् अन्यदाहुरसम्भवाद् ।
## इति शुश्रम धीराणां ये नस्तद्विचचक्शिरे ॥ 13.

அன்யதேவாஹு: ஸம்பவாத் அன்யதாஹுர ஸம்பவாத் |
இதி சுச்ரும தீராணாம் யே நஸ்தத் விசசக்ஷிரே || 13.

सम्भवाद् ஸம்பவாத் - ஹிரண்ய கர்ப்ப உபாசனையினால் अन्यत् ऎव அன்யத் ஏவ - ஒரு பலன் आहु ஆஹு - சொன்னார்கள் असम्भवाद् அஸம்பவாத் - ப்ரக்ருதி உபாசனையினால் अन्यत् ऎव அன்யத் ஏவ - வேறு ஒரு பலன் என்றும் आहु ஆஹு - சொன்னார்கள் इति இதி - இவ்வாறு ये யே - எவர் न: ந: எங்களுக்கு तत् தத் - அதை विचचक्शिरे விசசக்ஷிரே - வியாக்கியானம் செய்தார்களோ धीराणां தீராணாம் - அந்த ஞானிகளின் (வசனத்தை) शुश्रम சுச்ரும - கேட்டிருக்கிறோம்.

பொருள்:

ஹிரண்ய கர்ப்ப உபாசனயினால் வரும் பலன் வேறு என்றும் ப்ரக்ருதி உபாசனையினால் வரும் பலன் வேறு என்றும் எங்களுக்கு வியாக்கியானம் செய்த ஞானிகளிடமிருந்து இவ்வாறு கேட்டிருக்கிறோம்.

விளக்கம்

இங்கு தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாவது ஹிரணய கர்ப்ப (காம்யமான - பலனை எதிர்பார்த்த) உபாசனையினால் அஷ்ட மகா சித்திகள் கிடைக்கப் பெறுவர். ப்ருக்ருதி உபாசனையினால் ப்ருக்ருதி லயம் அடைவர். ப்ருக்ருதி லயம் என்றால் ப்ரளய காலம் வரை மறு பிறவி எடுக்காமல் இருப்பர். அதாவது பல காலம் மீண்டும் மீண்டும் பிறப்பிலிருந்து விடுதலை பெறுவர். ஆனால் முக்தி கிடையாது. எனவே இவை இரண்டுமே அடர்ந்த இருளை அடைவற்கு சமம்.

அடுத்த மந்திரத்தில் இவை இரண்டையும் சேர்த்து செய்வதின் பலன் என்ன என்று பார்ப்போம்.

#########

# மந்திரம் 14.

## உபாசன சமுச்சயம்

सम्भूतिं च विनाशं च यस्तद्वेदोभयँसह ।

विनाशेन मृत्युं तीर्त्वा सम्भूत्यामृतमश्नुते ॥ 14

ஸம்பூதிம் ச வினாசம் ச யஸ்தத்வேதோபயம்ஸஹ ।
வினாசேன ம்ருத்யும் தீர்த்வா ஸம்பூத்யாம்ருதமச்னுதே ॥

य: ய:- எவர் (अ) सम्भूतिं च विनाशं च ஸம்பூதிம் ச வினாசம் ச - ப்ரக்ருதி உபாசனை, ஹிரண்ய கர்ப்ப உபாசனை तत् தத் - ஆகிய उभयं सह உபயம் ஸஹ - இரண்டையும் சேர்த்து वेद வேத - அனுஷ்டிக்கிறாரோ (அவர்) विनाशेन வினாசேன - ஹிரண்ய கர்ப்ப உபாசனையால் मृत्युं ம்ருத்யும் - மரணத்தை तीर्त्वा தீர்த்வா - தாண்டி (अ) सम्भूत्या (அ) ஸம்பூத்யா - ப்ரக்ருதி உபாசனையினால் अमृतं அம்ருதம் - ப்ரக்ருதி லயத்தில் மேலான பதவியை अश्नुते அச்னுதே - அடைகிறார்.

பொருள்

எவர் ப்ரக்ருதி உபாசனை, ஹிரண்ய கர்ப்ப உபாசனை ஆகிய இரண்டையும் சேர்த்து அனுஷ்டிக்கிறாரோ, அவர் ஹிரண்ய கர்ப்ப உபாசனையால் மரணத்தை தாண்டி ப்ரக்ருதி உபாசனையினால் ப்ரக்ருதி லயத்தில் மேலான பதவியை அடைகிறார்.

விளக்கம்

வேதங்களில் வரும் மந்திரங்களின் பதங்களைப் பிரித்துப் படிப்பதற்கு அதன் இலக்கணம் தெரிய வேண்டும். இந்த மந்திரத்தின் முதல் பதம் "ஸம்பூதிம்". ஆனால் இலக்கண விதிப்படி, முந்திய மந்திரத்தின் கடைசி சப்தம் "யே" என்று முடிவதால் இதை "அஸம்பூதிம்" என்றே கொள்ள வேண்டும்.

இந்த இலக்கண விதி தெரியாவிட்டால் இந்த மந்திரத்தின் உண்மையான அர்த்தம் தெரியாமல் அனர்த்தம் ஆகிவிடும்.

இரண்டவது வரியில் வரும் "தீர்த்வா ஸம்பூத்யா" என்பதை "தீர்த்வா அஸம்பூத்யா" என்று கொள்ள வேண்டும்.

மேலே சொன்னபடி "அ" இரண்டு இடங்களில் சேர்த்துக் கொள்வதற்கு இன்னொரு காரணமும் உண்டு. வினாசம் என்ற சொல்லுக்கு மரிப்பது என்று பொருள். எது மரியக் கூடியதோ அது தோன்றினால் தான் மரியும் என்பதில் சந்தேகமில்லை. எனவே வினாசம் என்ற சொல் ஸம்பூதி ஹிரண்ய, கர்ப்பரைக் குறிக்கிறது. ஆக முதலில் ஸம்பூதியை அஸம்பூதி என்று எடுத்துக் கொண்டால்தான் இரண்டு உபாசனைகள் ஆகும்.

இந்த மாதிரியான நுணுக்கமான விஷயங்களை குரு முகமாக இல்லாமல் வெரும் மொழி பெயர்ப்பால் தெரிந்து கொள்ள முடியாது.

இந்த மந்திரத்தில் ம்ருத்யும் என்ற பதத்திற்கு "அதர்ம காமாதி தோஷத்திலிருந்து" விடுதலை என்று சங்கரர் விளக்குகிறார். அதாவது ஆசையினால் செய்யப் பட்ட தர்ம விரோத கார்யங்களினால் ஏற்படும் தோஷம் நீக்கப்படும் என்பதாகும். அப்படிப் பட்டவர்கள் முந்திய மந்திரத்தில் கூறியபடியான அஷ்டமா சித்திகளை அடைகிறார்கள்.

அம்ருதம் என்பதற்கு முந்திய மந்திரத்தில் கூறிய ப்ருக்ருதி லயத்தில் இன்னும் மேலான நிலை அதாவது பிரளய காலம் வரை பிறப்பு இறப்பு இல்லாமல் சிரஞ்ஜீவியாக இருப்பார்கள் என்று கொள்ள வேண்டும்.

என்னென்ன விதமான கர்மங்கள், உபாசனைகள், அவைகளின் தனித் தனி பலன்கள் இவைகளைப் பற்றி வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் சொல்லப் பட்டிருக்கின்றன. பல விதமான உபாசனைகள் (தியானங்கள்) இருக்கும் பொழுது ஏன் இங்கு இரண்டு விதமான உபாசனைகளைப் பற்றி மட்டும் பேசப் படுகிறது என்ற கேள்வி எழக்கூடும். மற்ற எல்லா உபாசனைகளைக் காட்டிலும் இவ்விரண்டு உபாசனைகளே மேலானதாகக் கருதப் படுவதால் இந்த மந்திரத்தில் எடுத்துக் கொண்டு அவைகளினாலும் கூட பலன் இவ்வளவுதான் என்று சொல்லி மற்ற உபாசனைகளின் பலனைப் பற்றி சொல்லாமல் எடுத்துக் காட்டியிருக்கிறது.

பதஞ்சலி யோக ஸுூத்திரத்தில் (Ch.1.19) ப்ரக்ருதி லயத்தை எந்த உபாசனை மூலம் அடைய முடியும் என்று சொல்லிவிட்டு இதனால் அஞ்ஞானம் போகாது என்று தெளிவாக கூறப் படுகிறது. அதே போல அணிமா சித்தி முதலிய அஷ்டமா சித்திகளை விவரித்து அவை எல்லாமே ஆத்மாவை அடைவதற்கு தடையாக இருக்கும் என்று சுட்டிக் காட்டப் படுகிறது.

இந்த மந்திரத்தில் இப்படிபட்ட உபாசனைகளால் ஆத்மாவை அடைய முடியாது என்று சொல்லாவிட்டாலும் கூட ஏற்கனவேயே மூன்றாவது மந்திரத்தில் ஆத்மாவை அறியாதவன் அடர்ந்த இருளால் மூடப் பட்ட லோகங்களை அடைவார்கள் என்று சொல்லியதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்யமான் விஷயமாவது இவை அனைத்தும் காம்யமாக, அதாவது பலனை எதிர் பார்த்து செய்யும் கர்மங்கள், உபாசனைகள்: இவைகளினால் பல விதமான சித்திகளை அடையலாம், ஆனால் ஆத்ம ஞானம் அடைந்து முக்தி பெற முடியாது.

ஆத்ம ஞானம் அடைவதற்கு முதல் இரண்டு மந்திரங்களில் சொல்லப் பட்ட வழிகளில் ஒன்றை கடைப் பிடிக்க வேண்டும். அதுவும் குரு முகமாக தீக்ஷை பெற்று, மறுபடி மறுபடி தியானம் செய்து, தீர விசாரம் செய்து ஸதா தியானம் செய்தால், ஈச்வர அனுக்ரஹத்தினால் அடைவதே தவிர வேறு வழி இல்லை.

இதையே ரிஷி ஸ்ரீ யாக்ஞவல்கியர் மைத்ரேயிக்கு இவ்வறு கூறுகிறார்: “ப்ரியே! மைத்ரேயி! ஆத்மாவானது, குரு முகமாக கேட்கப் பட்டு, சிந்தித்து, தியானம் செய்யப் பட்டு அடையப் படுவது “. (B.U. 2.4.5). இன்னொரு இடத்தில் ரிஷி ஸ்ரீ யாக்ஞவல்கியர் ஜனக மகாராஜவிற்கு ப்ரம்மனை அடைவதைப் பற்றி உபதேசிக்குக் போதும் ஆத்ம ஞானம் குரு முகமாகத்தான் அடைய முடியும் என்று வலியுறுத்துகிறார். (B.U 4.4.20). பகவத் கீதையிலும் பல இடங்களிலும் இதே கருத்து சொல்லப் பட்டிருக்கிறது.

இந்த மந்திரத்துடன் கர்மங்களும், உபாசனைகளும் எபப்டிப் பட்டவை அவைகளின் பலன்கள் யாவை என்று குறப்பட்டது. இனி அடுத்து வரும் கடைசி நான்கு மந்திரங்களும் ஒரு மனிதன் செய்ய வேண்டிய ப்ரார்த்தனைகளைப் பற்றி சொல்லுகின்றன.

###########

# மந்திரம் 15.

## பிரார்த்தனை 1

இனி வரும் கடைசி நான்கு மந்திரங்களும் பிரார்த்தனை வடிவில் அமைந்திருக்கின்றன. இந்த ப்ரார்த்தனை இரண்டு விதமான மனிதர்கள் செய்வதாகும். ஒருவர் வேதத்தில் செய்த கர்மங்களை விடாமல் செய்து, மேலான தியானங்கள் செய்து ஹிரண்ய கர்ப்ப லோகத்திற்கு (ப்ரம்ம லோகம் - இந்த ப்ரம்மா, ப்ரம்ம்ம் அல்ல, ப்ரஜாபதி) தகுதியுடையவர், ஆனால் ஞான மார்க்கத்தில் ஈடுபாடு இல்லாதவர். இரண்டாவது நபர் ஆத்மஞானம்

அடைய வேண்டும் என்று தீராத ஆசையால் உந்தப் பட்டு சந்யாசம் பெற்று ஸத்ய ப்ரம்ம தியானம் செய்தவரும் (இன்னும் முழுக்க ஞானம் அடையாதவர், இவரை முமுக்ஷு என்பார்கள்) இந்த ப்ரார்த்தனை செய்வதாக கருதப் படுகிறது. ஏனெனில் இவர்கள் இருவருமே ஹிரண்ய கர்ப்ப லோகத்திற்கு போக தகுதி உடையவர்களாக ப்ருகதாரண்ய உபநிஷத்தில் கூறப் படுகிறது. .(B.U.6.2.15). இந்த இருவருமே ப்ரம்ம லோகம் சென்று பலனை அனுபவித்து அது முடிந்தவுடன் மறுபிறவி எடுப்பார்கள். கர்மங்களைச் செய்தவர் ப்ரார்த்தனை ப்ரம்ம லோகத்தை அடைவதற்காக.. முமுக்ஷுவின் ப்ரார்த்தனை மோக்ஷத்தை அடைவதற்காக.

வேதங்களில் ஒரு மனிதன் இறந்தால், இறந்த பிறகு இரண்டு வழியில் செல்லக்கூடும் என்று சொல்லப் படுகிறது. ஒரு வழி ப்ரம்ம லோகத்திற்கு (ஹிரண்ய கர்ப்பரின் லோகத்திற்கு) செல்லும் வழி. இதன் பெயர் சுக்ல கதி இதுவே ஒரு மனிதன் மிகச் சிறந்த யாகங்களைச் (பதிநான்காவது மந்திரத்தில் கூறப்பட்ட அச்வமேத யாகம் போன்றவற்றை) செய்தவர்கள் செல்லும் வழி. இதில் செல்பவர்கள் ப்ரம்ம லோகம் (ஹிரண்ய கர்ப்ப லோகம்) சென்று ப்ரம்மாவின் காலம் வரை அங்கு இருப்பார்கள்.(B.U.6.2.15) இன்னொரு வழி மற்ற கர்மங்களைச் செய்தவர்கள் பித்ரு லோகம் போன்ற மற்ற லோகங்களுக்குச் சென்று கர்மங்களின் பலனை அனுபவித்து, அது முடிந்தவுடன் மறு படி பூமிக்கு வந்து விடுவார்கள். இந்த வழி க்ருஷ்ண கதி. இவை இரண்டுமே செய்யத் தவறியவர்கள், மனிதப் பிறவி எடுக்காமல் மற்ற பிறவிகளை எடுப்பார்கள்.(B.U.6.2.16)

இந்த மனிதப் பிறவியிலேயே ப்ரம்மத்தை உணர்ந்த ப்ரம்ம ஞானிகள் ஆசையை வென்றவர்கள். தன்னிடம் இல்லாதது என்று ஒன்று இருக்குமானால் தான் ஆசைப் படுவதற்கு காரணம் உண்டு. அவர்கள் எல்லாமும் தானே என்ற நிலையை எட்டி விட்டவர்கள். ஆசை உள்ளவர்களே (மேலே கூறப்பட்ட முமுக்ஷு கூட மோக்ஷம் வேண்டும் என்ற ஆசை உடையவர்) இரண்டு மார்க்க்களிலும் சென்று திரும்பி வந்து உரிய காலத்தில் மறு பிறவி எடுக்கிறார்கள். ஆனால் ப்ரம்ம ஞானிகளுக்கு மறு பிறவி இல்லை ஆதலால் மேற்கூறிய இரண்டு மார்க்கங்களும் கிடையாது. அவர்கள் நேரடியாக ப்ரம்மத்துடன் ஐக்யமாகி விடுகிறார்கள். (B.U.4.4.6).

முதலில் கர்மங்களை செய்தவர் எப்படி ப்ரார்த்தனை செய்கிறார் என்று பார்ப்போம். ப்ரம்ம லோகத்திற்கு செல்லும் முன் வழியில் ஸூர்ய லோகம் வருகிறது. அது ஸூர்யனால் ஒளிர்விக்கப் படுகிறது. ப்ரம்ம லோகத்திற்கு வருபவர்களைக் கட்டுப் படுத்துவதற்காக அதன் வழி ஸூர்யனால் மறைக்கப் பட்டிருகிறது. ஆகவே அந்த லோகத்தில் நுழைவதற்காக ஸூர்யனை நோக்கி இறக்கும் தருவாயில் இருக்கும் கர்மங்களைச் செய்த மனிதர் செய்யும் ப்ரார்த்தனை. இப்பொழுது மந்திரத்தைப் பார்ப்போம்.

हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।

तत्त्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥ 15

ஹிரண்மயேன பாத்ரேண ஸத்யஸ்யாபிஹிதம் முகம் |
தத்த்வம் பூஷந்நபாவ்ருணு ஸத்யதர்மாய த்ருஷ்டயே || 15

முதலில் கர்மங்களையும் உபாஸனையையும் சேர்த்துச் செய்தவர் எவ்வாறு ப்ரார்த்தனை செய்கிறார் என்று பார்ப்போம்.

हिरण्मयेन ஹிரண்மயேன - தங்கத்தைப் போல ஒளி மயமான पात्रेण பாத்ரேண - மறைப்பினால் सत्यस्य ஸத்யஸ்ய - ஹிரண்ய கர்ப்பனை அடையும் (ஸத்யம் என்பவர் ப்ரம்ம லோகத்தின் அதிபதி) मुखम् முகம் - த்வாரம் अपिहितं அபிஹிதம் - மூடப் பட்டிருக்கிறது तत् தத் - அதை पूषन् பூஷன் - ஸூர்ய தேவரே त्वं த்வம் நீங்கள் सत्यधर्माय ஸத்யதர்மாய - ஸத்ய ப்ரம்மனை உபாசனை செய்த दृष्टये த்ருஷ்டயே (எனது) பார்வைக்காக अपावृणु அபாவ்ருணு - நீக்கிவிடுவீர்களாக.

பொருள்

தங்கமயமான மறைப்பினால் ப்ரம்ம லோகத்தை அடையும் வாசல் மறைக்கப் பட்டிருக்கிறது. அதை, ஸூர்ய தேவரே, நீங்கள் ஸத்ய ப்ரம்மனை உபாசனை செய்த (எனது) பார்வைக்காக, திறந்து விடுவீர்களாக.

விளக்கம்

ஏற்கனவே முன்பு கூறியபடி, உபாசகர் முதலில் ஸூர்ய மண்டலம் வழியாகச் சென்று அங்குள்ள ஒரு த்வாரம் வழியாக ஹிரண்ய கர்ப்ப லோகத்திற்கு செல்ல வேண்டும். இங்கு ஹிரண்மயேன பாத்ரேண என்பது ஸூர்யனின் ஒளி மிக்க கிரணங்கள் ஆகும். அவற்றை ஸூர்யன் நீக்கினால் தான் வழியைக் கண்டு பிடித்து மேலே ஹிரண்ய கர்ப்ப (ப்ரம்ம) லோகத்திற்கு செல்ல முடியும். ஆக அத்தகைய கிரணங்களை விலக்கிக் கொள்ளுமாறு, தான் செய்த ஸத்ய ப்ரம்ம உபாசனையையும் எடுத்துக் கூறி, ஸூர்ய தேவனை ப்ரார்த்திக்கிறார். இதன் நோக்கம் உபாசகர் இறந்த பிறகு சுக்ல கதி வழியாக ப்ரம்ம லோகத்திற்கு போகும் பொழுது தடையாக இருக்கும் தங்க மயமான ஒளியுடன் கூடிய மறைப்பை நீக்கவேண்டும் என்பது.

இப்பழுது முமுக்ஷு (அதாவது ஆத்ம ஞானத்தை அடந்தே தீருவது என்று வைராக்யம் பூண்டு, துறவறம் மேற்கொண்டு, ஸத்ய ப்ரம்ம உபாசனையில் தேர்ச்சி பெற்ற சந்யாசி) செய்யும் ப்ரார்த்தனை எப்படி என்று பார்ப்போம்.

हिरण्मयेन ஹிரண்மயேன - தங்கத்தைப் போல ஒளி மயமான पात्रेण பாத்ரேண - (உலகத்தின் உள்ள) கவர்ச்சி கரமான மாயையினால் सत्यस्य ஸத்யஸ்ய - பரப் ப்ரம்மனுடைய உண்மையான मुखम् முகம் - தத்துவம் अपिहितं அபிஹிதம் - மூடப் பட்டிருக்கிறது तत् தத் - அந்த மாயயை पूषन् பூஷன் - ஈச்வரனே त्वं த்வம் நீங்கள் सत्यधर्माय ஸத்யதர்மாய - ஸத்யம் முதலிய தர்மங்களை அனுஷ்டிக்கிற எனக்கு दृष्टये த்ருஷ்டயே - உணரும் பொருட்டு अपावृणु அபாவ்ருணு - நீக்கிவிடுவீர்களாக.

பரப் ப்ரம்மத்தின் மீது ஏற்றி வைக்கப் பட்டுள்ள மாயையானது தங்கத்தைப் போல கவர்ச்சி கரமானது. அது ப்ரம்மத்தை மறைக்கிறது எனவே முமுக்ஷு தனது நோக்கமான ப்ரம்ம தத்துவத்தை அடைவதற்கு தடையாக உள்ள மாயயை விலக்கி ப்ரம்மனை உணர்வதற்கு அருளுமாறு ஈச்வரனை ப்ரார்த்திக்கிறார்.

எதற்காக என்பதை அடுத்த மந்திரத்தில் சொல்லப் படுகிறது

################

# மந்திரம் 16.

## பிரார்த்தனை 2.

சென்ற மந்திரத்தில் ஸூர்யனிடத்தில் ப்ரார்த்தனை செய்ததின் நோக்கம் இந்த மந்திரத்தில் சொல்லப் படுகிறது.

पूषन्नेकर्षे यम सूर्य प्राजापत्य व्यूह रश्मीन्समूह ।

तेजो यत्ते रूपं कल्याणतमं तत्ते पश्यामि

योऽसावसौ पुरुष: सोऽहमस्मि ॥ 16

பூஷந்நேகர்ஷே யம ஸூர்ய ப்ராஜாபத்ய வ்யூஹ ர்ச்மீன்ஸமூஹ | தேஜோ யத்தே ரூபம் கல்யாணதமம் தத்தே ப்ச்யாமி யோऽஸாவஸோ புருஷ: ஸோऽஹமஸ்மி ||

இங்கும் இரண்டுவிதமான மனிதர்களும் வேறு விதமான ப்ரார்த்தனை செய்வதாக பொருள் செய்யப் படுகிறது.

உபாசகர் செய்யும் ப்ரார்த்தனை என்ன என்று பார்ப்போம்

இங்கு ஸூர்ய தேவன் பல விதமான பெயர்களால் புகழப் படுகிறார்.

पूषण् - பூஷண் - உலகை போஷிப்பவர் एकर्षे ஏகரிஷே - தனியாகச் செல்பவர் यम: யம - எல்லாவற்றையும் அடக்குகிறவர் அடக்கும் சக்தி உடையவர் सूर्य ஸூர்யன் - எல்லாவற்றையும் எடுப்பவர் ஜலம் முதலியவைகளை எடுக்கிறார் प्राजापत्य ப்ராஜபத்ய - ப்ராஜபதியின் புதல்வன் रश्मीन् ரஷ்மீன் - கிரணங்கள் व्यूह வ்யூஹ -- விலக்கிக்கொள்வீர்களாக तेज: தேஜ: உஷ்ணமான ஒளியை समूह ஸமூஹ - ஒடுக்கிக் கோள்வீர்களாக யது यत् ते யது தே - எந்த உங்களுடைய कल्याणतमं கல்யாண தமம் - மங்களகரமான रूपम् ரூபம் - தன்மையோ तत् தது - அதை ते தே - உங்களுடைய அனுக்ரஹத்தினால் पश्यामि - பார்க்கவிரும்புகிறேன்

योऽसावसौ = य: ய: - யார் (ப்ரம்ம லோகத்தில் இருக்கிற) असौ पुरुष: அஸெள புருஷ: - அந்த புருஷனோ असौ स: அஸெள ஸ - அவரே सोऽहमस्मि = स: अहं अस्मि இந்த நானாக இருக்கிறேன்.

இங்கு உபாசகர் ஸூர்ய தேவனை தனது அவருடைய மங்களகரமான ரூபத்தை பார்ப்பதற்காக அவரது உஷ்ணமான ஒளியான கிரணங்களை விலக்கி ஒடுக்கிக் கொண்டு அனுக்ரஹம் செய்ய ப்ரார்த்திக்கிறார். அப்படிச் சொல்லும் பொழுது தான் அஹங்க்ரக உபாசனை (தேவனையையே தானாக ஆவதாக பாவனை செய்யும் உபாசனை) செய்தவன் என்று தனது தகுதியை எடுத்துச் சொல்லுகிறார். இந்த அஹங்க்ரக உபாசனையில் தான் வேறு பாவனை செய்யும் தேவன் வேறு என்ற உணர்வோடு செய்யப் படும் உபாசனை. இதில் தானும் ப்ரம்மனும் ஒன்று என்ற உணர்வு கிடையாது. ஆக ஆத்ம ஞான அனுபவம் கிடையாது.

இதுவே முமுக்ஷு ப்ரார்த்தனை செய்யும் பொழுது कल्याणतमं கல்யாணம் - மோக்ஷத்தை அடைவதற்கு தடையாக இருக்கும் रश्मीन् ரஷ்மீன் - கவர்ச்சி கரமான பொருள்களை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறார். இங்கு அவர் தன்னைப் பற்றிச் சொல்லும் பொழுது य: ய: - யார் (ப்ரம்ம லோகத்தில் இருக்கிற) असौ पुरुष: அஸெள புருஷ: - அந்த ஞான ஸ்வரூபம் असौ स: அஸெள ஸ - அவரே सोऽहमस्मि = स: अहं अस्मि இந்த நானாக (ஞானத்தால்) இருக்கிறேன். முமுக்ஷு ஞானத்துடன் கூடிய ஸாதனையால் ஸூர்ய தேவனாகவே ஆகிவிட்டதாக எண்ணுகிறார். இங்கு அவர் அஹம் ப்ரம்மாஸ்மி (நானே ப்ரம்மம்) என்ற அறிவு கொண்டவராக இருக்கிறார். ஆனால் முன் சொன்ன உபாசகரோ தான் வேறு ஸூர்யன் வேறு என்று நினைத்துத் தன்னை ஸூர்யனாக பாவனை செய்து கொண்டு அஹங்க்ரஹ உபாசனை செய்கிறார். இதுவே இந்த இரண்டு மனிதர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

##########

# மந்திரம் 17.

## பிரார்த்தனை 3

वायुरनिलममृतमथेदं भस्मान्तँ सरीरम् ।
ॐ क्रतो स्मर कृतँ स्मर क्रतो स्मर कृतँ स्मर ॥ **17**.

வாயுரநிலமம்ருதமதேதம் பஸ்மாந்தம் ச்ரீரம் | ஓம் க்ரதோஸ்மர க்ருதம்ஸ்மர
க்ரதோஸ்மர க்ருதம்ஸ்மர || 17

वायु: வாயு - உடம்பிலுள்ள ப்ராணன் अमृतं अनिलम् அம்ருதம் அநிலம் - மரணமற்ற ஹிரண்ய கர்ப்பரை (அடையட்டும்) अथ: அத: - பிறகு इदम् இதம் - இந்த सरीरं சரீரம் - உடல் भस्मान्तं பஸ்மாந்தம் - சாம்பலாகட்டும் (அக்னியுடன் சேரட்டும்) ॐ क्रतो ஓம் க்ரதோ -

ஓ அக்னி தேவனே! स्मर ஸ்மர - (நான் செய்த நல்ல கார்யங்களை) நினைப்பீர்களாக ॐ क्रतो ஓம் க்ரதோ - ஓ அக்னி தேவனே! स्मर ஸ்மர - (நான் செய்த நல்ல கார்யங்களை) நினைப்பீர்களாக.

பொருள்

(என்னுடய) உடம்பிலுள்ள ப்ராணன் மரணமற்ற ஹிரண்ய கர்ப்பரை (அடையட்டும்) பிறகு இந்த உடல் சாம்பலாகட்டும் (அக்னியுடன் சேரட்டும்) ஓ அக்னி தேவனே! (நான் செய்த நல்ல கார்யங்களை) நினப்பீர்களாக. ஓ அக்னி தேவனே! (நான் செய்த நல்ல கார்யங்களை) நினப்பீர்களாக.

விளக்கம்

இங்கு ப்ரார்த்தனை செய்பவர் பல கர்மாக்களைச் செய்தவர், சாஸ்திரங்களில் சொல்லியபடி தர்மங்களை அனுஷ்டித்தவர், உபாசனை செய்தவர், (முந்திய மந்திரத்தில் சொல்லிய உயர்ந்த நிலையை எட்டாதவர், ஆத்ம ஞானத்தைப் பற்றிய சிந்தனை இல்லாதவர் என்று சொல்லப் படுகிறது.

ஒருவர் இறக்கும் பொழுது எதை விரும்புகிறாரோ அது கிடைக்கும் என்று நமது சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் பகவத் கீதையில் இதையே கூறுகிறார்.

यं यं वापि स्मरन्भावं त्यजत्यन्ते कलेवरम् । ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावित: ॥ Gita 8.6

யம் யம் வாபி ஸ்மரன்பாவம் த்யஜத்யன்தே கலேவரம் |
தம் தமேவைதி கௌந்தேய ஸ்தா தத்பாவபாவித: || Gita 8.6

இறுதியில் எதை எண்ணிக்கொண்டு, அது எதுவாக இருந்தாலும், உடலை விட்டாலும், ஓ குந்தியின் மைந்தனே! எப்பொழுதும் அந்த எண்ணத்திலேயே மூழ்கி இருந்ததால் அதையே அடைகிறார். Gita 8.6

எல்லா கர்மங்களும் அக்னி சாக்ஷியாகவே செய்யப் படுகின்றன. எனவே அக்னி தேவனுக்குச் செய்யும் ப்ரார்த்தனை. ஒருவர் இறந்த பிறகு மனது ஒன்றே ஆத்மாவுடன் சேர்ந்து அவரது கர்மங்களின் பல்ன்கள் கூடஸ்தூல சரீரமாகச் செல்கிறது. அவனுடன் கூட அவன் செய்த கர்மங்களின் பலன்களும் கூடவே செல்கின்றன. எனவே தான் செய்த நல்ல கார்யங்களையே நினைவு கொள்ளும் படி சொல்லப் படுகிறது. இரண்டு தடவை சொல்வது ப்ரார்த்தனையை உறுதிப் படுத்துவதற்காக.

ஒருவர் இறக்கும் பொழுது சம்சார பந்ததினால் பல வேறு கவலைகள் வந்து இந்த மாதிரியான ப்ரார்த்தனை செய்வது மிகவும் கடினம் ஆகக் கூடும். எனவே இந்த ப்ரார்த்தனையை தினமும் செய்தால் நாமே நமது மனதுக்கு நல்லதையே செய்ய வேண்டும் என்று கட்டளை இடுவது போல ஆகும். நாம் நல்லதையே செய்ய வேண்டும் என்ற தூண்டுதலுக்கு ஆளாவோம்.

இனி அடுத்த மந்திரத்திலும் அக்னி தேவனையையே ப்ரார்த்தனை செய்கிறார்.

#########

# மந்திரம் 18.

## பிரார்த்தனை 4.

अग्ने नय सुपथा राये अस्मान्विश्वानि देव वयुनानि विद्वान् ।
युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नमः उक्तिं विधे ॥ 18

அக்னே நய ஸுபதா ராயே அஸ்மான்விச்வானி தேவ வயுநானி வித்வான் |
யுயோத்யஸ்மஜ்ஜுஹுராணமேனோ பூயிஷ்டாம் தே நம: உக்திம் விதேம ||

अग्ने அக்னே - அக்னி தேவரே अस्मान् அஸ்மான் - எங்களை राये ராயே - கர்ம பலனின் போகத்திற்காக सुपथा ஸுபதா - நல்ல பாதையில் नय நய அழைத்துச் செல்வீர்களாக विश्वानि விச்வானி - (நாங்கள் செய்த) அனைத்து वयुनानि வயுநானி - கர்மங்களையும் உபாசனைகளையும் देव தேவ - தேவனே विद्वान् வித்வான் - (நீங்கள்) அறிந்துள்ளீர்கள் अस्मत् அஸ்மத் - எங்களிடமிருந்து जुहुराणं ஜுஹுராணம் - கீழான एनः ஏன: - பாபத்தை युयोधि யுயோதி - விலக்குவீர்களாக ते தே - உங்களுக்கு भूयिष्ठां பூயிஷ்டாம் - வெகுவான (பல முறை) नमः நம: - நமஸ்கார उक्तिं உக்திம் - வசனங்களை विधेम விதேம - சமர்ப்பிக்கிறோம்.

பொருள்

அக்னி தேவரே எங்களை கர்ம பலனின் போகத்திற்காக நல்ல பாதையில் அழைத்துச் செல்வீர்களாக. (நாங்கள் செய்த) அனைத்து கர்மங்களையும் உபாசனைகளையும், தேவனே, வித்வான் (நீங்கள்) அறிந்துள்ளீர்கள். எங்களிடமிருந்து கீழான பாபத்தை விலக்குவீர்களாக உங்களுக்கு வெகுவான (பல முறை) நமஸ்கார வசனங்களை சமர்ப்பிக்கிறோம்.

விளக்கம்

முந்திய மந்திரத்தில் செய்த கர்மங்களை நினைவு கூறும் படி ப்ரார்த்திக்கப் பட்டது. இங்கு தெளிவாக நல்ல கர்மங்களையே ஏடுத்துக் கொண்டு மேலான பாதையில் நடத்திச் செல்லுமாறு ப்ரார்த்தனை செய்கிறார். இங்கு மேலான பாதையாவது ப்ரம்ம லோகத்தில் சென்று அங்குள்ள போகங்களை அனுபவிக்க வேண்டும் என்பதே. இப்பொழுது (மரணத் தருவாயில்) இருக்கும் நிலையில் அவர் அக்னி தேவரின் புகழைப் பாடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாது என்றும் தெரிவிக்கிறார்.

இந்த மந்திரம் பன்மையில் (எங்கள், எங்களை) என்று சொல்லுகிறது.

இதனாலேயே ஒருவர் இறந்த பிறகு அவர் செய்த நல்ல காரியங்களையே பேசுவது நமது நாட்டின் வழக்கமாக இருக்கிறது.

############

# முடிவுரை

இந்த உபநிஷத் சாந்தி பாடத்திலேயே ப்ரம்ம்மும் ஆத்மாவும் ஒன்று என்று ஆரம்பித்தது. அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற கருத்தை சாந்தி பாடத்தில் சொல்லி ஈச்வரன் இந்த ப்ரபஞ்சத்தில் வ்யாபித்திருப்பதை எடுத்துக் காட்டியது. ப்ரபஞ்சத்தில் எதுவுமே உனதில்லை, ஆகையால் எதன் மேலும் ஆசை கொள்ளாமல் உன்னை இந்த சம்சார பந்தத்தில் இருந்து காப்பாற்றிக் கொள் என்று கூறியது. இந்த உலகத்தை தியாகம் செய்வது ஒரு வழி என்று சொல்லிய பிறகு அவ்வாறு தியாகம் செய்ய வாய்ப்பில்லாதவர்க்கு வேதங்களில் கூறிய கரமங்களை பலன் கருதாமல் ஈச்வரார்ப்பணம் என்று செய்வது இன்னொரு வழி என்று காண்பித்த்து. மனிதனாகப் பிறந்தவர்கள் நூறு வருஷங்கள் வாழ விரும்ப வேண்டும் என்று வலியுருத்துகிற உபநிஷத் அந்த நூறு வருஷங்களும் வேதங்களில் சொல்லியபடி பலன்களைக் கருதாது கர்மாக்களை செய்வதில் செலவிட வேண்டும் என்று ஏதுத்துக் காட்டுகிறது.

ஆத்மாவை அறியாதவர்களை ஆத்மாவை கொன்றவர்களுக்கு சமானம் என்று சொல்லி அவர்கள் மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுத்து அல்லல் படுவதை கன இருள் சூழ்ந்த உலகங்களுக்கு செல்வார்கள் என்று கூறி அஞ்ஞானிகளை நிந்தனை செய்தது. பிறகு ஆத்மாவின் தன்மையை பல விதமாக எடுத்துக்காட்டியது. ஆத்மா எவ்வாறு இந்த இந்திரியங்களுக்கு அப்பாற் பட்டது, ஆத்மா தான் இந்திரியங்களை இயக்குகிறது, எனவே இந்திரியங்களினால் ஆத்மாவை அடைய முடியாது என்று தெரிவிக்கப் பட்டது.

ஆத்மா ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரம் அற்றது, பாபமற்றது, சர்வ வ்யாபி, எங்கும் நிறைந்தது, ஸநாதனமானது என்றும் கூறப்பட்டது. பிறகு ஆத்மாவை உணர்ந்த ஞானியின் நோக்கு எப்படி எல்லாவற்றையும் தானாகவும், தானே எல்லாமாகவும் கருதும் சம தர்சன நோக்காக இருக்கும் என விளக்கி அதன் பலனாக ஞானியானவர் சோகத்தையும் மோகத்தையும் கடந்த நிலையை அடைகிறார் என்று விளக்கப் பட்டது.

இந்த உலகத்தில் ஆரம்பித்து மனிதப் பிறவிகளிலேயே உன்னதமான ஆத்ம ஞானி வரை நம்மை கொண்டு அறிமுகப் படுத்திய உபநிஷத் கீழே இறங்கி வந்து கர்மங்களினாலும் உபாசனைகளினால் ஏற்படும் பலன்களைப் பற்றி விசாரணை செய்கிறது. உபாசனைகளிலேயே சிறந்ததான ஹிரண்ய கர்ப்ப உபாசனை கூட இருண்ட உலகத்துக்கே கொண்டு செல்லும் ஏனென்றால் அந்த உபாசனையின் பலனுக்கும் ஒரு கால வரை உண்டு

என்று எடுத்துக் காட்டப் படுகிறது. அப்படிப் பட்ட உபாசனைகள், கர்மங்கள் செய்தவர்கள் உய்வதற்கு கடைசி காலத்தில் எப்படி ப்ரார்த்தனைகள் செய்யலாம் என்பதையும் கூறுகிறது.

உயிர் போகும் தருணத்தில் இருப்பவன் ப்ரம்ம லோகத்தை அடைவதற்கு உள்ள மார்க்கமானது தங்க மயமான சூர்யனது ஒளிக் கதிர்கள் மறைப்பதைக் கண்டு சூர்யனை நோக்கி தான் ஸத்யத்தை அனுஷ்டிப்பவன் ஆனதால் அந்த மறைப்பை நீக்கி அவருடைய மங்களகரமான உருவத்தைக் காண்பதற்கு ப்ரார்த்திக்கிறான். அடுத்து அக்னி தேவனிடம் தான் செய்த நல்ல கார்யங்களை மனதில் கொண்டு தன்னை மேலான வழியில் நடத்திச் செல்லுமாறு வேண்டுகிறான்.

இதே ப்ரார்த்தனைகளை வேறு விதமாக பார்த்தோமானால் உலகத்தில் உண்மையானது பணத்தின் சக்தியால் பல விதமாக மறைக்கப் பட்டிருக்கிறது. அந்த உண்மையை அறிவதற்கு கடவுளின் அனுக்ரஹம் வேண்டும். அத்துடன் நாம் தினசரி செய்யும் தவறுகளை மன்னித்து மேலும் தவறு செய்யாமல் இருப்பதற்காக இறைவன் அருள் செய்ய வேண்டும் என்ற ப்ரார்த்தனையாக இவைகளைக் கொள்ளலாம். இங்கு "சூர்யச்ச மாமன்யுஸ்ச... " என்ற சந்தியாவந்தன மந்திரத்தை கவனித்தோமானால் இந்த கருத்து இடம் பெருவது தெரியும்.

முதன் முதலில் இந்த உபநிஷத்தைப் படிப்பவர்களுக்கு பல விஷயங்கள் புரியாமல் இருக்கக் கூடும். இதில் உள்ள கருத்துக்கள் மறு படி மறு படி படித்து சிந்தித்து கற்றறிந்தவர்களிடம் கலந்து ஆலோசித்து தெரிந்து கொள்ள வேண்டியது ஆகும். இங்கு சொல்லப் பட்டவை ஒரு பரிச்சயமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே கூறியபடி ஈசவாஸ்ய உபநிஷத்தின் விளக்கம் ப்ருஹதாரண்ய உபநிஷத் ஆகும். அதைப் படித்து புரிந்து கொள்வதற்கு கண்டிப்பாக ஒரு நல்ல குருவின் துணை அவசியம். இதைப் படித்ததனால் மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுமானால் இந்த முயற்சி பலனுடையதாகும்.

##############